உறவு என்றொரு சொல் இருந்தால்...



திருவரசு புத்தக நிலையம்

பெ. நாயகி

உறவு என்றொரு சொல் இருந்தால்...

பெ. நாயகி

திருமகள் புத்தக நிலையம்

13, தீனதயாளு தெரு
தியாகராய நகர், சென்னை - 600 017

முதற் பதிப்பு : ஜூன் 2001

உரிமை : ஆசிரியருக்கு

விலை : ரூ. 40.00

Title : URAVU ENDRARU SOLL IRUNTHAL

Author : P. NAYAGI

Language : Tamil

Subject : Short Stories

Edition : First Edition, June 2001

Pages : V + 195 = 200

Published by : Thiruvarasu Puthaka Nilayam
13, Deenadayalu Street
Thyagaraya Nagar, Chennai - 600 017

Price : **Rs. 40.00**

Typeset at : Saguram Graphics, Chennai - 24

Printed at : Ragavendra Agencies, Chennai-600 005 ☎ 8588471, 8548891

முன்னுரை

ஒரு சராசரித் தமிழ்த் தகப்பன் வயது வந்த தன் மகளுக்கும், ஒரு சகோதரி தன் சகோதரனுக்கும் கூச்சமின்றி வாசித்துக் காட்டும் வண்ணமாகவும், ஒரே வாசிப்பில் புரியும் வண்ணமாகவும் இருக்க வேண்டும் என்பவை மட்டுமே என் எழுத்துக்கு நான் விதித்துக் கொண்ட அளவுகோல் ஆகும்.

அவற்றை நான் மீறவில்லை என்பதை இத் தொகுதியில் உள்ள சிறுகதைகளும் நிரூபிக்கும் என்று நம்புகிறேன்.

என் படைப்புகளை, என் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர்களாகிய திருமதி செல்வி நடராஜன், மஞ்சுளா ரமேஷ் (ஆசிரியர் - மங்கையர் மலர்), சீதாரவி (ஆசிரியர் - கல்கி), லக்ஷ்மி சுந்தரமூர்த்தி, கவிதா நெப்போலியன், லதா எழிலரசு, பொற்செல்வி சடகோபன், இந்திரா ராஜேந்திரன், சாரதா விநாயகம், மோகனா எழிலரசன் ஆகியோர் தொடர்ந்து வாசிக்கிறார்கள் என்கிற விஷயமே என் எழுத்தின் கண்ணியத்தைக் கண்காணித்து வருகிறது என்பதையும் நன்றியுடன் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

இச் சிறுகதைகளை வெளியிட்டு எனக்கு ஊக்க மளித்த தேவி, தினமணிக்கதிர், கல்கி, குமுதம், பாக்யா,

குங்குமம், ஆனந்த விகடன் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவுக்கு என் மனமார்ந்த நன்றி.

திருவரசு புத்தக நிலையத்தின் வெளியீடாக இதனை நூல் வடிவில் கொணர்ந்துள்ள மரியாதைக்குரிய வானதி திருநாவுக்கரசு ஐயா அவர்களுக்கும், திரு. ராமு அவர் களுக்கும் நான் என்றென்றும் கடமைப் பட்டிருக்கிறேன்.

வாசகர்களின் ஆதரவு தானே எழுத்தாளனுக்கு உந்து சக்தி? வெறும் புகழ்ச்சியாக இல்லாமல் வீரிய விமரிசனங்களால் என்னை வழி நடத்தும் அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் நன்றி.

10, வயல்கரை தெரு,
காரைக்கால் - 609602
23.03.2001

பெ. நாயகி

உள்ளே...

1.	இருக்கை	1
2.	பூவும் கண்கள் மூடும்	12
3.	துஷ்பிரயோகம்	24
4.	வாழ்த்து	33
5.	ஆண் ஜாதி	41
6.	குழிப்பந்து	49
7.	புகுந்த வீட்டில் என்ன செய்வார்கள்?	59
8.	பலி	68
9.	அக்னி	76
10.	இரண்டாம் பாகம்	84
11.	நிரை நேர் நேர்	93
12.	மூலதனம்	101
13.	பாரம்	109
14.	கடைசி வைக்கோல் துணுக்கு	121
15.	உறவு என்றொரு சொல் இருந்தால்...	133
16.	நாய் வால்கள்	143
17.	அப்பாவின் தொடுப்பு	152
18.	ஒரு மரத்துப் பறவைகள்	161
19.	சாவு என்ற சங்கடம்	169
20.	ஓடிப் போனவள்	176
21.	கடைசி பஸ்	186

1. இருக்கை

அவர் கிளம்பிப் போய் அரைமணி நேரம் கழித்துத் தொலைபேசி அழைத்தது.

"வேலம்மா பேசறேம்மா. நல்லாயிருக்கீங்களா?" என்றது மறுமுனையின் குரல் உற்சாகமாக.

"ஹே" என்றேன். உற்சாகம் என்னையும் தொற்றிக் கொண்டது. "எங்கிருந்து பேசறே? எங்கோ வெளிநாடு போயிருந்தியே?"

"வந்திட்டேம்மா. உங்களைப் பார்க்கணும் போலிருக்கு எப்போ வரட்டும்மா?"

"எப்போ வேணா வா. இங்கே நீ வர்றதுக்குக் கேட்டுட்டுத்தான் வரணுமா?" என்று உரிமையோடு கோபித்தேன்.

மறுமுனையின் சங்கோஜச் சிரிப்பு இங்கே தெரிந்தது.

"வர்றேம்மா." தொலைபேசியை வைத்து விட்டு நிமிர்ந்தேன்.

எதிரே கண்ணாடியில் தெரிந்த என் முகம் மகிழ்ச்சியில் விரிந்திருந்தது. வேலம்மாவுடன் பேசிய போது வெளிப் பட்டிருந்த புன்னகை இன்னும் கூட மீதமிருந்தது.

அப்படியே உட்கார்ந்திருந்தேன்.

வேலம்மா நல்லவள். அதனால்தான் இப்படி ஒரு வாழ்வு அவளுக்கு அமைந்திருக்கிறது என்று நினைத்துக் கொண்டேன்.

ஏழெட்டு மாதங்களுக்கு முன்புவரை வேலம்மா எங்கள் வீட்டு வேலைக்காரி.

இளவயது விதவை, ஒரு மகனுக்குத் தாய் என்கிற பரிதாபப் பத்திரங்களுடன் அவருடைய நண்பர் ஒருவர் கொண்டு வந்து சேர்த்தார் பல வருடங்களுக்கு முன்பு.

ஆரம்ப காலங்களில் அதிகம் பேச மாட்டாள். பொறுமை யாக எல்லா வேலைகளையும் பார்ப்பாள். குறிப்பாக விவேக் பண்ணுகிற அட்டகாசங்களை, அவற்றின் விளைவுகளைப் பொறுமையாக ஏற்பாள்.

பெரிய வீடு. தினமும் அதை ஈரத்துணி போட்டுத் துடைக்க வேண்டும் என்பது என் கட்டளை. வேலம்மா அப்போதுதான் ஓர் அறையைத் துடைத்து விட்டு வந்து அடுத்த அறையில் இருப்பாள். விவேக் அந்த அறையில் எதையாவது கொட்டி வைப்பான். முகம் சுளிக்காமல் அங்கே போய் அதைச் சரி செய்து விட்டு வருவாள். என் அடிக்குப்

பயந்து விவேக் மண் காலுடன் அவள் ஈரமாக்கியிருக்கும் தரைகளில் தடம் பதித்து விட்டு விரைவான். அதையும் பொறுமையாகத் துடைப்பாள்.

அப்போது விவேக் ஏழெட்டு வயதுப் பையன். அடுத்த பத்து வருஷங்கள் வரை அவனுடைய சேட்டைகள் அளவே இல்லாமல் இருந்தன. நான் பலமுறை எரிச்சலடைந்திருக்கி றேன். வேலம்மா ஒரு முறைகூடச் சலித்துக் கொண்டது கிடையாது. நிச்சயம் அது நடிப்பு கிடையாது. வருடக் கணக்காக நடிப்பது சாத்தியமில்லாத ஒன்று.

"என்ன வேலம்மா, இவன் இப்படி இருக்கிறான்? என்ன செய்வதென்றே தெரியவில்லை" என்று புலம்புவேன்.

"ஆம்பிளைப் பசங்கன்னா அப்படித்தாம்மா" என்பாள்.

"உனக்கும் ஒரு பையன் இருக்கானே - கண்ணன், அவன் என்ன இப்படியா இருக்கான்?"

"எல்லா விரலும் ஒரே மாதிரியாம்மா இருக்கு?" என்று அதற்கும் ஒரு பதில் வைத்திருப்பாள் வேலம்மா.

கண்ணன் நகராட்சிப் பள்ளியில் படித்தான். நன்றாகப் படிக்கிறான் என்று அடிக்கடிச் சொல்லுவாள். சின்ன வயது களில் அடிக்கடி அம்மாவுடன் வருவான். ஐந்தாம் வகுப்பு கடந்த பிறகு வருவதையே அடியோடு நிறுத்திக் கொண்டான். அதன்பின் அவனைப் பற்றிய செய்திகள் எல்லாமே வேலம்மாவின் வார்த்தைகளின் வடிவில்தான். பலமுறை பாராட்டுவதற்காகக் கூப்பிட்டனுப்பினால் கூட வருவதில்லை. கூச்சம் என்று நினைத்தேன். அவர்தான் ஒரு முறை

சொன்னார், "விவரம் அறிந்த எந்தப் பையனுக்கும் தன் அம்மா இன்னொருவர் வீட்டு வேலைகளைப் பார்ப்பதைக் காணும் பக்குவம் இருக்காது." அதன்பின் அவனை அழைப்பதே இல்லை.

வேலம்மாவைப் பொறுத்தவரை அவளை வேலைக் காரியாக நான் உணர்ந்ததே கிடையாது. அப்படி அவள் நடந்து கொண்டதும் இல்லை. தன் பொறுப்பில் விடப்பட்ட கோயிலை நிஜமான பக்தி கொண்ட பூசாரி எந்த அளவு பயபக்தியுடன் பேணுவாரோ அப்படிப் பேணுவாள் இந்த வீட்டை.

ஏதாவது பேசிக்கொண்டிருக்கும் ஆசையில், "அடி போதும் வேலம்மா. இதை நாளைக்குப் பார்த்துக்கலாம். இப்படி வந்து உட்கார்" என்று நான் அழைத்தால்கூட, "நீங்க நாற்காலியை இப்படிப் போட்டு உட்கார்ந்துகிட்டு பேசிட்டே இருங்க. நான் பதில் சொல்லிட்டே இதையும் செஞ்சிடறேன்" என்பாள் உரிமையுடன்.

அவளுடைய நேர்மைக்காகத்தான் அவள் மகன் நன்றாகப் படிக்கிறான். அவளுக்கு அவனாலேயே நல்ல எதிர்காலம் அமையவேண்டும் என்று கடவுளிடம் அவ்வப் போது வேண்டிக் கொள்வேன்.

எங்களுடைய நெருக்கம் விவேக் படிப்பு முடிந்து அமெரிக்கா போகிறேன் என்று கிளம்பியபோது இன்னும் அதிகரித்தது.

விவேக்கிடம் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தேன். "ஒரே மகன்டா. நீயும் போய்ட்டா நான் இங்கே உயிரோட

இருக்கிறதிலயே அர்த்தம் இல்லையேடா. உன் படிப்புக்கு இங்கே வேலை கிடைக்காமலோ அல்லது வசதி தேட வேண்டிய கட்டாயத்திலோ நீ இல்லையே. உங்கப்பா சம்பாத்தியம் இருக்கு. இங்கேயே கண்கண்ட தூரத்துக்குள்ள இரேண்டா..”

“போம்மா... எனக்கு அமெரிக்கா போகணும்ங்கறதுதான் வாழ்க்கைல ஒரே எய்ம். போயே தீருவேன்.”

அவர் எனக்கு ஆறுதல் சொன்னார். என்னிடம் காட்டா விட்டாலும் ஒரே மகனைப் பிரிவதில் அவருக்கும் ஏக்கம் இருப்பது தெரிந்தது. என்ன செய்வது?

விவேக் விட்டால் போதும் என்பதுபோல் பறந்து விட்டான். ஆரம்பகாலங்களில் அடிக்கடி போன், கடிதம்... அப்புறம் எல்லாமே கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து விட்டது.

அப்புறம் வேலம்மாதான் ஒரே துணை என்றாகி இருந்தது.

கண்ணன், பாலிடெக்னிக்கில் முதல் மதிப்பெண் பெற்றுத் தேறினான். ஒரு வருடம் வரை அங்கங்கே வேலை பார்க்கிறான் என்று வேலம்மா சொல்லுவாள்.

திடீரென்று வேலம்மா முகவாட்டத்துடன் வந்தாள்.

“கண்ணன் துபாய் போகப் போறானாம்மா. அவன் முதலாளியின் நண்பர் ஒருத்தர் அங்கே பணக்காரராம். அவருடைய ஃபாக்டரிக்கு கண்ணன் மாதிரியே நம்பிக்கை யான, நன்றாக வேலை பார்க்கிற ஆள் வேணும்னு

கேட்டாராம். இவனுடைய முதலாளி ஆசீர்வாதம் செஞ்சு அனுப்பி விட்டாராம். என்கிட்ட முதலிலேயே சொன்னா வேணாம்னு சொல்வேன்ங்கறதால எல்லா ஏற்பாட்டையும் முடிச்சிட்டு கடைசியா சொல்றான். கேட்டால் எனக்காகத்தான் போறானாம். அம்மாவை நல்லா வச்சுப் பார்க்கணுமாம். எனக்கு என்ன குறை?"

அவளுடைய துக்கத்தை என்னால் உணர முடிந்தது. இது ஒரு வித்தியாசமான உணர்வு. என் மகன் வெளிநாட்டில் இருக்கிறான் என்று சொல்லும்போது எதிரே கேட்பவர் களுடைய ரியாக்ஷன் தருகின்ற கர்வம் இருக்கிறதே அதற்காக என்ன விலை வேண்டுமானாலும் தரலாமே என்றுதான் தோன்றும். ஆனால் அது கணநேர விஷயம் தானே? அந்தக் கர்வம் எவ்வளவு நேரம் நீடிக்கும்? கேட்ட வருக்கு ஆச்சர்யப்பட வேறு விஷயம் கிடைத்த மாத்திரத்தில் தாவிவிடப் போகிறார். அப்புறம்? நிஜம் என்னவோ பிரிவு என்கிற நிரந்தரம்தானே? மகன் பிரிந்து விட்டான் என்கிற ஏக்கத்துக்கும், மேலான இடத்துக்குத்தானே போயிருக்கிறான் என்கிற ஆறுதல் சமரசத்துக்கும் இடையே ஊசலாடிய படியேதானே மீதி வாழ்க்கையின் உணர்வுப் பயணம்?

எனக்காவது அவர் இருக்கிறார். எல்லாவற்றையும் கொட்டிக் கொள்ள, ஏந்திக் கொள்ள என்று. வேலம்மா பாவம். அவள் மீதான என்னுடைய பிடிப்பு இன்னும் இறுகியது.

ஒரே வருஷத்தில் வேலம்மாவை வேலையை விட்டு விடும்படி கண்ணன் உறுதிபடச் சொல்லிவிட்டான்.

வயதின் முதிர்ச்சியைவிட அதிகமாக அனுபவக் கஷ்டங்களின் அயர்ச்சியால் அவளும் தளர்ந்திருந்தாள்.

எனக்கு அவளை விட மனமில்லாவிட்டாலும் தான் சம்பாதித்துச் செட்டிலான கணமே தன் அம்மா உடல் வருந்தி உழைப்பதை விட வேண்டும் என்கிற அவள் மகனின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவளை ரிலீவ் செய்தேன், அடிக்கடி வந்து போய் இருக்க வேண்டும் என்கிற அன்புக் கட்டளையுடன்.

முதலில் இரண்டு நாட்களுக்கொரு முறை. அப்புறம் வாரம் ஒரு முறை என்று அவளுடைய வரவு குறையத் தொடங்கியது. முகத்திலும், உடம்பிலும் ஒரு தெளிவும், மலர்ச்சியும் வந்திருந்தன. எப்போது வந்தாலும் உள்ளத்தள வில் மட்டும் அதே பழைய வேலம்மாவாக இருந்தாள் என்பது எனக்கு ஆறுதல் அளித்த விஷயம்.

கடைசியாக அவளை மூன்று மாதங்களுக்கு முன் பார்த்தது. கடந்த முறை வந்தபோது, 'அவளுடைய மகன் பிடிவாதமாக அவளையும் வெளிநாட்டுக்குக் கூப்பிடுகிறான்' என்றாள். "நான் என்னம்மா செய்யப் போகிறேன் அங்கே போய்? புரிந்து கொள்ளவே மாட்டேங்கறான்" என்று பெருமையும் சலிப்புமாகச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

இப்போது போய்விட்டு வந்திருக்கிறாள் போலும்.

பெருமூச்சொன்று எழுந்தது என்னிடமிருந்து.

அவள் வந்தால் அவளை எங்கே உட்கார வைப்பது என்றொரு கேள்வி எழுந்தது அடி மனத்தில்.

கடந்த முறை அவள் வந்தபோது நான் உள் அறையில் குளித்து முடித்துத் துணிமாற்றிக் கொண்டிருந்தேன். "இரு வேலம்மா. ஒரு நிமிடத்தில் வந்திர்றேன்" என்று அங்கிருந்தே குரல் கொடுத்தேன்.

அறையிலிருந்து நான் வெளிப்பட்ட போது அவள் ஹாலில் சோபா பக்கத்தில் தரையில் உட்கார்ந்திருந்தாள்.

"சும்மா சோபாவில் உட்காரு வேலம்மா" என்று மனப் பூர்வமாகவே சொன்னேன்.

பிடிவாதமாக மறுத்து விட்டாள்.

"நான் உங்களுக்குப் பழைய வேலம்மாதாம்மா" என்றாள். பழைய பணிவு, பழைய அக்கறையுடனேயே பேசினாள்.

"காபி சாப்பிடறியா வேலம்மா?" என்று நான் அடுக்க களைக்கு நடந்தபோது பின்னாலேயே வந்தாள். அங்கே நான் பால் சுட வைத்துக் கொண்டிருக்கையில் ஸிங்க்கில் இருந்த பாத்திரங்களைப் பார்த்து விட்டு, "ஏம்மா இன்னிக்கு வேலை யாள் வரலியா?" என்ற கேட்டபடி வெகு இயல்பாக அவற்றைத் தேய்க்க ஆரம்பித்தாள்.

"ஏய் வேலம்மா, விடு. அதெல்லாம் நான் பார்த்துக்க றேன்" என்று பதறியபோது "நீங்க பேசாம இருங்கம்மா. இதையெல்லாம் நான் செய்யாம யார் செய்வா?" என்றாள். என் மறுப்புகளை அவள் கொஞ்சமும் சட்டை செய்ய வில்லை.

"இப்போ யாரும்மா வேலைக்கு இருக்கா?"

"நீ இருந்த இடத்தில் யாரையும் வைத்துப் பார்க்க மனசில்ல வேலம்மா" என்றேன் காபித் தம்ளரை நீட்டிய படியே.

"சும்மா சுற்று வேலைக்கும், வீடு துடைக்கவும் மட்டும் ஒருத்தி வந்து போறா. பத்து நாள் வந்தா நாலு நாள் டிமிக்கி. இன்னிக்கு வரலை. ஏதோ ஓடிட்டிருக்கு" என்றேன்.

மீண்டும் ஹாலுக்கு வந்தோம். நான் சோபாவில் உட்கார அவள் வழக்கமாக உட்காரும் தரையில் தள்ளி உட்கார்ந்தாள். மணிக்கணக்காகப் பேசிக் கொண்டிருந்து விட்டுப் போனாள்.

இத்தனை முறை வந்த வேலம்மாவுக்கும் இப்போது வரப்போகும் வேலம்மாவுக்கும் வித்தியாசம் இருக்கிறதே.

இது ஃபாரின் ரிடர்ன் வேலம்மா.

இன்றைய தேதிக்கு நான் சென்னையைக் கூடத் தாண்டியதில்லை. இவள் மகன் இவளை எங்கெங்கோ கூட்டிச் சென்று காட்டிவிட்டான்.

வேலம்மாவின் நடை உடை பாவனைகளில் மாற்றம் இருக்குமோ? பேச்சில் கொஞ்சமாவது ஆங்கில வார்த்தைகள் கலந்து பேச ஆரம்பித்திருப்பாளோ? வேண்டுமென்றே பேசுகிறாள் என்றில்லை. சும்மா ஒரு மாசம் வடக்கே போய் வருபவர்கள் கூட மூச்சுக்கு முப்பது தடவை 'அச்சா அச்சா' என்கிறார்களே. இவள் மாசக்கணக்கில் வெளிநாட்டில் இருந்துவிட்டு வருகிறாள். பேச்சு கூடவா மாறாமல் இருக்கும்?

இந்த முறையாவது அவளை வரவேற்கையில் சோபாவில் நானே வலிய உட்கார வைத்துப் பேச வேண்டும்.

அவள் மறுத்தாலும் கட்டாயப்படுத்தி அதில் உட்காரவைத்து சம அந்தஸ்து கொடுத்து கௌரவிக்கும் ஆசை நிச்சயமாய் அடி மனத்தில் இருக்கிறது.

அதற்கெல்லாம் சந்தர்ப்பம் தராமல் அவளாகவே நேராக, "எப்படிம்மா இருக்கீங்க?" என்று கேட்டபடியே சாதாரணமாக சோபாவில் உட்கார்ந்து கொண்டாள் என்றால்?

உட்கார்ந்தால் என்னவாம்? என்ற கேள்விக்கு மனதார பதில் கிடைக்கவில்லை. அவள் அதிலே உட்காரக் கூடாது என்கிற விழைவு அடி மனத்தில் இருக்கிறதோ? அப்படி ஓர் எண்ணம் இருந்தால் நான் எவ்வளவு மட்டமான பிறவி? சேச்சே!

அவள் ஆசுவாசமாக சோபாவில் கால் மீது கால் போட்டபடி அமர்ந்திருக்க நான் எழுந்து அடுக்களைக்குப் போய் காப்பிபோட்டு எடுத்து வரும் வரை, அவள் என் பின்னே நடந்து வராமல் இருந்து விட்டால்...?

அதன் பின்னான நிமிடங்களில் என்னால் அவளுடன் சகஜமாகப் பேச இயலுமா?

இல்லை. வேலம்மா அவ்வளவு மாறியிருக்க மாட்டாள்.

வேலம்மா வரப்போகிறாள் என்பதில் எழுந்திருந்த என் உற்சாகம் கொஞ்சம் குறைந்தாற்போல் தோன்றியது.

போனமுறை இந்தக் குழப்பங்களுக்கெல்லாம் இடம் இல்லாதபடி நான் உள் அறையில் உடை மாற்றிக் கொண்டிருந்து விட்டேன். திரும்பி வரும்போதே அவள் தரையில் உட்கார்ந்திருந்தாள்.

அழைப்பு மணி ஒலித்தது.

வாசலில் வாட்ச்மேன் கேட் திறப்பதும் என்னைப் பற்றி விசாரிக்கும் வேலம்மாவின் குரலும் கேட்டன.

துள்ளியெழுந்து உள் அறைக்குள் போய்க் கதவு சார்த்திக் கொண்டேன்.

"அம்மா" என்ற வேலம்மாவின் குரல் ஹாலில் கேட்க, "ஒரு நிமிடம் வேலம்மா, இதோ வந்திட்டேன்..." என்று ஒலி எழுப்பினேன். மூடியிருந்த கதவின் மீது சாய்ந்து மூச்சு விட்டபடியே மூன்று நிமிடங்களைக் கடத்தினேன்.

அவள் தரையில் உட்கார்ந்திருந்தால் ரொம்ப நல்லது. குறைந்த பட்சம் நின்று கொண்டாவது இருக்க வேண்டும். கடவுளே! என்னைச் சோதிக்காதே என்று மனத்துக்குள் வேண்டியபடியே மெல்ல மெல்லக் கதவைத் திறந்து வெளிப் பட்டேன்.

✲

2. பூவும் கண்கள் மூடும்

ரயில் தாளகதியோடு ஓடிக்கொண்டிருந்தது.

கிட்டத்தட்ட வைதேகி தவிர மற்ற எல்லோருமே ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்கள்.

அவளுக்கு மட்டும் உறக்கம் வரவில்லை. தலைக்கு அருகில் வைத்திருந்த பைக்குள் இருந்து ஜல்ஜல் என்றொரு மெல்லிய ஒலி வந்து கொண்டிருப்பது போன்ற பிரமை அவளை உறங்கவொட்டாமல் தொந்தரவு செய்தது.

"அம்மா! என் மெடல்களை எல்லாம் இவர்களுக்குக் காட்டு."

அவள் இத்தனை வருடங்களில் பார்த்திராத ஒரு புதிய அலட்சியத்துடன் வந்த ஜீவாவின் ஏவல் தொனி ஒலித்த குரல்.

"அதை ஊரிலேயே வைத்துவிட்டு வந்திட்டேன்னு நினைக்கிறேன் ஜீவா" என்று எப்படி ஒரு பொய்யைத் தடங்க லின்றிச் சொல்ல முடிந்தது என்று இன்னும் அவளுக்குப் புரியவில்லை.

"இல்லைம்மா. நீ எடுத்து வைத்ததை நான் பார்த்தேன்."

வைதேகியைச் சுற்றி நின்றவவர்கள் அவளைக் குற்றவாளி போலாக்கிப் பார்த்த காட்சி அவளைக் கூனிக் குறுக வைத்தது. ஜீவாவின் முகத்தில் ஏற்பட்டிருந்த புதிய கல்யாணக் களையின் பூரிப்பு அவனுக்கொரு பரபரப்பைத்

தந்திருந்தது. புது மனைவி, மாமனார், மாமியார், அவர் வீட்டார் முன்னிலையில் தன் பெருமைகள் கடை வைக்கப் படாமல் அம்மாவால் தடைபடுகிறதே என்கிற எரிச்சல் அவன் குரலில் வழிந்தது.

"என்னம்மா நீ... உனக்கு வயசாயிடுச்சுன்னு அப்பப்போ ப்ரூவ் பண்ணிட்டே இருக்கற" என்கிற அவனுடைய வார்த்தைகளுக்கு எல்லோரும் சிரித்துவிட்டுக் கலைய, வைதேகி தனித்து நின்றாள்.

கடந்த பத்து நாள்களாக அவள் முற்றிலும் புதிய மகனைப் பார்க்கின்றாள்.

'அம்மா... அம்மா' என்று பத்து வயதிலிருந்து அவள் கால்களை மட்டுமே சுற்றிக் கொண்டு வளர்ந்த, கூச்ச சுபாவத்தின் மொத்த உருவமான ஜீவா இல்லை இப்போது. இந்த மாற்றம் கூட மெதுவாகக் காலத்தின் வளர்ச்சியுடன் பல்வேறு கட்டங்களாக ஏற்பட்டிருக்குமானால் ஒருவேளை அவளைப் பாதிக்காமல் இருந்திருக்கலாம்.

இது திடீர் மாற்றம்.

ஒரே ஒருமுறை மட்டும் முன் அறிவிப்புப் போல் சிறு முன்னோட்டம் காட்டிவிட்டு அதற்கு அதிக முக்கியத்துவம் தர நினைத்திராத கணத்தில் ஏற்பட்ட திடீர் பூகம்பம் மாதிரி இருந்தது இந்த மாற்றம்.

வைதேகி மெல்ல எழுந்தாள். இரவு விளக்கின் ஒளியில் தன் பையைத் திறந்து அந்தச் சிறிய பையை வெளியே எடுத்து ஜிப் பிரித்து மெல்லக் குலுக்கிப் பார்த்தாள்.

மெடல்களின் கலகலவென்ற சப்தம்.

கூடவே கண்களில் பெருகிய நீர்.

அவள் இப்படி மெடல்களைச் சேர்த்துச் சேர்த்து வைப்பதையும் அவ்வப்போது வெளியே எடுத்துப் பார்த்துச் சுத்தம் செய்து மகிழ்வதையும் பலமுறை கேலி செய்திருக்கி றான் ஜீவா.

"போடா, இது அவ்வளவையும் நாளை உன் பெண்டாட்டி கையில் ஒப்படைத்து, இந்தா தாயி இதுதான் உன் புருஷன்னு ஒப்படைக்க வேண்டிய கடமை இருக்கே" என்பாள்.

அவன் சிரித்தபடியே போய்விடுவான்.

இவனுக்கென்ன தெரியும் இந்த மாதிரியான சந்தோஷங் களின் தொகுப்பு தருகின்ற ஆன்மாவின் அதிர்வுபற்றி. தான் எத்தனை மெடல்கள் வென்றிருக்கிறோம் என்கிற விவரம் கூடத் தெரியாது. ஆம்பளைப் பயல்களே இப்படித்தான். சம்பாதிக்கத் தெரியுமே ஒழிய சந்தோஷப்படத் தெரியாத வர்கள். இவன் பெண்டாட்டி வரட்டும் என்று எண்ணிக் கொள்வாள்.

இந்த மெடல்கள் ஒவ்வொன்றின் பின்கதையும் அவளுக்குத் தலைபாடம். சும்மாவா சேர்ந்தவை இவை? ஜீவா ஒவ்வொன்றாக வென்று வந்து அவளிடம் தந்து விட்டு மறந்து போக, பத்திரப்படுத்திச் சேர்த்தவை. நடுநடுவே எடுத்துப் பார்த்து ஆசையுடனும் பாசத்துடனும் தடவிப் பார்த்து, நடந்ததை நினைவு கூர்ந்து, ஞாபகங்களைப் புதுப்பித்துக் கொண்டு மீண்டும் பத்திரப்படுத்தியவை.

இந்த மெடல் பள்ளியிறுதித் தேர்வில் அறிவியல் பாடத்தில் மாநிலத்தில் முதல் மதிப்பெண் பெற்றதற்குக் கிடைத்தது. அன்று தேர்வு முடிந்து வந்த கையோடு ஓவென்று அழுதான் ஜீவா. ஒரு படத்தின் பாகங்கள் குறிக்கையில் ஒன்றை மறந்து விட்டானாம். மார்க் குறைப்பார்களே என்று அழுகை. வைதேகி அவனைத் தேற்றி, அந்தத் தவறு திருத்துவோர் கண்களில் படாமல் இருக்க விரதம் இருந்து, ரிஸல்ட் வந்ததும் அவன் முதல் மதிப்பெண் பெற்றதும் அவளுடைய கேலியும் அவனுடைய அசட்டுச் சிரிப்பும் இந்த மெடலுக்குள் பொதிந்துள்ளன.

வருடாவருடம் பேச்சுப் போட்டியில் அவன்தான் மெடல் வாங்குவான். தலைப்புக்கு ஏற்ற பேச்சை எழுதி மனப்பாடம் செய்து அவளிடம் பேசிக் காட்டுவான். இயற்கையாகவே கணீரென்ற குரல் இருந்தாலும் அதீத கூச்ச சுபாவம் உள்ளவன் ஜீவா. வைதேகி தான் மெல்ல மெல்லத் தேற்றினாள். நேராகப் பார். விரல்களைப் பின்னாதே. சட்டைப் பட்டனுடன் விளையாடாதே. ஒரே குரலில் பேசாதே என்று எவ்வளவு செப்பனிட்டு அவனைப் பேச்சாளன் ஆக்கி யிருந்தாள்!

வீட்டுக்கு யார் வந்தாலும் வைதேகி அந்த மெடல்கள் வைத்திருக்கும் பையை வெளியே எடுப்பாள். அதைத் திறக்கும்போதே ஏற்படும் கலகலவென்ற சப்தம் அவளுக்கு மிகவும் பிடிக்கும்.

"போச்சு! யாராவது வந்துவிடக் கூடாது. அவங்களை போரடிக்க வைக்கலைன்னா உனக்குத் தூக்கம் வராதே."

"போடா. அவங்க எவ்வளவு ஆர்வமாப் பார்க்கறாங்க" என்பாள். அவர்களிடம் ஜீவாவின் பள்ளி நாள் முதலான திறமைகளைப் பட்டியலிட்டுப் பூரிப்பாள்.

இப்படி ஒருமுறை வீட்டுக்கு வந்தவன்தான் புதிதாக ஜீவாவுக்கு அலுவல் தொடர்பாகப் பரிச்சயமாகியிருந்த மனோஜ்.

"அம்மா! இவர் நிறையத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரிப்பவர்" என்று அறிமுகப்படுத்தினான் ஜீவா.

வைதேகி போட்டுத் தந்த தரமான காபியில் மயங்கி மனோஜ் மிகவும் அன்னியோன்ய நட்புடன் அடிக்கடி வர ஆரம்பித்தான்.

ஒருமுறை வைதேகி அவனிடம் ஜீவாவைப் பற்றிச் சொல்லுகையில், "ஏம்பா! சொல்றேன்னு தப்பா நினைச்சுக் காதே. உங்க டி.வி.ல தமிழே தெரியாதவங்க, தெளிவான உச்சரிப்பு இல்லாதவங்களை எல்லாம் வைத்து நிகழ்ச்சி தயாரிக்கிறீங்களே, ஜீவா மாதிரி ஆள்களுக்கு வாய்ப்புத் தந்தால் என்ன?" என்று கூற, மனோஜுக்குப் புதிய சிந்தனை பிறந்தது.

ஜீவா வழக்கமான கூச்சத்துடன் முடியாது என்றான். அவனைச் சம்மதிக்க வைக்கும் பொறுப்பை அவள் ஏற்க, மனோஜ் ஒரு நல்ல சந்தர்ப்பத்திற்குக் காத்திருந்தான்.

உலகப் பேரழகியாகத் தமிழ்ப் பெண் ஒருத்தி தேர்ந் தெடுக்கப்பட அவளைச் சிறப்புப் பேட்டி எடுக்கும் நிகழ்ச்சிப் பொறுப்பு மனோஜுக்குக் கிடைத்தது.

புதிய ஓர் ஆண்முகம் வித்தியாசமாகப் பேட்டி கண்டால் நிகழ்ச்சி எடுபடும் என்று சிந்தித்தான் அவன்.

ஜீவாதான் அதைச் செய்வது என்று முடிவானது.

அதிக டென்ஷனில் இருந்தான் ஜீவா.

அவனுக்கு முதல் பேட்டி. தமிழில் அந்தப் பேரழகிக்கும் முதல் பேட்டி.

என்னென்ன கேட்க வேண்டும் என்று அதீதக் கவனத்துடன் தயாராகியும் ஜீவாவுக்கு ஒரு நிறைவு இல்லாத மாதிரி உணர்வு.

வழக்கம்போல் அம்மாவிடம் தஞ்சம் புகுந்தான்.

"திருப்தி வர்ற மாதிரி நச்சுன்னு ஒரு கேள்வி வேணும்மா."

"எனக்குள்ளே ஒரு கேள்வி இருக்குடா, கேட்கட்டுமா?"

"சொல்லும்மா."

"உலக அழகி, பிரபஞ்ச அழகின்னு ஆகிற எல்லோரிடமும் இந்தப் பிரபலத்தை வைத்துப் பின்னாளில் என்ன செய்யப் போறீங்க என்று எல்லோரும் கேட்கறாங்க. அவங்களும் தவறாம மதர் தெரஸா மாதிரி மனித குலத்துக்குச் சேவை செஞ்சு எங்க தேசத்தோட புகழை நிலை நிறுத்துவோம்னு சொல்றாங்க. ஆனா ஒரு வருஷம் முடிஞ்சதும் சொல்லி வச்சது மாதிரி ஆபாச உடைகளின் விளம்பரம், சினிமான்னு தானே போறாங்க. அதுபத்தி என்ன நினைக்கிறீங்கன்னு கேட்டுப் பாரேன்..."

ஜீவா பளிச்சென்று நிமிர்ந்தான்.

அவனுடைய கேள்வியும் உலக அழகியின் வழிசலும் தொலைக்காட்சி நேயர்கள் அனைவர் மத்தியிலும், யார் இந்த ஜீவா என்கிற கேள்வியை எழுப்பி ஒரே நாளில் அவனைப் பிரபலப்படுத்தின.

அந்த டி.வி. நிறுவனமே அவனை நிரந்தரமான வேலையில் வைத்துக் கொள்ள விரும்பியது. ஜீவாவுக்கு ஏற்பட்ட லேசான சபலத்தை வைதேகிதான் அகற்றினாள். "இதெல்லாம் வெளியில் இருந்து கொண்டு செய்யும்வரை தான் சுதந்திரம் இருக்கும். உள்ளே போய்விட்டால் நிறைய சமரசங்களுக்குப் பணிய வேண்டி வரும்" என்ற அறி வுறுத்தித் தடுத்தாள்.

ஜீவாவின் பிரபலம் வளர்ந்தது.

அதில் மயங்கித்தான் தொழிலதிபர் இராமானுஜம் அவனை மருமகனாக்கிக் கொள்ள முடிவு செய்தார்.

ஜீவாவின் ஜெனரல் மானேஜருடைய நண்பர் அவர். அவர் மூலமாக விஷயத்தைச் சொல்லாமல் அலுவல் முலாம் பூசி அவனை மதுரைக்கு தன் மாளிகைக்கு வர வழைத்துப் பார்த்தார். அவர் மனைவிக்கும் அவனைப் பிடித்தது. மகள் ராஷ்மியோ அவனுடைய விசிறி.

வீடு சுற்றிக் காண்பிக்கும் சாக்கில் அவனுடன் குழையக் குழையப் பேசியபடி அரைமணி நேரம் கழித்தாள் ராஷ்மி. அவளுடைய பணக்காரத்தனம் பூசிய மென்மையான அழகின் அண்மையில் ஜீவா கிறங்கிப்போய் விட்டான்.

அந்தக் கிறக்கம் குறையாமல் சென்னை திரும்பியவனுக்கு ஜி.எம். விஷயத்தைச் சொன்ன போது நம்பவே முடிய வில்லை.

ஆனால் விஷயம் கேள்விப்பட்ட அம்மாவின் முகக் குறிப்பு அவனுக்குச் சாதகமாக இல்லை.

"அந்தக் குடும்பம் நல்ல குடும்பமா தெரியுதும்மா" என்று குழைந்தான் ஜீவா.

"முடிவே பண்ணிட்டுத்தான் என்கிட்ட சொல்றியா?" என்று நேர்க்கேள்வி கேட்டாள் வைதேகி.

"அம்மா..."

"நான் வேண்டாம்னு சொன்னா சரின்னு கேட்டுக்க நீ தயாரா?"

"ஏம்மா வேண்டாம்...?"

"அவங்க விஷயத்தை ஆரம்பித்த விதமே சரி யில்லைன்னு படுது ஜீவா. எப்பவும் பெரிய இடத்துல பொண்ணைக் கொடுக்கணும். எளிய இடத்துல இருந்து பொண்ணு எடுக்கணும். பிரச்சினை இல்லாம வாழ்க்கை ஓட இதுதான் சூத்திரம்."

"அதெல்லாம் யாரோ காம்ப்ளெக்ஸ் புடிச்ச பழைய ஆளுங்க சொல்லி வச்ச அபத்தங்கள்மா."

வைதேகி பதில் பேசாமல் எழுந்து உள்ளே போனாள்.

"அம்மா! ஒண்ணும் சொல்லாமல் உள்ளே போறியே."

"நானும் பழைய ஆள்தாம்ப்பா, ஏதாவது அபத்தமா பேசிடக் கூடாதில்லையா? எப்படியோ உனக்குச் சரின்னு பட்டதைச் செய். எனக்கு நீ, உனக்கு நான்னு இருக்கிறோம். நமக்குள்ள எதுக்கு அபிப்பிராய பேதமெல்லாம்?"

முதலில் அப்படிச் சொன்னாலும் அப்புறம் ஒரே பையனுடைய விருப்பத்தை நிறைவேற்றாமல் எதைச் சாதிக்கப் போகிறேன் நான் என்று தன்னையே சமாதானப் படுத்திக் கொண்டு கல்யாண ஏற்பாடுகளுக்குச் சம்மதித்தாள்.

ஆனால், அதில், தான் மொத்தமும் காணாமல் போகும் சாத்தியம் இருக்கலாம் என்று கனவிலும் நினைக்கவில்லை அவள்.

இந்த நாள்களில் அவனுடன் பத்து நிமிடம் கூடப் பேச முடியாதபடி ஜீவா மற்றவர்களால் ஆக்ரமிக்கப் பட்டிருந்தான். அவளுக்காக நேரம் ஒதுக்கும் பிரயத்தனம் அவன் தரப்பில் இருந்ததாகத் தெரியவில்லை.

யார் யாரோ வந்தார்கள். அவனை அழைத்துச் சென்றார்கள். அடிப்படை அறிமுகங்களுக்காகக்கூடப் பல சமயங்களில் அவள் முன்னிலைப்படுத்தப்படாமல் தவிர்க்கப் பட்டதாக உணர்ந்தாள். மற்றவர்களுக்குத்தான் நான் ஒரு நாதியற்ற விதவைக் கிழவி; இவனுக்கு என்ன ஆச்சு என்கிற ஆதாரமான கேள்விக்கு விடை தெரியாத அவளுடைய தவிப்பு கவனிப்பாரற்றுக் குமுறிக் கொண்டிருந்தது.

மதுரையில் கல்யாணம் முடிந்து தொடர் சடங்குகள் நடந்து கொண்டிருக்க, வைதேகி சென்னை திரும்பத் தயாரானாள்.

ஜீவா, ராஷ்மி, அவள் பெற்றோர் எல்லோரும் மறுவாரம் விமானத்தில் சென்னை வரும் திட்டம் இருந்தும் வைதேகி யின் புறப்பாட்டை யாரும் தடுக்க யத்தனிக்கவில்லை.

"அம்மா முன்னால் போய் வீட்டைத் தயார் செய் யட்டும்" என்றான் ஜீவா.

"அப்போ அவங்களுக்குப் பாண்டியன்ல ஃப்ர்ஸ்ட் கிளாஸ் டிக்கெட் போட்டுடலாமா?" என்று யாரோ கேட்க, "தேவையில்லைனு நினைக்கிறேன். அம்மாவுக்கு அதெல்லாம் பழக்கம் கிடையாது. செகண்ட் கிளாஸ்லயே எடுத்தா போதும்" என்கிற ஜீவாவின் பதில் அவளை அறைந்தது. அவனுடைய இயல்பான கூச்ச சுபாவம் எடுத்திருந்த புதிய பரிணாமம் அவளை அதிர்ச்சி அடையச் செய்திருந்தது.

வழியனுப்பும்போது அந்த மெடல்கள் குறித்து ஞாபகப் படுத்திய அவனுடைய குரலில் புதிய கண்டிப்பும் சேர்ந்திருந்தது.

வைதேகி கொட்டக் கொட்ட விழித்திருந்தாள்.

நான் அறிமுகப்படுத்த வேண்டியவளை இவன் எனக்கு அறிமுகப்படுத்துகிறான். நான் காட்ட நினைத்தவற்றை இவனே காட்டத் தயாராகிவிட்டான். நான் சொல்ல நினைத்திருப்பவற்றைச் சொல்லுவானா?

மாட்டான் என்று பட்டது. இந்த மெடல்களின் பின்னணி யில் என் பங்கு பற்றி இவன் சொல்லியிருக்க மாட்டான். சொல்லியிருந்தாலே இந்த நாள்களில் நான் இவ்வளவு தூரம் அவமானப்பட்டதுபோல் ஒதுக்கப்பட்டிருக்க வாய்ப்பில்லை.

ராஷ்மி சம்பிரதாயமாக ஒரு மாமியாருக்கு தரவேண்டிய குறைந்தபட்ச வயது நிமித்தமான மரியாதைகூடத் தராமல் அலட்சியமாக ஒதுங்கி இருந்ததற்கு என்ன காரணம் இருக்க முடியும்? இந்தக் கல்யாணத்தில் எங்கம்மாவுக்கு ஆரம்பத்தில் விருப்பம் இல்லை என்றுகூட இவன் சொல்லியிருப்பானோ? ஆரம்பத்தில் என்பதைக்கூட ஆரம்பத்தில் இருந்தே என்று சொல்லியிருந்தானென்றால் வேறு வினையே வேண்டாம். கல்யாணப் பேச்சு எடுபடும்போதே, எங்கம்மாவிடம் பேசிக் கொள்ளுங்கள் என்று என்னை முன்னிலைப்படுத்தாதவன் இதைக் கட்டாயம் சொல்லியிருப்பான்.

என்னுடன் இவனே சரிவரப் பேச மறுக்கிறானே... மற்றவர் பற்றி நான் குறைப்பட என்ன இருக்கிறது?

புதிதாகப் பலம் வரப்பெற்றிக்கும் இவனுடைய பழைய பலவீனங்களுக்கான ஒரே சாட்சி நான்தான். அதனால் தான் என்னை முகங்கண்டு பேசும் துணிச்சல் இன்றி ஒதுங்குகி றானோ...?

இனி மதுரையில் இருந்து சென்னை திரும்பிய பிறகு என்ன அவதாரங்கள் எடுப்பான்? நான் எதற்கெல்லாம் தயாராவது?

இவனுடைய பகுதி என்று என்னிடம் இருப்பது இந்த மெடல்கள் மட்டுமே. இவற்றையும் அள்ளித் தந்துவிட்டு...

அப்புறம் நான்...?

பயணம் நீண்டுகொண்டே போனது...

சிந்தனையும்,

கூடு உடைத்து வெளிப்பட்டது பட்டுப் பூச்சி.

மெடல்கள் பையைச் சுருக்கிட்டாள். ஜன்னல் வழியே கைநீட்டினாள். ரயில் பாலம் ஒன்றில் தடங் தடங் என்று ஓடிக் கொண்டிருந்த சப்தத்தில் கீழே தண்ணீரில் ஏற்பட்ட 'ப்ளக்' என்ற சப்தம் யாருக்கும் கேட்கவில்லை.

✲

3. துஷ்பிரயோகம்

என் முகத்தில் சந்தோஷம் அளவுக்கதிகமாகவே கடைவிரிப்பது புரிந்தது. என் பிரயத்தனங்களையும் மீறி இதழ்களும் முகமும் விரிந்து கிழிவது போல் தோன்றியது.

"அப்பா முகத்தின் சந்தோஷத்தைப் பாரேன். இப்போ மட்டும் கேமரா இருந்தால் படம் பிடித்து ஏதாவது புகைப்படப் போட்டிக்கு அனுப்பலாம். இயற்கையான உணர்ச்சிப் பிரவாகம் என்று நிச்சயமா முதல் பரிசு தருவான்" என்று கேலி செய்தான் மகன்.

தன்னால் திட்டமிட்டபடி ரமாவுடன் டேராடூன் போக இயலாமல் அலுவலக வேலைகள் குறுக்கிடுவதாகச் சொல்லிப் பயணத் திட்டத்தை ஒத்திப் போடலாமா என்று குழம்பி அதன் சாத்தியக்கூறுகளைச் சிந்தித்துப் பார்த்துவிட்டு, ரமா இப்போது அங்கே போயே தீர வேண்டிய கட்டாயத்தை உணர்ந்த கையோடு, "நீங்கள் வேண்டுமானால் போய் வாருங்களேன். ராஜியையும் பார்த்த மாதிரி இருக்கும். அப்படியே பக்கத்தில்தான் ஹரித்துவார், ரிஷிகேஷ் எல்லாம். அங்கே போய் கங்கையில் குளித்து வந்த மாதிரியும் இருக்கும்" என்று மகன் சொன்னபோது நான் கனவிலும் நினைத்திராத லாட்டரி விழுந்த திகைப்பு எனக்கு.

"ஆமாம்பா. நீங்க கூட வந்தீங்கன்னா எனக்கு ஒரு கம்பெனி. இவரும் நான் தனியா போறேனேன்னு டென்ஷன் இல்லாம இருப்பார்" என்று ரமாவும் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். அவளுக்குப் பதிலாக அதே

பொருள்பட நான் சொன்னபோது அவள் முகத்தில் வர வேற்புக்குறிதான் தெரிந்த ஞாபகம்.

ராஜி எங்கள் பக்கத்து வீட்டில் குடியிருந்த பெண். அவளுடைய கணவன் ஓர் எண்ணெய்க் கம்பெனியில் இன்ஜினியர். ஆறாண்டுகளுக்கு முன் ரமா இந்த வீட்டு மருமகளாக வந்தபோது அவளுக்கு நல்ல தோழியாகப் பழகியவள். இன்னும் குறிப்பாகச் சொல்வதென்றால் ரமாவை வைத்துத்தான் ராஜி இந்த வீட்டுடன் ரொம்ப நெருக்கமாகப் பழக ஆரம்பித்தாள். அதன்பின் என்னை அப்பா என்று அழைப்பவர்கள் என் மகன், மருமகள் ரமா, ராஜி, அவள் கணவன் என்று நால்வராகிப் போனார்கள். அவ்வப்போது மாலையுடன் சுவரில் சாய்ந்திருக்கும் என்னவளைப் பார்த்துப் பூரிப்பாய் சிரித்துக் கொள்வேன். 'பார்த்தாயா... ஒரே ஒரு மகனுடன் உங்களைத் தனியே விட்டுப் போகிறேனே' என்று அழுவாயே... 'இப்போது எனக்கு நான்கு பிள்ளைகள். அதோடு ராஜியின் இரண்டு பிள்ளைகளுக்கும் நான் தான் தாத்தா. வேறென்ன வேண்டும்? சில சமயங்களில் உன் ஞாபகம் கூட எனக்கு வராமல் செய்து விடுகிறது இந்த உறவுக்கூட்டம்' என்று ரகசியமாய்ச் சொல்லிக் கொள்வதும் உண்டு.

அப்படி ஒரு குடும்பமாய்ப் பழகிய ராஜி மூன்றாண்டு களுக்கு முன் கணவனின் டிரான்ஸ்ஃபர் என்று டேராடூன் போய் விட்டாள். தொலைபேசி, கடிதங்கள் மூலம் உருகி உருகிப் பாசம் பொழிகிறாள். 'எல்லோரும் இங்கே வாங்க' என்று அழைத்து ஓய்ந்து விட்டாள். இப்போது அவள் கணவனுடைய அலுவலகம் டில்லிக்கு மாற்றப்பட இருப்ப

தாகவும் இந்த ஆண்டு தவறினால் அப்புறம் டோராடூன், முசௌரி எல்லாம் பார்க்க வாய்ப்பே இல்லாமல் போய்விடும் என்றும் வற்புறுத்தியிருந்ததன் பேரில் ரமாவும் என் மகனும் போய் வரத் திட்டமிட்டது போன மாதக் கதை. வட திசைப் பயணம், அதில் நான், என்பதெல்லாம் நான் உள்பட எவருடைய சிந்தையிலுமே தோன்றாத ஒன்றாகத்தான் இருந்தது.

அதென்னவோ கடைசியில் நானும் ரமாவும்தான் போவது என்று விதித்திருக்கிறது போலும். ஆழ யோசித்தால் ராஜியுடன் ரமாவோ, நானோ பழகிய அளவு நெருக்கமாக என் மகன் அந்த வீட்டுடன் பேசிப் பழகியதில்லை என்பதனால் இப்பயணத்தில் அவன் போக இயலாமல் போவது குறித்த ஏக்கம் அவனுக்கு ஏற்பட்டிருக்காது என்பது என் அபிப்பிராயம்.

பயணம் குறித்த கற்பனைகள் என்னுள் வளரத் தொடங்கியிருந்தன. கங்கைக் குளியல் என்பதெல்லாம் என் தலைமுறை உறவு வட்டத்தில் யாரும் நினைத்தும் பார்க்க முடியாத பெரிய வாய்ப்பு. வெறும் திரைப்படங்களில் மட்டுமே பார்த்திருந்த பிரவாக கங்கையில் மூழ்கி எழும் கற்பனை களை என்னால் தவிர்க்க இயலவில்லை. 'போதும்பா, எவ்வளவு நேரம்தான் இப்படித் தண்ணீரிலேயே இருப்பீங்க, கங்கையை விட்டு வெளியே எழுந்து வர மனசே இல்லையா?' என்று கரையில் இருந்தபடி ரமா சலித்துக் கொள்வதான காட்சிகள் வந்து வந்து என் முகத்தை மலர்த்தியே வைத்திருந்தன.

"டிக்கெட்டுக்குச் சொல்லியாச்சு. நாளை வந்திடும்" என்று சாப்பாட்டு மேஜை முன் வைத்து மகன் சொல்லிக் கொண்டிருந்தபோது நான் சாப்பாடு முடிந்து கை கழுவி விட்டு வந்து உட்கார்ந்தேன். வழக்கம்போல் ஏப்பம் விட்டேன்.

"அப்பா... சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதீங்க. இந்த மாதிரி சத்தமாக ஏப்பம் விடறது நல்ல மானர்ஸ் இல்லை. இங்கே நம் வீட்டில் சரி. அங்கே ராஜி வீட்டுக்குப் போன இடத்திலும் இந்த மாதிரி செஞ்சிடாதீங்க. மானம் போயிடும்" என்றாள் ரமா சிரித்தபடியே.

சாட்டையடிபட்டாற்போல் இருந்தது ஒரு கணம். என் மனக் கோணலை முகம் காட்டிவிடக் கூடாதே என்கிற பிரயத்தனம் கொஞ்சம்தான் பலனளித்தது.

ஆனால் தனிமையில் யோசித்துப் பார்க்கையில் இதை வேறு எந்தவிதமாகவும் அவள் சொல்லியிருக்க முடியாது என்றும் பட்டது. 'முன்பே சொல்லியிருக்கலாமே' என்பதெல்லாம் பெரியவன் என்கிற மரியாதை கூட இல்லாமல் என்னை அவள் குறைசொல்லிவிட்டாளே என்கிற தன் முனைப்பான நொண்டிச் சமாதானங்களாக மட்டுமே இருக்க முடியும் என்றும்பட கொஞ்ச நேரத்திலேயே மனம் சம நிலைக்கு வந்துவிட்டது.

"சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதீங்க. உங்கப்பாவுக்கு டேபிள் மானர்ஸ் கொஞ்சம் காணாது. சொல்லி வைங்க. சாப்பிடும் கையாலேயே சட்டென்று பாத்திரத்திலிருந்து இட்லி

எடுத்து விடுகிறார். நான் சொல்லக் கூச்சப்பட்டுக் கொண்டு சும்மா இருந்து விடுகிறேன். அங்கே போகிற இடத்தில் அந்த மாதிரி ஏதாவது செய்து வைக்கப் போகிறார்."

இது கூட நான் இது நாள்வரை தவறென்றே தெரியாமல் செய்து வந்த தவறுதான். ரமா சொல்லிக் காட்டிய போது வலித்தது. இருந்தும் தவறுக்குப் பொறுப்பேற்கும் வலிதான் அது என்று உணர்ந்ததால் பிரச்சினை இல்லை என்று தேற்றிக் கொண்டேன். புண்ணின் மீது மிளகாய்ப் பொடி தூவினாலும் எரிச்சல் ஏற்படுவதுண்டு; மருந்து தடவினாலும் எரிச்சல் ஏற்படுவதுண்டு. ரமாவுடைய வார்த்தைகளை இரண்டாவது வகை எரிச்சலாகவே உணர வேண்டும் என்று சங்கல்பம் செய்து கொண்டேன். அப்போதுதான் திருந்த முடியும்.

ஆனால், அடுத்த ஒரு வாரமும் ஒவ்வொரு சராசரி நிகழ்வும் போதனா வகுப்புகளாக மாறத் தொடங்கின.

"நம்ம வீட்டுல சரி. அடுத்தவங்க வீட்டுல வச்சு டி.வி. பார்க்கும்போது சீரியல்கள்ல யாராவது கஷ்டப்பட்டா அழுது வைக்காதீங்க. நீங்க காட்சிப் பொருளாயிடுவீங்க."

"அப்பா, நீங்க ஒரு பொம்பளைக்குத் துணையா போறீங்கன்றதை மறந்திடாதீங்க. ஏதாவது ஸ்டேஷன்ல பேப்பர் வாங்கப் போறேன், புஸ்தகம் வாங்கப் போறேன்னு இறங்கி வச்சு எல்லோரும் டென்ஷன் ஆகிற மாதிரியா ஏதும் பண்ணிடாதீங்க."

அது இது என்று ஆரம்பித்து கடைசியில். "இதோ பாருங்கப்பா. அங்கே உள்ள சூழ்நிலை எப்படியோ ஏதோ,

அதெல்லாம் புரிஞ்சுக்காம, போய் இறங்கின நாளாக ரிஷிகேஷ் போகணும்னு ஆரம்பிச்சிடாதீங்க" என்று சொல்கிற கட்டங்களில் ரமாவின் முகத்திலோ, மகனின் முகத்திலோ கேலிக்குறி இல்லாமல் கண்டிப்பே கடை விரித்திருந்தது காண்கையில் என்னால் அதிராமல் இருக்க முடியவில்லை.

ஓரிரு சமயங்களில், "உங்களால் வர முடியலைன்னு ஆன உடனேயே நான் மட்டும் போயிட்டு வர்ற மாதிரியே திட்டமிட்டிருக்கலாம். புது இடம், நீண்ட பயணம், பாஷை தெரியாத சூழல்னு அப்பாவை இந்த வயசான காலத்துல சிரமத்துக்கு ஆளாக்காமல் இருந்திருக்கலாம்" என்று ரமா சொன்னபோது 'என்மீது எவ்வளவு அக்கறை' என்று எடுத்துக் கொண்டு பெருமையாகப் புன்னகைத்தேன்.

ஆனால் ஒரு முறை, "உங்களுக்கு வேண்டாத வேலை, சும்மா கிடக்காமல் உங்கப்பாவையும் கிளப்பி விட்டாச்சு. இருக்கிற லக்கேஜ்களைப் பார்த்து இப்பவே அவங்க அட்வைஸ் பண்ண ஆரம்பிச்சாச்சு. அவங்க தொண தொணப்பு ஒரு பக்கம், லக்கேஜ்களோட லக்கேஜா அவங் களையும் பாதுகாக்க வேண்டிய டென்ஷன் ஒரு பக்கம்னு எவ்ளோ எரிச்சலா வருது தெரியுமா?" என்று ரமா சலித்துக் கொண்டதும், "நாடு இருக்கிற சூழல்ல உன்னைத் தனியா அனுப்ப முடியாது, நீ பாத்ரூம் போகணும்னாகூடச் சாமான் களைப் பார்த்துக்கச் சொல்லிட்டுப் போக யாராவது வேணு மின்னுதான் அவரை அனுப்பறேன். அவர் வேணாம்னா இந்த டிரிப்பே கேன்சல். புரிகிறதா?" என்று மகன் பதில் வாதம்

செய்ததும் என் முன்னிலையிலேயே நிகழ்ந்தபோது என் இருப்பு எனக்கே சுமையாக இருந்தது.

முதன் முறையாகக் கொஞ்சம் பயம் வந்தது.

'அதைச் செய்யாதே, இதைச் செய்யாதே' என்று இவர்கள் பட்டியலிட்டுப் போதித்ததெல்லாம் இப்போது என் நினைவில் இருக்கிறதா என்றே தெரியவில்லையே. நான் அங்கே செய்து வைக்கும் எதாவது ரமாவைத் தர்மசங்கடப் படுத்துவது போலவோ, எரிச்சலடையச் செய்வது போலவோ ஆகிவிட்டால்...

என் கவனம் முழுவதும் ஒவ்வொரு கணமும் இப்போது நான் யாருக்கும் எரிச்சல் வராமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்கிற சிந்தனையிலும் எச்சரிக்கையிலுமே இருப்பது சாத்தியமா? இயல்பாய் ஏதாவது செய்து வைக்க அது பிரச்சினை ஆகிவிட்டால்...?

நான் டேராடூனுக்கு வரவில்லை. ரமா மட்டும் தனியாகப் போய் வரட்டுமே என்று சொல்லிவிடலாமா என்கிற எண்ணம் ஏற்பட்டது. அதிலும் பயம் வந்தது. கிழவன் ரொம்பவும்தான் அலட்டிக்கறான். தன்னுடைய ரிஷிகேஷ் டிரிப் கான்ஸல் ஆனாலும் பரவாயில்லை. தன்னை மதிக்க மறுக்கும் மருமகள் தன் தோழியைப் பார்க்க இயலாமல் போக வேண்டும் என்று நான் திட்டமிடுவதாக ரமா எண்ணிவிட்டால்...?

ஒருவேளை நானாகவே அப்படி ஒரு முடிவுக்கு வந்து விட்டால் தேவலை என்று கூட எதிர்பார்ப்பு அவளுக்கோ, மகனுக்கோ இருக்கலாம். எப்படிச் சொல்வது, சொன்னால்

நான் வருத்தப் படுவேனோ என்றுகூடச் சொல்லாமல் தவிர்த்துக் கொண்டிருக்கலாம்.

பரீட்சார்த்தமாகச் சொல்லிப் பார்த்தால் என்ன?

வேண்டாம் என்று பட்டது. அதன் ரியாக்ஷன் எந்த மாதிரி இருந்தாலும் அதன் பிறகான நாள்கள் இயல்பாக நகர்வதில் சிரமம் இருக்குமே.

கடவுளே! யாரும் எதுவும் சொல்வதற்கு இடம் வைக்காமல் தானாகவே எனக்கு ஏதாவது ஆகிவிட்டால் நல்லதே.

செத்து கித்து வைத்தால்தான் பிரச்சினை. கைகால் இழுப்பு வாதம் என்று ஆனால் கூட ஆஸ்பத்திரி அட்மிஷன் என்று சிக்கல் வரும். சும்மா வெறுங்காய்ச்சல், வைரல் ஃபீவர், மெட்ராஸ் ஐ, மைக்ரேன், அஜீரணம், பேதி என்பது போல் ஏதாவது வந்து ரமா மட்டும் தனியாக, சுதந்திரமாக, சந்தோஷமாகப் போய் வருகிற சூழ்நிலை தானாகவே ஏற்பட்டு விட்டால் எவ்வளவு நல்லது...

அதே எண்ணத்துடன் படுத்திருந்ததாலோ என்னவோ காலை எழுந்தபோது உடம்பு சுடுவது போல இருந்தது. உள் காய்ச்சலாக உணர்ந்தேன். நெற்றியிலும் கழுத்திலும் கை வைத்துப் பார்த்தேன்.

எதார்த்தமாய் அங்கு வந்த மகனின் கண்களில் அக்காட்சி பட சிரித்தான்.

“அப்பாவுக்குப் பயம். வடக்கே ஜாலியாகச் சுற்றப் போகும் வாய்ப்பு ஏதாவது காரணத்தால் கைநழுவிப்

போயிடக் கூடாதேன்னு தினமும் உடம்பை நாலு தடவை தொட்டுப் பார்க்கிறார்" என்று கண்ணில் பட்டவர்களிட மெல்லாம் கேலியாகச் சொல்லிச் சிரிக்கத் தொடங்கினர் அவனும் ரமாவும்.

புன்னகைக்க முயற்சி செய்கிறேன். என் பிரயத்தனங் களையும் மீறி இதழ்களும் முகமும் சுருங்கிக் கொண்டு விரிவுபட மறுப்பது போல் தோன்றுகிறது.

✲

4. வாழ்த்து

இரவில் நடக்கும் சண்டையின் எச்சங்கள், அருமை யான காலைப் பொழுதை அனுபவிக்க முடியாமல் செய்து விடுகின்றன.

வழக்கமாக எழுந்து பால்கனி கதவு திறந்து வெளியே போய் நின்று, உடம்பை ஆர்வமாகத் தழுவும் சில்லென்ற சுத்தக் காற்றின் கன்னிமையை முழுக்க உள்வாங்கிச் சிலிர்ப்பையும் சுறுசுறுப்பையும் எனதாக்கிக்கொண்டபடி எங்கோ ஒரு தூரத்துப் பறவை குரலெழுப்பி ஞாபகப் படுத்தும் வரை கண்மூடி நின்றுவிட்டு பின் வேகம் பெற்று அடுக்களைக்குத் திரும்பும் தினப்படி செயலில்கூட இம் மாதிரியான காலைகளில் ஓர் இயந்திரத்தனம் வந்து விடுகிறது. சில்லறைச் சண்டைகள். சுறுசுறுப்பை ஏற்கவும் முடியாமல், சலிப்பை உதறவும் முடியாமல் கலவையான உணர்வுடன் அடுக்களைக்கு விரைந்தன கால்கள்.

"நாளை நைட் அம்மாவைப் பார்க்க கிளம்பறோம்... லீவு சொல்ல மறந்துடாதே."

எவ்வளவு சாதாரணமாகச் சொன்னார்.

"என்னாச்சு? ஏதும் செய்தி வந்ததா? நல்லா இருக்காங்கள்ல?" என்று பதறிக் கேட்டேன்.

சிரித்தார்.

"என்ன, மறந்துட்டயா? நாளை மறுநாள் அம்மாவுக்கு பிறந்த நாள்."

"இதுக்குத்தானா? என்னவோ ஏதோ என்று பயந்து விட்டேன்" என்று பெருமூச்சு விட்டேன். "இல்லைங்க... இந்த முறை நீங்க மட்டும் போயிட்டு வாங்க. எனக்கு இப்போ லீவு கிடைக்காதுன்னு நினைக்கிறேன்" என்றேன் மெள்ள.

அவர் முகம் மாறியதை நான் கவனிக்கவில்லை. அதோடு நான் புரண்டு படுத்தது அவருடைய கோபத்தைக் கிளறியிருக்க வேண்டும்.

"நான் பேசிட்டிருக்கேன். நீ உன் பாட்டுக்கு அலட்சியமா மறுபக்கம் திரும்பிட்டா என்னடி அர்த்தம்?" என்று பாய்ந்த குரலின் உஷ்ணம் முதுகைத் தாக்கியது.

"அடடா! அப்படி எல்லாம் ஏன் நினைக்கறீங்க?" என்று எழுந்து உட்கார்ந்தேன்.

"லீவு போடச் சொன்னீங்க. இப்போ கஷ்டம்னு சொன்னேன். நீங்க மட்டும் போயிட்டு வந்துடுங்களேன்... ப்ளீஸ்..." என்றேன்.

"நான் மட்டும் போறதுன்னா உன்னை எதுக்கு கல்யாணம் பண்ணினேன்? 'நீங்க மட்டும் போயிட்டு வந்துடுங்க'ன்னா என்னடி அர்த்தம்? எங்கம்மா பிறந்த நாள்னா ஏதோ கடன் கழிப்புன்னு நினைப்பா...? வீட்டில் பெரியவளாச்சே, ஒரு நல்ல நாள் பொழுதில் போய் நின்று அவ கால்ல விழுந்து ஆசீர்வாதம் வாங்கணும்னு உனக்கே ஆர்வம் வர வேணாமா? என்ன பொம்பளை நீ...?"

வெளிப்படையாகப் பார்த்தால் அவருடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் நியாயமானவை, சரியானவை... நான் அவருடைய மனைவி என்கிற ஒரே பரிமாணத்துக்குள் அடைபடுபவளாக இருந்தால்.

எனக்கு, ஒரு தனியார் கம்பெனியில் வேலை பார்ப்பவள் என்கிற இன்னொரு பரிமாணமும் இருக்கிறதே. என்னுடைய தேவைகள், விருப்பங்கள், அவற்றை நிறைவேற்றிக்கொள்ளும் வழிகள் பற்றி யோசிக்கையில் வீடு, அவர், அவருடைய அலுவலக என்கேஜ்மெண்ட்கள் இவற்றோடு என்னுடைய வேலையைப் பற்றியும் சிந்தித்த பிறகுதானே முடிவு செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறேன்.

ஆனால், இவர் மட்டும் எந்த ஒரு கணத்திலும் என் வேலை என்கிற கோணத்தை நினைப்பதே இல்லை.

"இப்போதாங்க நான்கு நாள் முன்புபோய் அத்தையைப் பார்த்துட்டு வந்தோம். அப்போதே, 'இந்த வாரம் ஆடிட் இருக்கு... நீ இப்படிப் பொறுப்பில்லாமல் லீவு போட்டால் என்ன அர்த்தம்'னு மானேஜர் முணுமுணுத்தார்..."

"அப்படின்னா, எங்கம்மா உடம்பு சரியில்லாம அங்கே அநாதையா கிடந்தாக்கூடப் பார்க்கப் போயிருக்கக் கூடாதுன்னு சொல்றியா?"

"ஐயோ! அப்படிச் சொல்லலை. அன்னிக்கு போகணும்னு நீங்க சொன்னப்போ எதாவது சொன்னேனா? உடனே லீவு சொல்லிட்டுக் கிளம்பினேனா இல்லையா...?"

"அன்னிக்குப் பார்த்தாச்சு... அதனால் இப்போ பார்க்க வேண்டாம்னா என்ன அர்த்தம்? அவளுடைய பிறந்த நாளை உடம்பு சரியில்லாம இருந்தப்பவே கொண்டாடி இருக்கணும். அல்லது, பிறந்த நாளன்னிக்குத்தான் உடம்பு சரியில்லாம ஆகணும். அப்போதான் ஒரே நடையில் எல்லாம் முடியும்னு சொல்ற... இல்லியா?"

இனி இவரிடம் பேசிப் பயனில்லை. தன்னிலை மறந்து பேச ஆரம்பித்து விட்டார். நான் என்ன சொன்னாலும் புதுப் புதுக் கோணங்கள் கிளப்புவார். நிலைமை இன்னும் ரசா பாசம் ஆகும்.

இவருடைய அம்மா என்னுடைய மரியாதைக்குரிய மாமியார். நல்லவள். நான் மனப்பூர்வமாக மதிக்கும் நல்ல மனுஷி. கணவனை இழந்த சோகம் மறைத்து மகனையும் மகளையும் நல்லமுறையில் வளர்த்து, படிக்க வைத்து ஆளாக்கியுள்ள உத்தமி. பிள்ளைகளின் திருமண வாழ்க்கை யில் தன்னால் சிறு இடைஞ்சலும் வரக்கூடாது என்று கிராமத்திலுள்ள தன் வீட்டைவிட்டு யார் வீட்டுக்கும் வர இயலாது என்று ஒதுங்கிக் கொண்டவள்.

அவளுடைய பிறந்த நாளின்போது அவள் காலில் விழுந்து ஆசிவாங்க எனக்குமே கொடுப்பினை வேண்டும்.

எனக்கு இந்த எண்ணம் இல்லாமல் இல்லை. ஆனால், என் நிலைமை புரிந்தால் அவள் நிச்சயம் நான் வந்து அவள் காலில் விழுந்திருக்க வேண்டும் என்று நினைக்க மாட்டாள்.

கடந்த மூன்று மாதங்களுக்குள் நான்கு முறை லீவு போட்டு அத்தையைப் பார்க்க ஊருக்குப் போய்வர வேண்டியதாகிவிட்டது. அப்படி ஒன்றும் சீரியஸ் விஷயமும் இல்லை. இரண்டு முறை சாதாரண காய்ச்சல்... நாங்கள் போகும்போதே குணமாகி இருந்தாள். ஒரு முறை ஒன்றுமே இல்லை. யாரோ தவறாகச் சொல்லியிருந்தார்கள். ஒரு முறை இவர் கெட்ட கனவு கண்டாராம்.

இவற்றுக்கெல்லாம் நான் மறுப்பே சொன்னதில்லை. அம்மா மீது இவருக்கு உள்ள பாசத்தை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அவள் முழு ஆரோக்கியத்துடன் இருக்கிறாள்... நூறாண்டு வரை நன்றாக இருப்பாள் என்று எனக்குத் தோன்றுவதை, இவரைத் தேற்றும் பொருட்டுக்கூட நான் சொல்ல முயன்றதில்லை. 'உனக்கு லீவு போட வலிக்கும். அதற்காகவே எங்கம்மாவுக்கு ஒண்ணுமில்லைன்னு சொல்லுவ' என்று அதையும் கொச்சைப் படுத்திப் பேசுவார்.

அலுவலகத்தில் வேலை பார்க்கும் பெண்ணுக்கு லீவு வாங்குவது என்பதில் இருக்கும் பிரச்சினையின் அடிப் படையை இவர் ஏன் புரிந்துகொள்ள மறுக்கிறார்?

இதே இவர் 'என் அப்பாவுக்கு ஆபரேஷன் பண்ணுகிறார்கள்... போகவேண்டும்' என்று நான் சொன்னபோது, "ரொம்ப ஸாரி தேவி! எங்க செக்ஷன்ல ஏற்கெனவே நான்கு பேர் லீவு. நீயே ஒரு நடை போய்ப் பார்த்துட்டு வந்திடு." என்று கன்னத்தைத் தட்டிக் கொடுத்து தனியாகத் தானே அனுப்பி வைத்தார்...?

எனக்குள், அவர் அம்மா என் அப்பா என்கிற வேறு பாடு உணர்வுகள் ஒருபோதும் தலை தூக்கிவிடக்கூடாது என்று எவ்வளவோ கட்டுப்பாட்டுடன் எச்சரிக்கையாக இருந்தாலும் சில சமயங்களில் இவருடைய செயல்கள் அந்த எண்ணத்தை ஏற்படுத்தி விடுகின்றதே.

இவர் தன்னுடைய அம்மா விஷயத்தில் வெளிக் காட்டும் அசாத்திய அலட்டல் எனக்கு அவர் விஷயத்தில் வெறுப்பை ஏற்படுத்தி விடுமோ என்கிற பயமே அடிக்கடி ஏற்படுகிறது. இவருக்கு எப்படிப் புரியவைப்பது?

"இதோ, பார்... உனக்கு வேண்டுமானால் எங்கம்மா அற்பக் கிழவியாக இருக்கலாம். எனக்கு உயிர், தெய்வம், எல்லாமே அவள்தான். அடுத்த பிறந்த நாளுக்கு இருக்கி றாளோ என்னவோ, நாளன்னிக்கு நாம் அங்கே போறோம்... அவ்வளவுதான்" என்றார் உறுதியாக.

"இப்படி நினைச்சபோதெல்லாம் லீவு போடறதுக்கு பதிலா என்னை ரிஸைன் பண்ண வெச்சிடுங்களேன். வீட்டில் இருக்கிறேன். நீங்க இழுக்கிற இழுப்புக்கெல்லாம் சந்தோஷமா வர்றேன்..." என்று வெடித்தேன்.

அலட்சியமாக ஒரு புன்னகையை உதிர்த்தபடி புரண்டு படுத்துக் கொண்டார்.

இப்போது நான் கேட்க முடியாது - 'நான் பேசிட்டு இருக்கேன்... நீங்க உங்க பாட்டுக்கு அலட்சியமா மறுபக்கம் திரும்பிட்டா என்னங்க அர்த்தம்' என்று.

அவர் நினைத்ததுதான் நடக்க வேண்டும் என்கிற எழுதாத விதியின் படி இருவரும்தான் கிராமத்துக்குப் போனோம்.

அலுவலகத்தில் லீவு லெட்டரை நேரில் கொடுக்க பயமாக இருந்தது. அதனால் தோழியிடம் கொடுத்து மறுநாள் காலை ஒப்படைக்கச் சொல்லிவிட்டு வந்தாகி விட்டது.

அத்தைக்கு மிகவும் சந்தோஷம். நாங்கள் மூவரும் புத்தாடை உடுத்தினோம். அத்தை நிறைந்த மனதோடு ஆசீர்வாதம் தந்தாள். அடுத்த வருடம் பேரனையோ பேத்தியையோ பார்க்க வேண்டும் என்றாள். ஒரு நாள் அவளை உட்காரவைத்து அவளுக்குப் பிடித்த சமையலைச் செய்து அவள் சந்தோஷமாகச் சாப்பிட்டு வாழ்த்தியது நன்றாகத்தான் இருந்தது.

எல்லாம் முடிந்த பிறகு நாளை காலையைப் பற்றிய பயம் வந்து கவ்விக்கொண்டது.

பயணக் களைப்பையும் பொருட்படுத்தாமல் நேரத் தோடு ஆபீஸில் போய் நின்றாலும்கூட மேலதிகாரி புழுவைப் பார்ப்பதுபோல் பார்ப்பார். லீவு எடுத்ததற்கான கோபம் ஒருபுறமும் அதையும் முறைப்படி முன்கூட்டியே கொடுக்காமல் தோழி மூலம் அனுப்பிய விதத்துக்கான கோபம் மறுபுறமும் மத்தளம் தட்ட ருத்ரதாண்டவம் ஆடுவார்.

‘ஏன் என் கழுத்தை அறுக்கறீங்க? உங்க இஷ்டத்துக்கு வந்துட்டுப் போறதுக்கு இது என்ன பிக்னிக் ஸ்பாட்னு

நினைச்சீங்களா?' என்று ஆரம்பித்தால் அரை மணிநேரம் ஓயமாட்டார்.

நினைக்கும்போது இப்போதே கண்களில் நீர் கோத்துக் கொண்டது.

நாளைக் காலை மேலதிகாரியை எப்படிச் சமாளிப்பது?

அதற்குள் எனக்கு ஏதாவது ஆகித் தொலைக்கக் கூடாதா? எங்காவது கால்தடுக்கியோ வழுக்கியோ விழுந்து எலும்பு உடைந்து மாவுக்கட்டு... ஆறுவாரம் படுக்கை என்று ஏதாவது நேர்ந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

"ஏன் தேவி ரொம்ப டல்லா இருக்கறே..." என்று அத்தை கேட்டபோது, "அதெல்லாம் ஒண்ணுமில்லை" என்று சமாளிக்க முயன்றேன்.

மனதின் ஒரு சைத்தான் மூலையில் 'இந்தக் கிழவிக்கு ஏதாவது ஒன்று ஆனால்கூடத் தேவலையே...' என்று தோன்ற, அடிப்பாவி என்று என் தலையைத் தட்டிக் கொண்டேன். சட்டென்று அத்தையின் கைகளைப் பிடித்துக் கொண்டு அழுதேன். "அத்தை! நான் ஊருக்குப் போகலை. உங்க கூடவே இருந்துடறேன். எனக்கு அங்கே போகவே பிடிக்கலை" என்று தேம்ப ஆரம்பித்தேன்.

"ஏ அப்பா! இவ்வளவு பாசத்தை உள்ளே வைத்துக் கொண்டுதானா 'எனக்கு லீவு கிடைக்காது... நான் வரலை' என்றெல்லாம் அங்கே டிராமா பண்ணின? இந்தப் பொம்பளைங்களையே நம்பக் கூடாதுப்பா..." என்று காமெண்ட் அடிக்கிறார் என் கணவர்.

5. ஆண்ஜாதி

"சாயந்தரம் பிரபாகர் அண்ணாவைக் கட்டாயம் கூட்டிட்டு வாங்க. மறந்துடாதீங்க... மூன்று பேருக்குமாக டின்னர் செய்து வைக்கிறேன்..." என்று ஞாபகப்படுத்தி அனுப்பினாள் மதுமதி. காலையில் நான் ஆபீஸுக்குக் கிளம்பியபோதே.

எப்படி இருந்தவள்...! இப்போது தன் பிறந்த நாளுக்கு அவனை வீட்டுக்கு அழைக்கும் அளவுக்கு மாறியிருப்பதைக் காண சந்தோஷமாக இருந்தது. இந்த மாற்றத்துக்காக எவ்வளவு முயன்றிருக்கிறேன்!

எனக்குத் திருமணமாகி மதுமதியை அழைத்து வந்த ஆரம்ப நாட்களில், முதன் முறை அவன் என் வீட்டுக்கு வந்தபோது, 'வாங்க' என்று கடமைக்காக வரவேற்று காபி, டிபன் கொண்டுவந்து வைத்துவிட்டு உள்ளே போய் விட்டாள். பின்பு அவன் விடைபெற்றுப் போகும்வரை அவள் வெளியே வரவே இல்லை! அவள் அதற்காகப் பின்னர் வருந்தியதாக அவனிடம் பொய் சொல்லி வைத்தேன்.

அதன்பிறகு அவன் வந்தால், அவனிடம் முகம் கொடுத்துப் பேசாமல் நடந்துகொள்வாளோ என்கிற கவலையில், அவனைத் தவிர்க்க முயன்ற சந்தர்ப்பங்கள் இப்போது நினைத்தாலும் புன்னகையை வரவழைப்பவை.

எனக்கு நண்பனாக இருக்கிறான் என்கிற ஒரே காரணத்துக்காகவே பிரபாகரை மதுமதி தனக்கு நண்பனாக

மதிக்க வேண்டும் என்கிற எதிர்பார்ப்பெல்லாம் எனக்குக் கிடையாது. ஆனால், ஒரு காரணமும் இல்லாமல் அவனைப் பிடிக்கவில்லை என்று மதுமதி அவனை ஒரேயடியாக வெறுத்ததில் எனக்குச் சம்மதமில்லை.

பிரபாகர் நல்லவன், ஒழுக்கமானவன் என்று சிறப்பம் சங்களைச் சொல்லிப் பார்த்தேன்.

"இதோ பாருங்க, ஏனோ தெரியலை... அந்த ஆளை எனக்கு முதல் பார்வையிலேயே பிடிக்கவில்லை. அதற்காக, அவர் கெட்டவர்னு சொல்ல வரலை. அவர் நல்லவராகவே இருந்துட்டுப் போகட்டும். நீங்க பழகிக்குங்க. என்னை நடுவில் இழுக்காதீங்க. ப்ளீஸ்..." என்று கையெடுத்துக் கும்பிட்டாள்.

வேறு சந்தர்ப்பங்களில் நான் அவனைப் பற்றி ஏதாவது சொல்ல முயற்சிக்கும்போதெல்லாம், "நீங்க அவரைப் புகழப் புகழ, எனக்கு அந்த ஆள்மேல வெறுப்பு கூடிட்டேதான் போகுது. விட்டுடுங்களேன்..." என்று ஆமைபோல் தன் ஓட்டுக்குள் ஒடுங்கிக்கொண்டாள். அவள் இப்படி ஒதுங்க ஒதுங்க. எனக்கு எப்படியாவது இவர்கள் இருவரையும் நண்பர்களாக்கியே தீரவேண்டும் என்கிற வேகம் கூடியது.

ஒரு நாள் பேச்சுவாக்கில் மதுமதியிடம், "உனக்குக் கதை, கவிதை எதுவும் எழுத வருமா...?" என்று கேட்டேன்.

அவள் வியப்புடன் என்னைப் பார்த்தாள். "ஒரு காலத்தில், கல்லூரி நாட்களில் எழுதியிருக்கிறேன். காலேஜ் மேகஸின்ல என் கட்டுரைகள் நிறைய வந்திருக்கு. உங்களுக்கு யார் சொன்னது...?"

"சொன்னா நம்பமாட்டே..."

"யாரு...?"

"பிரபாகர்..."

"அவருக்கு எப்படித் தெரியுமாம்...?"

"உன்னுடைய பிறந்த தேதியை வெச்சு நியூமராலஜிபடி சொல்லிட்டிருந்தான். ஏதாவது படைப்புத்துறை திறமை உனக்கு இருந்தே ஆகணும், தூண்டிவிட்டால், நீ பெரிய ஆளா வரமுடியும்னு சொன்னான்..."

அவள் முகத்தில், பிரபாகரைப் பற்றி நான் எப்போது பேச்செடுத்தாலும் ஏற்படுகிற வெறுப்புச் சுழிப்பு முதன் முறையாக அப்போது ஏற்படவில்லை!

"நியூமராலஜி, ஜாதகம் எல்லாம் நீங்க நம்புவீங்களா...?" என்றாள்.

"ஜாதகம் பற்றித் தெரியலை. நியூமராலஜின்னா, பிரபாகருடன் பழக ஆரம்பிச்சப்புறம் நம்பிக்கை. அவன் இதில் பெரிய ஆள். ஆளையே பார்க்காமல், பிறந்த தேதியை மட்டும் வைத்து, அவருடைய குணாதிசயங்களைச் சொல்லிவிடுவான். நிறைய விஷயம் தெரிஞ்சவன்னாலும் அலட்டிக்க மாட்டான். அவனுடன் ஒரு மணி நேரம் பேசிக் கிட்டிருந்தால், ஒரு டைஜஸ்ட் படிச்ச திருப்தி வரும்..."

"அவர் புராணத்தை யார் கேட்டா...? அவரிடம் போய் என்னைப் பற்றிக் கேட்டீங்களாக்கும்..."

"ம்! நம்ம கல்யாணத்துக்கு முன்னால, ஒரு நாள் உன் பிறந்த தேதியைக் காண்பிச்சு 'எப்படிடா...? அனுசரித்துப் போவாளா...? சண்டை போடாம இருப்பாளா...?'னு கேட்டேன். அப்போ, டக்குன்னு அடிச்சானே - 'எதிராளியை அசரவைக்கும் அழகோடு இருப்பாங்க. யார்கூடப் பழகினாலும் மனப்பூர்வமான ஒட்டுதலோட இருப்பாங்க. சில சமயங்களில், புரிந்து கொள்ள முடியாத முரணான குணாதிசயங்களுடன் இருப்பாங்க...' அது, இதுனு அநேகமா எல்லாமே கரெக்டா சொன்னானே!"

"இன்ட்ரஸ்ட்டிங்!" என்றாள் மதுமதி, யோசனையில் ஆழ்ந்தபடி.

கொஞ்சம் கொஞ்சமாக அவள் மனதில் பிரபாகர் மீது இருந்த வெறுப்பு மேகம் கலையத் தொடங்கியதை என்னால் நாளாவட்டத்தில் உணரமுடிந்தது.

ஒரு முறை நானும் மதுமதியும் ஷாப்பிங் போய்விட்டுத் திரும்பிக்கொண்டிருக்கையில், வழியில் ஒரு கடைவாசலில் பிரபாகர் சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தான். எங்களைப் பார்த்ததும் சிகரெட்டைக் கிழே போட்டுவிட்டுப் புன்னகைத்தான். மதுமதியைப் பார்த்துக் கைகூப்பினான்.

"நல்லாயிருக்கீங்களா...?" என்று கேட்டான்.

"ம்! நீங்க...?" என்று மதுமதி திருப்பிக் கேட்டது, எனக்கே வியப்பாக இருந்தது.

அவன் பதில் பேசாமல் இருக்க, "உங்களைத் தன்னுடைய நெருங்கிய நண்பர்னு இவர் அடிக்கடி சொல்றார்.

ஆனா, உங்களைத்தான் வீட்டுப் பக்கமே பார்க்க முடியற தில்லை...” என்றாள், கொஞ்சம் உரிமையோடு.

“வர்றேன் மேடம்... நிச்சயமா ஒரு நாள் வர்றேன்...” என்ற பிரபாகரின் முகத்தில் தெரிந்த மலர்ச்சி, எனக்குச் சந்தோஷத்தை அளித்தது.

அப்போது பேச்சுவாக்கில், சிகரெட் பிடிப்பது தனக்குப் பிடிக்காது என்று மதுமதி சொன்னதும், “கண்டிப்பா விட்டுடறேன் மேடம்” என்றவன் அப்படியே விட்டும் விட்டான்!

அதன்பின், அவன் ஒரு நாள் என் வீட்டுக்கு வந்தி ருந்தபோது, மதுமதி ‘ஏதாவது உணவு தயார் செய்கிறேன்’ என்று எழ, பிரபாகர் உரிமை எடுத்துக்கொண்டு தடுத்தான்.

“ப்ளீஸ் மேடம்... நான் வந்திருக்கிறேன் என்பதற்காக, நீங்க எக்ஸ்ட்ரா வேலை பார்க்கவேண்டி வருகிறது என்றால், என் அடுத்த வரவைப் பற்றி நான் பரிசீலனை செய்ய வேண்டிவரும்...” என்றான்.

“இதைத் தொந்தரவு என்ற நீங்களாகவே ஏன் நினைத்துக் கொள்கிறீர்கள்...? நம்மைப் பிடித்தவர்களைக் கொஞ்சம் சிரமப்படுத்திப் பார்ப்பதும் நமக்குப் பிடித்தவர் களுக்காகக் கொஞ்சம் சிரமப்படுவதும்கூட ஒரு சுகம்தான் என்பது உங்களுக்குத் தெரியாதா...?” என்றாள் மதுமதி.

“பார்த்தியாடா... மேடம் ஓர் எழுத்தாளர் மாதிரி பேசறாங்க! எப்படிச் சமாளிக்கிறே...?” என்று என்னிடம் கேட்டான் பிரபாகர்.

சிரித்து வைத்தேன். எனக்கும் ஆச்சரியமாகத்தான் இருந்தது. மதுமதி இந்த மாதிரி எல்லாம் முன்பு பேசிய தில்லை. இப்படி அவளிடம் இருந்து பதில் வரும் வண்ணம் நான் உரையாடலை ஏற்படுத்தியது இல்லை என்பதும் நிஜம்.

அன்றைய அவளது பேச்சு இயல்பாக இருந்தது. இறுக்கம் தளர்ந்திருந்தது. ஒரு பூந்தோட்டம் மலர்ந்து, நறு மணம் நிரப்பியது போல் பட்டது. நான்கு மணி நேரம் ஓடியதே தெரியவில்லை.

"அடிக்கடி வீட்டுக்கு வாங்க..." என்று அழைத்தாள் மதுமதி.

"கட்டாயம்... நீங்களும் என் வீட்டுக்கு வரலாம். இவன் கூட்டிட்டு வரக் கூச்சப்படறானா...? பொம்பளை இல்லாத வீடு என்றாலும்கூடச் சுத்தமாக வைத்திருப்பேன்..." என்று சிரித்தான்.

அவன் போன பிறகும் வீட்டில் அவன் நிறைந்தி ருந்தது போலிருந்தது.

மதுமதியின் தூண்டுதலால் போன வாரம் பிரபாகரின் வீட்டுக்கு இருவருமாகச் சென்றிருந்தோம்.

"வீட்டை எப்போதுமே இவ்வளவு சுத்தமாக வைத்தி ருப்பீங்களா...? அல்லது, நாங்க வர்றோம்னு ஷோ பண்ணி யிருக்கீங்களா...?" என்று அவனிடமே சீண்டும் குரலில் கேட்டாள் மதுமதி. அவன் பதில் பேசாமல் புன்னகைத் தான்.

"நாங்க வர்றோம் என்பதற்காகவே 'இயற்கையாக இருக்கிறேன்' என்கிற பெயரில் அசுத்தமாக வைத்திருப்பதைவிட, எங்களுக்காக அழகுபடுத்தி வைத்திருப்பது கூட எங்களை மதிப்பதற்கான அடையாளம்தான், இல்லையா...?" என்று அவளே சமாதானமும் சொல்லிக் கொண்டாள்.

"எங்களுக்கு இந்த மாதிரியெல்லாம் பேசத் தெரியாது தாயே..." என்று தலைக்குமேல் கைகூப்பினான் பிரபாகர்.

கிளம்பும் முன் அவனிடம் கேட்டாள்... "அடுத்த புதன்கிழமை வீட்டுக்கு வர்றீங்களா...?"

"கட்டாயம்... உங்க பிறந்த நாளாச்சே! வாழ்த்துச் சொல்ல மறப்பேனா...?" என்றான் பிரபாகர் பளிச்சென்று.

எனக்கேகூட அப்போதுதான் நினைவுக்கு வந்தது. மதுமதியின் பிறந்த நாள். முதல்முறையாக என் முகத்தின் புன்னகை, ஒரு கீறலுடன் வெளிப்பட்டது.

பகல் முழுதும் ஆபீஸில் வேலை ஓடவே இல்லை. எதையும் முழு ஈடுபாட்டுடன் செய்ய முடியவில்லை. பிரபாகர் உற்சாகமாக இருப்பதாகப் பட்டது. அவனுடைய டிரஸ்கூடப் புதிதோ...?

மாலை என்னுடன் வருவதற்காகக் கிளம்பிக் கொண்டிருந்தவனிடம் "உன்கூடக் கொஞ்சம் தனியா பேசணும்..." என்றேன்.

என் முகத்தின் தீவிரம் பார்த்து. "எனிதிங் சீரியஸ்...?" என்று கேட்டான்.

"எப்படிச் சொல்றதுனு தெரியலை பிரபாகர். மதுமதி பற்றி நீ முதலில் கணித்துச் சொன்னியே, புரிந்துகொள்ள முடியாத ரொம்பவும் முரணான. குணாதிசயங்களுடன் இருப்பாள்னு. அது சரிதான்னு தோணுது..." என்று தயங்கினேன்.

அவன் என் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"சில சமயங்களில் அவள் உள்ளுக்குள் ஒன்றாகவும் வெளியில் வேறாகவும் இருக்கிறாள்னு தோணுது பிரபாகர். குறிப்பாக, உன் விஷயத்தில். அவளுக்கு எதனால் உன் மீது வெறுப்புனு தெரியலை. என்னுடைய நச்சரிப்புக்காக, உன்னிடம் சிரிச்சுப் பேசறா. அப்புறம் தனிமையில் என்னிடம் உன்னை அவாய்ட் பண்ணச் சொல்லி கடுப் படிக்கிறா. எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலை பிரபாகர். நீ என் ஃப்ரெண்ட், அவள் என் மனைவி. ரெண்டு பேருமே எனக்கு வேணும்..." - திக்கித் தடுமாறி சொல்லி விட்டேன்.

பிரபாகர் முகவாயைத் தேய்த்தபடி சற்று யோசித்தான். பிறகு, என் தோளில் கைபோட்டு மெள்ளத் தட்டியபடி "புரிந்துகொண்டேன்..." என்றான் அமைதியான குரலில்.

✲

6. குழிப்பந்து

‘போன மாதம் யஷ்வந்த் அங்கே வந்திருந்தபோது, அவனுக்கு என்ன மந்திரிச்சு விட்டீங்கன்னு தெரியலை இங்கே வந்த பிறகும் கிராமத்து ஞாபகமாகவே இருக்கிறான். ஏதோ குழிப்பந்து விளையாட்டு சொல்லிக் கொடுத்தீங் களாம். ‘வெரி இன்ட்ரஸ்ட்டிங், வெரி இன்ட்ரஸ்ட்டிங்’னு புலம்பிட்டிருந்தான். இதை சிட்டி பாய்ஸ் எல்லாரும் மிஸ் பண்றாங்க. அவங்க எல்லோரையும் விளையாட வைக்கப் போறேன்’னு சபதம் பண்ணிட்டு ஏதேதோ பண்ணிட்டிருக் கான்...’

– மகன் நாவுக்கரசு எழுதியிருந்த கடிதத்தை மேற்கொண்டு படிக்கவே தோன்றவில்லை கிழவருக்கு. அப்படியே நெஞ்சோடு அணைத்துக் கொண்டார். அந்தக் காகிதம், அவருக்குப் பதினொரு வயதுப் பேரன் யஷ் வந்த்தையே அணைத்துக்கொண்ட உணர்வை ஏற்படுத்த நெகிழ்ந்து போனார்.

விவரமறிந்த வயதுக்குப் பின் முதன்முறையாகப் போன மாதம் அப்பாவுடன் வந்திருந்தான் யஷ்வந்த் “இதுதான் நம்ம வீடாப்பா...?” என்று விழிகள் விரிய ஆச்சரியப்பட்டான். கிழவரின் கால்களைத் தொட்டு வணங்கினான். கிழவர் இன்ப அதிர்ச்சியில் ஆழ்ந்து விட்டார். பேரனைத் தூக்க முயன்று, முடியாததால், அப்படியே இறுக்கிக் கட்டிக்கொண்டார். ‘இந்தக் காலத்தில் இப்படியொரு குழந்தையா...?’

கிழவர் சமைத்ததைச் சாப்பிட்டார்கள்.

"தாத்தா! இங்க தனியா ஏன் இருக்கீங்க...? எங்க வீட்டுக்கு வாங்களேன்..." என்றான் யஷ்வந்த்.

"வரலாம்தான்! இத்தனை நாள் உங்கப்பா மூணு வருஷத்துக்கு ஓர் இடம்னு வடக்கு முழுக்கச் சுத்திட்டு இருந்தான். இப்போ சென்னை வந்திருக்கீங்க. இதுவும் எத்தனை நாளோ...? உங்களை நம்பி நான் சென்னை வந்தா, அப்புறம் நீங்க வடக்கே கிளம்பும்போது நான் என்ன செய்வேன்...?"

"அங்கேயும் வாங்க..."

"எதுக்கு ராசா...? பாஷையும் தெரியாது, மனுஷங்களும் தெரியாது. அங்கே வந்து ஊமை வாழ்க்கை வாழணும் இங்கே சௌகரியமா இருக்கேன். இப்படியே இருந்துட றேனே..."

கிழவரின் குரலில் கொஞ்சம் ஏக்கமும் இருந்தது.

சொத்து, வயல், வீடு என்று வசதியான பரம்பரையில் வந்தவர் அவர். ஒரே மகன் நாவுக்கரசு 'படிப்பதற்காகப் பட்டணம் போகிறேன்' என்று கிளம்பியபோதே, கொஞ்சம் வருத்தமாகத்தான் இருந்தது. படிப்பு முடிந்து, வடஇந்திய கம்பெனி ஒன்றில் வேலை என்று அவன் கிளம்பிப் போனதில் உள்ளூர ஒடிந்துபோனார். இந்தச் சூழலில் மனைவியும் இறந்துபோக, தனியாகி விட்டார். மகனுக்குத் திருமணம் சம்பந்தமான முயற்சிகளில் இறங்க வழி வைக்காமல், அவனே தன்னுடன் வேலை பார்க்கும் ஒரு

பெண்ணைத் தேர்ந்தெடுத்துச் சொல்லிவிட, அவனுடைய வாழ்வில் தன் பங்கு என்பதே இல்லையோ என்னுமளவு மனதளவில் ஒடுங்கிப்போனார்.

எதையும் வெளிக்காட்டிக் கொண்டவரில்லை அவர். மனைவியுடன் மகன் வந்து நின்றபோது மனதார வாழ்த்தினார். மூன்று நாட்கள் அவரை உட்காரவைத்து, மருமகள் சமைத்துப் போட்டதில் ஜென்மமே சாபல்யம் அடைந்து விட்டதாகப் பெருமிதப்பட்டுக் கொண்டார். அதன்பிறகு எல்லாமே கடிதங்கள்தான். எப்போதாவது சில வருடங்களுக்கு ஒரு முறை மகனுடைய தரிசனம் கிடைக்கும். அவ்வளவு தான்...

இப்போதுகூட நாவுக்கரசு மட்டும்தான் கிராமத்துக்கு வருவதாக இருந்தது. சில வருஷங்களாகப் பிரச்சினையில் இருந்த ஒரு நில விற்பனை சம்பந்தமாக அவருடைய வரவு அவசியம் என்று கிழவர் கடிதம் எழுதியிருந்தார். முடிந்தால், அவர் இதுவரை பார்த்தே இராத பேரனையும் அழைத்து வரும்படி எழுதியிருந்தார். யஷ்வந்த் கிராமத்துக்கு வந்தது அப்படித்தான். வந்த வேலை முடிந்த மறுநாளே கிளம்பினார் நாவுக்கரசு.

கிழவருக்குத் தாளவில்லை, "கொஞ்ச நாள் இருந்துட்டுப் போயேன்..." என்று கெஞ்சினார்.

"ஐயோ! எனக்கு லீவே கிடையாது..."

"எனக்கு லீவுதாம்ப்பா... நான் தாத்தாகூட ஒரு வாரம் இருந்துட்டு வர்றேன்..." என்றான் யஷ்வந்த் பளிச்சென்று.

நாவுக்கரசு இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. கிழவருக்கு ஆனந்த அதிர்ச்சி.

பேரன் மிகவும் சமர்த்தாக இருந்தான். காலையில் தாத்தா கூடவே எழுந்தான். அவர் சமையல் செய்தால் ஒத்தாசை செய்தான். அவருடன் வயலுக்கும் தோப்புக்கும் போனான். பசிய ஈரம் கலந்திருந்த கிராமத்துக் காற்றை அனுபவித்துச் சுவாசித்தான்.

கிழவருக்கு ஆறுதலான சந்தோஷம் - மகனும் மருமகளும் வடஇந்தியாவிலேயே சுற்றிக்கொண்டிருந்தும் பிள்ளையை அங்கேயே பெற்று வளர்த்திருந்தும் அவனுக்குத் தமிழில் பேசச் சொல்லிக் கொடுத்திருப்பது.

ஒரு நாள் தோப்பிலிருந்து திரும்பும்போது, சிறிய தொரு மைதானம் போலிருந்த வெளியில் சிறுவர்கள் சிறிய பந்தை எறிந்து விளையாடிக்கொண்டு இருந்தார்கள்.

"என்ன விளையாடறாங்க தாத்தா...?"

"குழிப்பந்து..."

"அச்சா!"

"எப்படி விளையாடறாங்கன்னு பார்க்கணுமா...?" என்றபடி அவனை, அவர்களிடம் அழைத்துப்போய் அறி முகம் செய்துவைத்தார்.

"டேய்! உங்க குழிப்பந்து விளையாட்டு பற்றிச் சொல்லிக் கொடுங்கடா..." என்று ஆணையிட்டார்.

"அப்படின்னா, முதல்ல இருந்து ஆடுவோம்டா..." என்றான் ஒருவன் அவசரமாக.

"ஏய்... அவன் எட்டுப் பிள்ளை பெத்துட்டாண்டா... அதான் தப்பிச்சுக்கலாம்னு பார்க்கிறான்..." என்று ஒருவன் சொல்ல, மற்றவர்கள் அவனைக் கேலிசெய்து சிரித்தார்கள்.

யஷ்வந்த்துக்கு அவர்களின் பேச்சுகளே, அந்த விளை யாட்டு பற்றிய சுவாரஸ்யத்தைக் கூட்டிவிட... அவர்கள் விளையாடும் முறையை உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கினான்.

ஒரு மரத்தையோ, சுவரையோ பின்தடுப்பாகக் கொண்டு தரையில் நான்கடிக்கு நான்கடி அளவில் ஒரு கட்டம் கட்டி, அதற்குள் சிறிது சிறிதாக ஒரு பந்து விழும் அளவுக்கு குழிகள் தோண்டிக் கொண்டார்கள்.

அந்தக் குழிக் கட்டத்திலிருந்து பத்தடி தள்ளி ஒரு கோடு கிழித்துக் கொண்டார்கள். ஆட்டத்தைத் தொடங்கி னார்கள்.

முதலில் ஒரு பையன் அந்தப் பந்தைக் குழிகளை நோக்கி உருட்டிவிட வேண்டும். அது எவருடைய குழியில் விழுகிறதோ அந்தக் குழிக்குச் சொந்தக்காரன் அதை எடுத்து, எவர் மீதாவது எறியவேண்டும். குறி தப்பாமல் பந்து யார்மீதாவது பட்டுவிட்டால், அடிபட்டவன் தோற்ற தாகவும், பந்து குறி தவறினால் எறிந்தவன் தோற்றதாகவும் கருதப்பட்டான். தோற்றவன் குழியில் சிறிய புளியங் கொட்டை ஒன்றைப் போட்டு, அவன் ஒரு பிள்ளை பெற்றதாகச் சொல்லிக்கொண்டார்கள். யார் முதலில் பத்துப்

பிள்ளை பெற்றானோ, அவனைப் 'பந்து எறி, கைமுட்டி, கால் முட்டி, மூக்கு முட்டி, நாக்கு முட்டி' என்றெல்லாம் பல விதமான தண்டனைகளுக்கு உட்படுத்தி எல்லோரும் மகிழ்ந்தார்கள்.

விவரமான சிறுவர்கள் குழிகளைத் தமதாக்கும்போதே பந்து கிட்டத்தட்ட விழவாய்ப்பே இல்லாத ஓரத்துக் குழி களைத் தேர்ந்தெடுத்தார்கள். அதேபோல, விளையாட்டின் போதும் குழிகளைவிட்டு அதிக தூரம் தள்ளிப் போய் விடாமலும் மிகவும் நெருங்கியும் நிற்காமலும் ஒரு பாது காப்பான தூரத்தில் நின்றுகொண்டார்கள். பந்து தன் குழியில் விழுந்தால், விரைந்து ஓடி எடுப்பதுடன் யார்மீது அடிப்பது சாத்தியம் என்பதை விரைந்து தீர்மானிக்கும் வேகம்தான் வெற்றி தந்தது. குச்சிமாதிரி ஒல்லியாக இருக்கும் சிறுவர்கள் அழகாகத் தப்பித்துக்கொண்டார்கள். பெரிய முதுகுடன் குண்டாக இருப்பவர்கள் நிறைய அடிவாங்கிக் கேலிக் குள்ளானார்கள்.

ஆட்டம் ஆரம்பித்த கணத்தில் எழுகிற 'ஓகோ' என்கிற கூச்சலும் சத்தமும் கும்மாளமும் உற்சாகமும் இறுதிவரை கூடிக் கொண்டேதான் போனது.

யஷ்வந்த் அன்று முழுக்க அதே பிரமிப்பில் இருந்தான்.

"இந்த விளையாட்டெல்லாம் உங்க ஊரில் கிடை யாதா...?" என்று கேட்டார் தாத்தா.

உதடு பிதுக்கினான் யஷ்வந்த்.

"அப்புறம் நீ என்னதான் விளையாடுவே..."

"டெட்வின், மைன்ஸ் கிரீப்பர், வேர்ட்ஹை..."

"என்ன இதெல்லாம்...?"

"கம்ப்யூட்டர் விடியோ கேம்ஸ்!"

"யார்கூட...?"

"தனியாதான்..."

"தனியா விளையாடினா, அதுக்குப் பேர் விளை யாட்டா...? விளையாட்டுன்னா உடம்பு, மூளை, மனசு மூணுக்கும் வேலை வேணும். விளையாடி முடிச்சு மூணும் களைக்கணும். ஆனா, அந்தக் களைப்பு ஆனந்தக் களைப்பா இருக்கணும். உற்சாகத்தை அதிகப் படுத்தற களைப்பா இருக்கணும். களைப்பு புது வேலையில் ஈடுபட வைக்கணும். உங்க பட்டணத்து விளையாட்டில் இதெல்லாம் இருக்கா...?"

யஷ்வந்த் புரியாமல் விழித்தான்.

"உங்க பட்டணமே தலைகீழாப் போச்சு ராசா... தனியா பண்ண வேண்டிய காதலைக் கூட்டம் கூடின இடத்துல பண்றீங்க. கூட்டமா விளையாட வேண்டிய விளையாட்டைத் தனியா விளையாடறீங்க..."

யஷ்வந்த் சிந்தனையுடன் நடந்து கொண்டிருந்தான். திடீரென்று "தாத்தா! நாளைக்கும் நான் இந்த விளை யாட்டைப் பார்க்கலாமா...?" என்று கேட்டான்.

"தாராளமா... விளையாடணும்னாகூட விளையாடு..."

"வேணாம் தாத்தா... அதன் ரூல்ஸ் எல்லாம் தெரிஞ்சுக்கப் போறேன்..."

"தெரிஞ்சு..."

"சென்னையில எல்லோருக்கும் சொல்லிக் கொடுக்கப் போகிறேன்..."

கிழவர் சிரித்துக்கொண்டார். சிறுவன் விவரம் தெரி யாமல், ஏதோ பிரமிப்பில் தன்னிலை மறந்து பேசுகிறான் என்றுதான் நினைத்தார்.

இப்போது நாவுக்கரசிடமிருந்து வந்திருக்கும் கடிதம் மூலம் பேரனின் மன உறுதியையும் நினைத்ததைச் சாதித்தே தீரும் லட்சிய வெறியையும் அறிந்து பூரித்துப்போனார்.

'என்னுடைய பரம்பரை இரத்தம் கிராமத்து மண்ணைத் தொட்டவுடன் இன்னும் ஒரு வாரம் இருந்து வருகிறேன்' என்று சொன்னதே அந்தத் துடிப்புக்கு என்ன பெயர்...? 'இந்த மண்ணின் விளையாட்டை, இன்று நகரத்தில் போய்ப் பரப்புவேன்' என்று போயிருக்கிறதே, இந்தத் தொடர்பை என்ன சொல்லி அழைப்பதாம்...?

மகன் தன்னைவிட்டுப் போவதற்கு முன், மனைவி இறப்பதற்கு முன் இருந்த நிலையை மீண்டும் தொட்டது போல் உணர்ந்தார் கிழவர்.

அடுத்த மாதம் அவரைச் சென்னைக்கு வரச்சொல்லிப் பேரன் அழைப்பதாக மகன் மூலம் கடிதம் வந்தது. உற்சாக மாகக் கிளம்பிப் போனார்.

ரயில்வே ஸ்டேஷனில் இருந்தே அவருடைய கவன மெல்லாம், வழியில் எங்காவது சிறுவர்கள் கூடி விளையாடு கிறார்களா என்று பார்ப்பதில்தான் இருந்தது. ஆங்காங்கே கிரிக்கெட் விளையாடும் காட்சிதான் கண்ணில் பட்டது.

"என்ன ராசா, 'பட்டணத்துப் பிள்ளைகளுக்கெல்லாம் குழிப்பந்து விளையாட்டு சொல்லிக் கொடுத்திருக்கிறேன். எல்லோரும் விளையாடறாங்க'னு லெட்டர் போட்டிருந்தே... என்னைச் சக்கையா ஏமாத்திட்டியேப்பா..." என்றார், வீட்டில் வந்திறங்கியபோது.

யஷ்வந்த் அவரை வேகமாக இழுத்துக்கொண்டு தன் அறைக்குள் நுழைந்தான்.

புத்தக அலமாரிக்குப் பக்கத்தில், ஐன்னலோரமாக மேஜை. அதன்மீது ஒரு கம்ப்யூட்டர். கூடவே, ஒரு கீ - போர்டு. பக்கத்தில் மௌஸ் பேட்... சுழல் நாற்காலியில் ஒன்றும் புரியாமல் உட்கார்ந்தார்.

"இப்போ பாருங்க..."

யஷ்வந்த் செய்பவற்றைப் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

கம்ப்யூட்டர் திரை உயிர் பெற்றது.

ஏதேதோ படங்கள் தோன்றித் தோன்றி மறைய, ஏதேதோ எழுத்துக்கள் மின்னி மறைந்து, ஒரு படம் நின்றது. பக்கவாட்டில் நீள லிஸ்ட் வந்தது.

"என்னிடம் இன்டர்நெட் கனெக்ஷன் இருக்கு தாத்தா. அது மூலமா நெப்போலியன்னு ஒரு சாஃப்ட்வேர்

இன்ஜினியர் எனக்குப் பழக்கம். கிராமத்துல இருந்து வந்ததும் அவருக்கு நம் குழிப்பந்து விளையாட்டின் ரூல்ஸ் எல்லாம் விவரிச்சு ஈ - மெயில் அனுப்பிச்சேன். அவரை வற்புறுத்தி இந்த விளையாட்டுக்கு புரோகிராம் எழுதவெச்சு, கம்ப்யூட்டர் விடியோ கேம்ஸ் லிஸ்ட்டில் சேர்த்துவிட்டேன். இப்போ, எவ்வளவு சிட்டி பாய்ஸ் இதை விளையாடறாங்க தெரியுமா...? லேட்டஸ்ட்டா எடுத்த ஒரு ஈ - மெயில் சர்வேயில், குழிப்பந்து விளையாட்டுதான் பாப்புலாரிட்டி லிஸ்ட்டில் நம்பர் ஒன்! டெமோ பார்க்கறீங்களா...?"

யஷ்வந்த் பேசிக்கொண்டே போனான். அவன் பேச்சு எதுவுமே புரியவில்லை கிழவருக்கு. திரையில் பொம்மை உருவங்கள் பந்தை உருட்டிக் கொண்டும் எடுத்து எறிந்து கொண்டும் இருக்க, இடது வலது உச்சிகளில் 'ஸ்கோர்' என்ற பெயரில் எண்கள் ஓடிக்கொண்டிருந்தன.

✲

7. புகுந்த வீட்டில் என்ன செய்வார்கள்?

"இறக்கி வைடி நாயே... எங்கே பராக்கு பார்த்திட்டிருக்கற எருமை மாடாட்டம்..."

அத்தானின் குரல் கேட்டுப் பதற்றத்துடன் திரும்பி னேன். அக்கா சிரித்தபடியே "அப்பா! அதைக் கொஞ்சம் மெல்லச் சொல்லக் கூடாதா? எல்லோருக்கும் வேடிக்கை காட்டணுமா?" என்றபடியே அவருடைய கையில் இருந்த மூன்று தடிமனான பைகளில் இருந்து ஒன்றை வாங்கிக் கீழே வைத்துக் கொண்டிருந்தாள்.

நான் அருகே ஓடிச் சென்று மற்ற பைகள் உள்ளிட்ட எல்லா சாமான்களையும் இறக்கி, அவற்றிற்குரிய இடங்களில் கொண்டு வைக்க உதவினேன்.

அதன்பிறகு அத்தான் சிரித்தபடியேதான் பேசினார்.

அவர் சற்று முன் சொன்ன வாக்கியத்தைக் கேட்ட போது கோபத்தின் உச்சத்தில் இருக்கிறாரோ என்று எனக்கு ஏற்பட்டிருந்த பயம் இன்னும் என் முகத்தில் படம் விரித்திருக்க வேண்டும். அக்கா என்னைப் பார்த்துச் சிரித்தபடியே "என்ன, ரொம்பப் பயந்திட்டயா. அவங்க கோபத்தில சொல்லலை. என் அட்டன்ஷனைத் தன் பக்கம் இழுக்க இந்த மாதிரிதான் சொல்வார். போன ரெண்டு நாளாத்தான் கவனிச்சிருப்பியே இது இங்கே சகஜம்" என்றாள் சாதாரணமாக.

கல் எறியப்பட்ட குளம் போல் என் மனதின் பரப்பில் சஞ்சல அலைகள் அந்த பிக்னிக் டிரிப் முழுதும் என் கவனம் சுற்றுப்புற அழகை ரசிப்பதற்குப் பணியவே இல்லை. அத்தானின் வாயிலிருந்து வெளிப்படும் வார்த்தை களின் மீதே இருந்தது.

அக்கா வீட்டுக்குப் போகப் போகிறேன். அவளைப் பார்க்கணும் போலிருக்கு என்று நான் சொன்னபோது அம்மாவும் அப்பாவும் முதலில் தடுக்கவே முயற்சி செய்தார்கள். "கல்யாணமாகி நான்கு மாதம் கூட ஆகலை எதுக்குடா அடிக்கடி போய்த் தொந்தரவு செய்யற" என்றார்கள்.

"ஜஸ்ட் இரண்டு நாட்கள் மட்டும்" என்றுதான் அனுமதி வாங்கினேன். கல்லூரியில் ஸ்டடி ஹாலிடேஸ் விட்டிருந்தார்கள். அக்கா பற்றிய நினைவுகளும் என்னுள் நிறையக் கிளர்ந்திருந்தன. எனக்கும் அவளுக்கும் இருந்த பாச நெருக்கம் உறவுமொத்தமும் அறிந்த விஷயம்.

கிளம்பும் முன் நிறைய முன்னெச்சரிக்கை அறி வுரைகள்.

அங்கே போய் காலையில் ரொம்ப நேரம் தூங்காதே நைட் டி.வி. பார்க்கறேன், அக்கா கூடப் பேசிட்டிருக்கேன் என்று நேரம் கடத்தாமல் படுத்திடணும். அங்கே போகணும் இங்கே போகணும்னு அவங்களை நச்சரிக்கக்கூடாது. அக்காவை அவங்க முன்னால் கேலி செய்யக்கூடாது. அவளுடைய சமையலையோ அவள் வேலை செய்யற

விதத்தையோ இங்கே குறை சொல்ற மாதிரி அங்கே சொல்லக் கூடாது. சுருக்கமாகச் சொன்னால் அங்கே இருக்கறவ உன் அக்காங்கற நினைப்பை விட உன் அத்தானின் பொண்டாட்டி, அந்த வீட்டோட மருமகள்ங்கற நினைப்போட தான் அவளிடம் பேசணும் சரியா -

சரி சரி என்று தலையாட்டினேன் -

அம்மா தனியாகக் கூட்டிப் போய்ச் சொன்னாள். "கல்யாணத்துக்கப்புறம் முதல் தடவையா அவளைப் பார்க்கப் போற அவகிட்ட நிறைய மாற்றங்கள் தெரியலாம். என்னக்கா ரொம்ப மாறிட்டீங்க அப்படின்னெல்லாம் சொல்லிக் காட்டிடாதே தெரியுதா?"

ஏதோ ஒருவித த்ரில் உணர்வோடு தான் அக்கா வீட்டுக்கே வந்தேன். நல்ல வேளையாக மாமியார் வீட்டுடன் இல்லாமல் தனிக்குடித்தனத்தில் இருக்கிறாள். இல்லை என்றால் என்னை அப்பாவும் அம்மாவும் விட்டே இருக்க மாட்டார்கள் என்று தோன்றியது.

கதவு திறந்த அத்தானுக்கு வணக்கம் சொன்னேன்.

"ஹேய்! என்ன இந்த ஃபார்மாலிட்டி எல்லாம்! வாப்பா. உள்ளே வா. நல்லா இருக்கியா? தனியாத்தான் வந்தியா? வீட்டில் எல்லாரும் நல்லா இருக்காங்களா?" என்று அவர் சகஜமாகக் கேள்விகளை அடுக்கியதில் பிறந்த நிம்மதி அடுத்த கணம் அவர் உள்ளே திரும்பி, "ஏய்! உன் தம்பி வந்திருக்காண்டி உள்ளே என்ன பண்ணிட்டிருக்கற?" என்று குரல் கொடுத்ததில் உறைந்தது.

அக்கா கோபமாக வெளிப்படுவாள் என்று எதிர்பார்த்த எனக்கு அவள் ஆச்சர்யமும் சிரிப்புமாக வெளிப்பட்டதே நம்ப முடியாத ஒன்றாக இருந்தது.

அவளுக்கு யாரும் 'டி' போட்டுக் கூப்பிடுவது பிடிக்காது. எங்கள் வீட்டில் அப்பாவும் அம்மாவும் வாம்மா போம்மா என்றே தாங்காத குறையாகச் சொல்லி அழைப் பார்கள். நான் அக்கா நீங்க நாங்க என்கிற அளவில் பேசுவது வழக்கம்.

ஒரு முறை எங்கள் வீட்டில் ஏதோ விசேஷம். உறவினர்கள் எல்லோரும் கூடியிருந்த நேரம் எங்கள் பெரிய மாமா ஹாலில் பேசிக் கொண்டிருந்தபோது அவருடைய மகளிடம் "ஏண்டி கமலம்! குடிக்கக் கொஞ்சம் தண்ணி கொண்டாடி" என்றார்.

அவர் சொன்னது யாருக்கும் ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. மாமா குடும்பத்தில் எல்லோருக்கும் மூத்தவர் என்பதோடு, தன் மொத்த வாழ்க்கையையும் ஏர்ஃபோர்ஸ் சர்வீஸில் கழித்தவர் என்பதால், அவருடைய முரட்டுத்தனம் குறித்த அச்சம் மற்றவர்களுக்கு உண்டு. அவர் வாயிலிருந்து முண்டை, மூதேவி முதலான மட்ட மான வார்த்தைகள் அவற்றிற்குரிய பொருளில் இல்லாமல் அவருடைய ஆளுமை வெளிப்பாடாக அடிக்கடி வெளி வருவது வழக்கம்.

அன்றும் அதேபோல்தான் என்று சகலரும் சும்மா இருக்க அக்கா வாய் திறந்தாள்.

"ஏன் மாமா சமஞ்ச பொம்பளைப் பிள்ளையை அடி புடின்னு அழைக்கறீங்களே, நல்லாவா இருக்கு? ஏதோ சின்னப்புள்ளைல ஓகே. இந்த வயசுக்கப்புறமும் சொல்லா தீங்க. எனக்குப் பிடிக்கவே இல்லை எங்கப்பா மட்டும் இப்படிக் கூப்பிட்டார்னா என்னால தாங்கவே முடியாது."

மாமா ஆடிப்போனார். அவருடைய அதிர்ந்த முகம் இன்னும் என் நினைவில் உள்ளது. இதுவரை யாரும் அவரிடம் சொல்லாத விஷயம் போலும். அதுவும் சபை நடுவில் குடும்பத்தின் கடைசிப் பெண் பிள்ளையான அக்கா வாயிலிருந்து வரும் என்று கனவிலும் நினைத்தி ருக்க மாட்டார்.

அவருடைய பெண்ணாவது 'எங்கப்பா என்னைத் தானே சொன்னார் உனக்கென்ன?' என்று சொல்லி இருக்கலாம். அவளும் "யாருக்குத்தான் பிடிச்சிருக்கு? சொன்னா கேட்டுக்கவா போறார் அப்பா. எல்லாம் மிலிட்டரி பிராட் அப். அப்படித்தானே இருப்பாங்க" என்றாள்.

மாமா அந்த இடத்தைவிட்டே அமைதியாக எழுந்து போய்விட்டார். அப்புறம் மற்ற பெண்கள் அவரை சமாதானப்படுத்த எழுந்து போனதும், அக்காகூட அவரிடம் அவசரமாக ஓடிப்போய் மன்னிப்பு கேட்க முயன்றதும், அவர் "பரவாயில்லைம்மா நீ சொன்னது சரிதானே இனி மேலாவது நான் பெண்களை மரியாதையாய் பேசக் கத்துக்கறேம்மா" என்றதும் மற்றவர் சொல்லி ஞாபகம் இருக்கிறது எனக்கு.

எங்கள் அம்மாவிற்குத் தன்னுடைய மூத்த அண்ணனை சபை நடுவே அவமானப்படுத்தியது போல் மகள் பேசிவிட்டாளே என்கிற ஆதங்கம் ஒருபுறம் இருந் தாலும் அக்காவைக் கண்டிக்கும் போதுகூட கடும் வார்த்தை களை உபயோகிக்கவில்லை.

அப்பாவோ ஒருபடி மேலாகவே போய், "அவள் சொன்னதில் என்ன தப்பு? உங்கள் எல்லோர் மனதிலும் இருந்ததை அவள் வெளிப்படையாகச் சொல்லிட்டாள். அங்கே இருந்த எல்லாப் பொம்பளைங்களுக்கும் உள்ளுர சந்தோஷம் தான்னு கேள்விப்பட்டேன்" என்றார் அக்கா சார்பில்.

அப்படி வளர்ந்தவள் அக்கா. குடும்பத்தில் எல் லோருக்கும் செல்லம். அதைத் தக்க வைத்துக் கொள்வது போல் நடந்தும் கொள்வாள். வீட்டு வேலைகளைப் பம்பர மாய்ப் பார்ப்பாள். மென்மையாகப் பேசுவாள். பள்ளியில் எந்த டீச்சரும் திட்டி விடக்கூடாது என்பதற்காகவே முதல் மதிப்பெண்ணிலிருந்து இறங்காமல் பார்த்துக் கொண்டாள். இந்தக் காரணங்களாலேயே அம்மா அப்பாவுக்கு அவள் உயிர். அவளுக்கு மாதுளம் பழம் பிடிக்கும். அதனால் அப்பா அதை உரித்து முத்துக்களைச் சேகரித்துக் கிண்ணத் தில் போட்டுக் கொடுப்பார். ஆரஞ்சுப் பழம் பிடிக்கும். அம்மா சுளை உரித்து தோல் நீக்கி தட்டில் வைத்து நீட்டுவாள்.

"இவ்வளவு தாங்கறீங்க! நாளை புருஷன் வீட்டில் என்ன செய்வாங்க?" என்று கேட்டிருக்கிறேன்.

"ம்! புருஷனா வர்றவர் தாங்குவார்" என்பாள்.

"அதெல்லாம் போகிற இடத்தில் தானா அட்ஜஸ்ட் ஆயிடுவா. அதானே பெண் பிறவி?" என்பாள் அம்மா.

பள்ளியில் படிக்கிற காலத்தில் தமிழ்ப்பாடத்தில் ஒரு சங்கப்பாடல் இருந்தது. பெரிய பணக்கார வீட்டுப் பெண் ஒருத்தி ஏழை வீட்டுக்கு வாழ்க்கைப்பட்டுப் போனாளாம். அவள் எப்படிக் குடும்பம் நடத்துகிறாள் என்று செவிலித் தாய் பார்க்கப் போனாளாம். பிறந்த வீட்டின் வசதிகள் வாய்ப்புகள் எதையும் எண்ணிப் பார்க்காமல், அந்தப்பெண் கணவனுடைய ஏழ்மையிலும் செம்மையாக எளிய வாழ்க்கை நடத்தியது கண்டு வியந்தாளாம் என்கிற பொருள் பட வரும் பாடல் அது.

அதெப்படி சாத்தியம் என்று அடிக்கடி தோன்றும். பெண் புகுந்த வீட்டின் இயல்புக்கு ஏற்ப விரல் சொடுக்கி னாற்போல் தன் இயல்பு, அத்தனை கால வளர்ப்பு உள்ளிட்ட சகலத்தையும் துறந்து புதுப்பிறப்பாக மாற இயலுமா அல்லது அப்படியே அந்த நாள் முதலாகச் சொல்லிச் சொல்லியே பெண்களை அவர்களின் சம்மதமோ ஒப்புதலோ இல்லாமலேயே மாறிவிட்டதாக முத்திரை குத்தி, அவளுள் அந்த மாற்றத்தை ஒட்ட வைக்க முயற்சி நடக்கிறதா?

அக்கா வீட்டில் என் கேள்விகளுக்கு விடை கிடைப்பது போல் இருந்தது. பெண் என்பதன் பரி மாணங்கள் என் அறிவின் எல்லைகளையும் மீறிய பிரமாண்டம் என்று புரிந்தது.

இரண்டே நாட்களில் கிளம்புவதாக இருந்தேன். அத்தானின் வற்புறுத்தலின் பேரில் அதிகமாக இரண்டு நாட்கள் இருந்தேன். மூவரும் சினிமா போனோம். பிக்னிக் போனோம். ஓட்டல்கள் போனோம். கடற்கரை போனோம். வீட்டில் நிறையப் பேசினோம்.

அத்தான் சகஜமாகப் பழகினார். என்னிடம் பிரியமாக இருந்தார். அக்காவை நிறைய கேலி செய்தார். நானும் அக்காவும் ஏதாவது பேசிக் கொண்டிருந்தால் விஷயம் பொதுப்படையாக அன்றிக் கொஞ்சம் தனிப்பட்டதாக இருந்தால்கூடச் சட்டென்று விலகி, "பாசமலர்கள் கொஞ்சிக் கோங்கப்பா. நான் ஒதுங்கிக்கறேன்" என்று நாசூக்கு காட்டினார்.

அக்கா குறித்து எனக்குச் சொல்லப்பட்டிருந்தவை மனதில் ஆழமாகப் பதிந்திருந்ததால், அவளிடம் என் னென்ன மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று கணக் கெடுப்பதைத் தவிர்த்தேன்.

சந்தோஷமாக நிறைவாக இருந்தது. உறுத்தலாக இருந்த ஒரே விஷயம் அத்தானுடைய கடுமையான சொற்பிர யோகங்களும், அவற்றை அக்கா இயல்பான புன்சிரிப்புடன் எந்தவிதக் காய வெளிப்பாடும் இன்றி எதிர் கொண்டதும் மட்டும்தான்.

அவளிடமே கேட்டு விடலாமா என்று எழுந்த எண்ணத்தைக் கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டேன் அம்மா வும், இலக்கியங்களும், சினிமாவும், கதைகளும் சொல்வது போல் அவளுள் இயல்பாகவே அத்தானுடைய கடுமையான

வார்த்தைகள் ஒரு பொருட்டாகவே இல்லாது இருந்திருந் தால், என் கேள்வி அவளுடைய அமைதியான வாழ்க்கை யில் சலனம் ஏற்படுத்துவதாக ஆகிவிடக் கூடாதே என்கிற பயமும் எழுந்தது.

கிளம்புகிற அன்று நெடுநேரம் பேசிக் கொண்டிருந் தோம். அம்மா, அப்பாவின் உடல்நலம் குறித்து அக்கா நெகிழ்ச்சியோடு பேசிக்கொண்டிருந்தாள். "அவர்களை வரச்சொல்லு தம்பி, ரொம்பத் தேடுது" என்றாள். என்னுடைய படிப்பு குறித்து அக்கறை தெரிவித்தாள். நிறைய அறிவுரைகள் சொன்னாள்.

திடீரென்று பேச்சுக்கு நடுவில் "பெரிய மாமா எப்படி இருக்காங்க தம்பி?" என்று கேட்டாள் பளிச்சென்று.

வியப்புடன் நிமிர்ந்தேன்.

"கல்யாணத்துக்கப்புறம் அவங்களைப் பார்க்கவே இல்லை. அப்பப்போ அவங்க ஞாபகம் வந்திட்டே இருக்கும்"

அவளுடைய பிரயத்தனம் மீறி ஒரு விநாடி கண்கள் பனிக்க முயல்வது தெரிந்தது.

✲

8. பலி

அந்த இருபது நாட்களும் லாரி போன்ற கனரக வாகனங்களின் ஹார்ன் ஒலி கேட்கும் போதெல்லாம் மனத்தினுள் ஓர் இறுக்கம் தோன்றிய வண்ணம் இருந்தது.

சிறிய பூனை லாரியின் சக்கரத்தில் நேராகத் தாவி விழுந்து, விநாடி நேரத்தில் கூழாகிப் போன கோரக் காட்சி, அப்படியே கண்முன் விரிந்து கஷ்டப்படுத்தியது.

யாரையும் நோக முடியாத சிறிய நிகழ்ச்சிதான்.

ஒருவேளை நெருக்கத்தில் பார்த்த திடீர் அதிர்ச்சி என்பதால் பதிந்து போனதோ, அல்லது இந் நிகழ்ச்சி பற்றி மற்றவரிடம் பகிர்ந்து கொள்ள முடியாத்படி என் வாய்க்கு சதீஷ் பூட்டுப் போட்டதால் ஏற்பட்ட அழுத்தத்தின் விடு படல் முயற்சி இப்படிக் காட்சியாக வெளிப்பட்டதோ...

மற்றவர்களிடம் இது பற்றிப் பேசிக்கொள்ளவில்லை என்றாலும் கூட சதீஷின் மனைவி ஷோபனாவிடம் இந்த விஷயத்தை மறைக்க வேண்டியிருக்கிறதே என்பதில் எனக்கு வருத்தம் இருக்கத்தான் செய்தது.

சதீஷ் இதைப் பற்றி ஷோபனாவிடம் சொல்லிவிட வேண்டாம் என்று கையைப் பிடித்துக் கெஞ்சாத குறையாக மன்றாடினான் அன்று.

அலுவலகம் போக எங்கள் இருவரில் யாராவது ஒருவர்தான் காரினை எடுப்பது வழக்கம். பதினைந்து கிலோ

மீட்டர் பயணம், எங்கள் நட்பின் நெருக்கம் காரணமாக பேசிக்கொண்டே செல்வதில் அலுப்பைத் தருவதில்லை.

ஒரு வாரம் நான் என்னுடைய காரில் அவன் வீடு சென்று அவனையும் ஏற்றிக் கொண்டு பயணப்படுவதும் மறுவாரம் அவன் தன்னுடைய காரில் என் வீடு வந்து என்னை ஏற்றிக் கொண்டு செல்வதும் வாடிக்கை.

அன்று நாங்கள் அவனுடைய காரில் அலுவலம் போய்க் கொண்டிருந்தோம்.

"என்ன சதீஷ்? இன்னும் எத்தனை நாளுக்கு கேன்டீன் சாப்பாடு? மேடம் என்னிக்கு வர்றாங்க?"

"நாளைக்கு சாயங்காலம் வந்திடுவா. நிஜமாகவே வீடு ரொம்ப வெறிச்சோடி இருக்குப்பா. அவளும் பிள்ளைகளும் வந்தாத்தான் நிறையும்னு நினைக்கிறேன்."

சிரித்தேன்.

இதே சதீஷ், அவர்கள் வீட்டில் இருக்கும்போது டி.வி.யில் விரும்பிய சேனல் பார்க்க முடியாதபோது 'சே, உன்னைப் போல பிரமச்சாரியா இல்லாமல் போனேனே, சரியான ஜெயில் பிழைப்புடா, ஒரு விஷயத்திலும் சுதந்திரமா இருக்க முடியறதில்லை' என்று அவர்கள் முன்னிலையிலேயே புலம்புவது ஞாபகம் வந்தது.

இந்த தனிமைப் புலம்பலையும் ஷோபனா வந்தவுடன் சொல்ல வேண்டும்.

வீட்டில் ஒற்றைப் பிறவியான எனக்கு தங்கை என்று ஒருத்தி இருந்தால் எப்படி இருக்க வேண்டும் என்றொரு

ஐடியல் கற்பனை உண்டோ அது அச்சு அசலாய்ப் பொருந்தியவள் ஷோபனா.

என்னிடம் அவள் காட்டும் அன்பு, நம்பிக்கையின் பாற்பட்ட நிலையைத் தொட்ட ஒன்று.

ஒரு பெண்ணுக்கும் அவளுடைய கணவனின் நண்பனுக்கும் ஏற்படுகின்ற நட்புணர்வு வித்தியாசமான ஒன்று. பல படிகள் - நிலைகள் உள்ள உறவு அது. முதலில் அறிமுகம் என்பதில் தொடங்கி, கணவன் அவனைப் பற்றிச் சொல்கிற வார்த்தைகளால் அவன் குறித்து ஒரு பிம்பத்தை ஏற்படுத்திக் கொண்டு, பின் நேரடியாகவும் மறைமுகமாகவும் அவனைப் பற்றி அறிய வருகிற விஷயங்களை வைத்து, அந்த பிம்பத்தில் திருத்தங்கள் செய்து, சொந்தமாக ஒரு முடிவுக்கு வந்த பிறகு, அந்த நட்புறவு நம்பிக்கை என்கிற தளத்தைத் தொடுகிறது.

மிகக் குறைவான ஓரிரு நண்பர்களால் மட்டுமே அத்தகைய நிலையை அடைய முடிகிறது.

ஷோபனா விஷயத்தில் நான் அந்த நிலையை அடைந்திருந்தேன்.

சில சமயங்களில் சதீஷ் மீது அவள் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரும் போதெல்லாம் என்னுடைய கருத்துதான் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரும்.

"நீ எப்பவும் அவள் சப்போட்டுதான்" என்பான் சதீஷ் போலியாகக் குறைபட்டுக் கொள்ளும் குரலில்.

"அவங்க கொடுக்கற காபிக்காகவே நான் என்ன வேண்டுமானாலும் செய்தாக வேண்டும். அதை தினமும் குடிக்கிற நீ எப்படி அவங்களை எதிர்த்துப் பேச முடியுது?"

"அப்படிப் போடு அரிவாளை. இந்த ஐஸுக்காகவே இன்றைய நைட் டிபன் இங்கே உனக்கு ஏற்பாடாயிடுமே" என்று சிரிப்பான் சதீஷ்.

"ஆமாம் சதீஷ்! எனக்கும் கூட மேடத்தின் காபி குடிக்சு ரொம்ப நாளான மாதிரி இருக்கு" என்றேன்.

விரைந்து கொண்டிருந்த கார் டிராபிக் ஜாம் ஒன்றில் நின்றது.

இரண்டு பக்கமும் நீளமான வாகன வரிசைகள் மெல்ல ஊர்ந்து கொண்டிருந்தன.

செக்யூரிட்டி செக்கிங் என்று ஒவ்வொரு வாகனமாக அதிகாரிகள் சோதனையிட்டுக் கொண்டிருந்தார்கள். எங்கள் காரையும் பார்த்த அதிகாரி டிக்கியையும் திறந்து காட்டிடுங்க என்றார். இருவரும் இறங்கிப் போய் டிக்கி திறக்க, உள்ளே இருந்து பளிச்சென்று தாவியது அந்தப் பூனை. எதிர்ச் சாரியில் மெல்ல ஊர்ந்து கொண்டிருந்த அந்தப் பெரிய டிரக்கின் பின்புற இரட்டைச் சக்கரத்தின் அடியில் நேராகப் போய் விழுந்த மாத்திரத்தில் கூழாகி விட்டிருந்தது.

அதிர்ந்து போனேன்.

"ஐயோ" என்ற கத்தியவனாகத் தலையில் கை வைத்தான் சதீஷ்.

டிக்கியில் ஒன்றுமில்லை என்று சமாதானம் அடைந்த அதிகாரி எங்களைப் போகச் சொல்ல, "ஸ்வீட்டி எப்படிடா காருக்குள் வந்தது?" என்று கேட்டேன் காரில் ஏறியபடி.

"தப்புப் பண்ணிட்டேன். நான்தான் அதை டிக்கியில் வைத்தேன். மறந்தே போனேன்..." என்று சலித்துக் கொண்டான். தொடர்ந்து "ஷோபனாவுக்கு நான் என்ன பதில் சொல்வேன்" என்று புலம்ப ஆரம்பித்தான்.

அவனைத் தேற்றி விஷயத்தைக் கேட்டறிந்தேன். ஷோபனாவின் செல்லப் பிராணியான இந்த ஸ்வீட்டியை சதீஷுக்கு எப்போதுமே பிடிக்காது. அவளுக்காக சகித்துக் கொண்டிருப்பவன். இப்போது அவள் ஊருக்குப் போயிருக்கும் சமயம் இதையும் பராமரிக்கும் பொறுப்பு இருந்திருக்கிறது. கூடியவரை ஒழுங்காக பால், சாப்பாடு என்ற கொடுத்து வந்திருக்கிறான். கடந்த இரண்டு நாட்களாக அந்தப் பூனை உடல் நலக் குறைவினாலோ கொழுப்பேறிப் போனதாலோ வீட்டிற்குள்ளேயே கழிந்து வைத்து அசிங்கம் செய்திருக்கிறது. எரிச்சலின் உச்சத்தில் அதனை எங்காவது கொண்டு விட்டுவிட எண்ணி, புறப்படும் சமயத்தில் காரின் டிக்கியில் போட்டிருக்கிறான்.

இப்போது இப்படி ஒரு முடிவு வரும் என்று யார் எதிர்பார்த்தார்கள்?

அதன் மீதான பரிதாப உணர்வு வடிந்த மறுகணமே அவனுக்கு ஷோபனா குறித்த பயம் ஆட்கொண்டது.

"வந்ததும் இதைத்தான் தேடுவா. எங்கேயோ ஓடிப் போச்சுன்னு சொன்னா நம்பமாட்டா. அது சாப்பிடவே

மாட்டேன்னுடுச்சு. அதனால எங்க ஆபீஸ் கேன்டீன்ல கொண்டு விட்டுட்டேன். அங்கே எலி நான்வெஜ் எல்லாம் கிடைக்கறதால சந்தோஷமா இருக்குன்னு சொல்லிடப் போறேன்" என்றான் ஒரு முடிவுடன்.

எனக்கு அந்தப் பொய்யில் உடன்பாடில்லை. நடந்ததைச் சொல்லி விட்டால் பத்து நிமிடத்தில் தெளிவு வந்து விடும். பொய் வேண்டாமே என்றேன். பூனையை வெளியே கொண்டு போன ஐடியாவுக்கும் அஜாக்கிரதை யாய் டிக்கி திறந்த தவறுக்கும் வேண்டுமானால் நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொல்லிப் பார்த்தேன்.

சதீஷ் கேட்கவில்லை. "அவள் நம்பமாட்டாள். கேன்டீன் கதை தான் பெட்டர். அதிலும் என் வார்த்தை களை விட நீ சொன்னால்தான் நம்புவா. தயவு செஞ்சு என் வீட்டு அமைதியைக் கெடுத்து சத்தியம் காக்க முயற்சி பண்ணாதே ஸ்வாமி.." என்றான் கெஞ்சலும் எச்சரிக்கையு மாக.

மறுநாள் ஷோபனா ஊரிலிருந்து வந்து சேர்ந்து பத்தாவது நிமிடம் என் வீட்டுக்கு போன் வந்தது. ஸ்வீட்டி பற்றிய விசாரிப்பு. அது பத்திரமாக இருக்கிறது என்று நான் சொன்னதுதான் ஷோபனாவை சமாதானப் படுத்தியது.

அதன்பிறகு நான் அவர்கள் வீட்டுக்குப் போகும் போதெல்லாம் 'ஸ்வீட்டியைப் பார்த்தீங்களா? எப்படி இருக்கு? திருப்பி எடுத்திட்டு வந்திடுங்களேன்' என்று தவறாமல் சொல்ல ஆரம்பித்தாள் ஷோபனா.

“எதுக்குங்க? இங்கே வந்து நீங்க போடற சைவ சாப்பாட்டை அது சாப்பிடும்னு எனக்கு நம்பிக்கை இல்லை. அது பாட்டுக்கு அங்கே ஜாலியா இருக்கட்டுமே” என்று பதில் சொல்லும்போது கூனிக் குறுகிக் கூசியிருக்கிறேன்.

இருபது நாட்கள் போயிருக்கும்.

வழக்கம்போல அவர்கள் வீட்டுக்குப் போனபோது ஷோபனாவின் முகத்தில் எப்போதும் இல்லாத ஓர் இறுக்கம் இருந்தது. இன்னும் குறிப்பாகச் சொல்வதென்றால் ஏதோ சிரித்துப் பேசிக் கொண்டிருந்தவள் என்னைப் பார்த்த மாத்திரத்தில் இறுகிப் போனது மாதிரி இருந்தது.

“என்ன மேடம், சௌக்கியமா?” என்றேன்.

“ம்” என்றபடி சட்டென்று உள்ளே போனாள்.

“என்னாச்சு சதீஷ்? மேடத்துக்கு மூடு சரியில்லையா?”

அவன் அலட்சியமாகப் புன்னகைத்தபடி “ஸ்வீட்டி செத்துப் போன விஷயத்தைச் சொல்லிட்டேன்” என்றான் சாதாரணமாக.

எனக்குள் பரவிய உணர்வுக்குப் பெயர் தெரியவில்லை.

“எப்போ?”

“நேத்து.”

“என்னிடம் சொல்லவே இல்லை நீ” என்றேன் எனக்கே கேட்காத குரலில்.

ஷோபனா காபிக் கோப்பையுடன் வந்தாள். என் எதிரே வைத்து விட்டு நகரப் போனாள்.

"மேடம். ரொம்ப சாரி. உங்ககிட்ட பொய் சொல்ற மாதிரி ஆயிடுச்சு..." என்று இழுத்தேன்.

"ஹூம். இது மாதிரி எத்தனை பொய்களோ..." என்று விருட்டென்று உள் அறைக்குள் போய் விட்டாள்.

வெலவெலத்துப் போய் நான் சதீஷைப் பார்க்க, அவன் புன்னகை மாறாத முகத்துடன் "எல்லாம் சரியாயிடும். என்கிட்ட நல்லாத்தான் பேசிட்டிருந்தா. நீ காபியைக்குடி" என்றான் டீ.வி. ரிமோட்டுடன் விளையாடியபடி.

என்னால் காபியைக் குடிக்க முடியவில்லை.

என்னையும் கூட்டாளியாக்கி நீ கட்டிய பொய் மாளிகையைக் கலைப்பதாக இருந்தால் அதையும் என்னைக் கலந்து கொண்டு செய்ய வேண்டும் என்கிற கடமை உணர்வு கூட உனக்குத் தோன்றவில்லையா சதீஷ் என்று கேட்க முடியவில்லை.

கைகள் நடுங்கின. கண்கள் காரணம் அறியாமல் பொங்கின. உள்ளுக்குள் ஏதோ பொசுங்கிய வாசனையை உணர்ந்தேன்.

✲

9. அக்னி

பேருந்து கக்கிய கறும்புகைப் படலம் காற்றில் கலைய நடந்து சென்று கொண்டிருந்த அப்பாவின் பின்புறம் முதலில் கலங்கலாகவும் பிறகு தெளிவாகவும் தெரிந்தது.

திரும்பிப் பார்க்கக் கூடாது என்று ஒவ்வொரு முறையும் நினைத்தாலும் பேருந்தில் ஏறினால் கடைசி வரிசையில் இடம்பிடித்து அமர்வதும் கையசைத்துத் திரும்பிச் செல்லும் அப்பாவின் முதுகை வெறிப்பதும் தவிர்க்க முடிவதே இல்லை.

கொஞ்சம் தளர்ந்த நடையில் அவருடைய முதுகைப் பார்க்கும்போதெல்லாம் ஏதோ ஒரு மாதிரியான உணர்வில் அடிவயிறு பிசையப்பட்டு கண்கள் பொங்கி விடுகின்றன. அந்த முதுகில் நான் செய்த தவறுகள் படமாய்த் தெரிவது போல் தோன்றும். காரணமே இல்லாமல் 'அப்பா பாவம்! அப்பா பாவம்' என்கிற பச்சாதாபம் ஊற்றெடுத்துப் பீறிடும்.

இதற்காகவே அப்பாவிடம் பலமுறை சொல்லியிருக்கி றேன். நீங்க என்னை வழியனுப்ப பேருந்து நிறுத்தம் வரை வரவேண்டாம் என்று. அவர் கேட்க மாட்டார். எனக்குக் கோபம்தான் வரும்.

காரணமே இல்லாமல் இப்போதெல்லாம் சள்புள் என்று கோபம் வருகிறது எனக்கு. என்னுள் இந்த மாற்றத்தைக் கடந்த ஓரிரு வருடங்களாகவே உணர முடிகிறது. முன் பெல்லாம் நான் சாது என்று சொல்லிக் கொள்ளத் தயாரில்லை என்றாலும் அப்படி ஒரு முத்திரை என் மீது

விழுந்திருந்தது. நான் கோபப்பட்டால் கூடக் குழந்தையின் கோபம் மாதிரி இருக்கும் என்பார் அப்பா. எனக்கு அதற்கு அர்த்தம் புரிவதில்லை. மற்றவர்கள் பொருட்படுத்தாமல் விடுகிற அளவில்தான் என் கோபத்தின் வீரியம் அப்போது இருந்ததோ என்னவோ?

இப்போதைய கோபம் யார் மீது என்று என்னால் குறித்துச் சொல்ல முடியவில்லையே தவிர, கோபத்தில் என்னிடமிருந்து வார்த்தைகள் தெறித்து விழுந்த பிறகு கொஞ்ச நேரத்தில் தெரிந்து விடுகிறது – இந்தச் சந்தர்ப்பத்துக்கு இவ்வளவு கோபமும் இவ்வளவு கூர்மையான வார்த்தைகளும் தேவையற்றவை என்று. ஆனாலும் காலம் கடந்த தெளிவாக இருக்கிறதே.

என்னுடைய கோபத்திற்கு அதிக அளவில் பலியாவது அப்பாவாக அமைந்து விடுவதுதான், அதைத் தொடர்ந்த என் வேதனைகளுக்கு முக்கியக் காரணம். சங்கடப்பட்டு நான் மன்னிப்புக் கேட்ட சந்தர்ப்பங்களும் உண்டு.

இன்று காலை கூட லேசான வாய்ச் சண்டை.

நான் இரண்டு நாட்கள் அலுவலக விஷயமாகச் சென்னை கிளம்பிக் கொண்டிருந்தேன். தனியான அப்பா நேற்று வரை சின்ன அக்கா வீட்டுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் போய் வந்து விடுகிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்தார். இன்று காலை என்ன நினைத்தாரோ தெரியவில்லை. நான் போகலை. நீ திரும்பி வரும் வரை இங்கேயே இருந்து விடுகிறேன் என்றார்.

சரி, அவர் இஷ்டம் என்று நான் விட்டிருக்கலாம். அல்லது நீங்க அக்கா வீட்டுக்குப் போய் ரொம்ப நாளாச்சு. ஒரு நடை போய்ப் பார்த்துவிட்டு வந்திடுங்க என்று அவரைச் சம்மதிக்க வைக்க முயற்சி செய்திருக்கலாம். இரண்டையும் செய்யாமல் லேசான எரிச்சலுடன் பேச்சு வளர்த்தேன்.

"என்னாச்சு, நினைச்சு நினைச்சுப் பேசறீங்க?"

அப்பா பதில் சொல்லாமல் தயங்கினார்.

"சும்மா முழுங்கி முழுங்கிப் பேசாதீங்கப்பா. ஏன் என்னை மாதிரி வெளிப்படையா இருக்க மாட்டேங்கறீங்க?"

"என்னவோ போக வேணாம்னு தோணுது. அவ்வளவு தான்" என்றார்.

"உங்களுக்குப் பயம். அக்கா ஏதாவது கோபிப்பாளோ என்று பயம். வர வர ரொம்பக் கோழையா ஆயிட்டு வர்றீங்க. ஏம்ப்பா இப்படி இருக்கீங்க? தைரியமா இருங்க ளேன். வாழ்க்கைல அஞ்சு பிள்ளைகளை வளர்த்துக் கரை சேர்த்திருக்கீங்க தனி ஆளா. யாருக்குப் பயப்படணும்..." என்று படபடவெனப் பொரிந்தேன்.

அப்பா வெறிப்பது போல் உணர்வுகளற்று என்னைப் பார்த்தார்.

எனக்கு என்னவோ போலாகி விட்டது. ஏன் பேசினேன் என்று பட்டது. அற்ப விஷயம். அவருடைய மகள் வீடு. அவர் போகிறார் போகவில்லை. எனக்கு ஏன் தேவையில்லாத கோபம் என்று உள் மனது குத்தியது.

இந்தப் பாழாய்ப் போன உள் மனது எப்போதுமே நான் உளறிக் கொட்டிய பிறகு தான் குத்திக்காட்டி கண்டிக்க எழுகிறதே தவிர முன்கூட்டி எச்சரிப்பதே இல்லை.

"சரி, இப்போ நான் என்ன செய்யட்டும்?" என்று அப்பா பரிதாபமாகக் கேட்ட போது, எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

"உங்க இஷ்டம்ப்பா" என்றபடி புறப்பட்டேன்.

இந்தப் பயணம் முழுதும் இதே உறுத்தலாக இருக்கும்.

அப்பா மீது கோபமோ வருத்தமோ துளிகூட இருக்க முடியாது எனக்கு. சொல்லப் போனால் இப்படி ஓர் அப்பா யாருக்குக் கிடைப்பார் என்று நட்பு வட்டத்தில் அவரைப் பற்றித் தெரிந்த எவரும் சம்பிரதாயமாக அன்றி சத்திய மாகவே சொல்வது வழக்கம்.

ஐந்து பிள்ளைகளைப் பெற்றவர், மனைவியை இழந்த தில் இடிந்து போகாமல், தனி ஆளாக அனைவரையும் படிக்க வைத்து மூத்த நால்வரையும் நல்ல இடங்களில் மணமுடித்தும் வைத்து இப்போது என்னோடு இருப்பதைக் கடமையாகக் கருதி இருக்கிறார் என்பது சாதாரண விஷயமா?

நான் ஒரு பெண்ணைக் காதலித்து அவள் ஓர் அமெரிக்க மாப்பிள்ளையுடன் தன்னை இணைத்துக் கொள்ள, எனக்குத் திருமணமே வேண்டாம் என்று சொல்லி அதையும் மௌனமாக அங்கீகரித்துள்ளாரே.

அக்காள்களும் அண்ணன்களும் சொல்லிப் பார்த்துத் திட்டிப் பார்த்து சலித்து விட்டார்கள்.

"அப்பா! நீங்க சொன்னா கேட்பான்" என்றார்கள்.

அப்பா வெறும் புன்னகையுடன் விட்டு விட்டார்.

அவர் அதிகம் சிந்திக்கும் வழக்கம் உள்ளவர் அல்லர். 'அவனுடைய வாழ்க்கையை அவன்தான் தீர்மானிக்க வேண்டும். யாருடைய கருத்தையும் யார் மீதும் திணிப்பது என்பது எனக்குச் சம்மதமில்லாத விஷயம்' என்று கூறி இருந்தார் என்றால் என் அபிப்ராயத்தில் இமயத்துக்கு உயர்ந்திருப்பார். அவர் சிந்தனாவாதியாக இல்லாவிட்டாலும் அவருடைய சாதாரண அசைவுகளுக்கும் என் சிந்தனை முலாம் பூசி அவரை உயரே தூக்கி வைத்துப் பார்ப்பதில் எனக்கு ஓர் அற்ப சந்தோஷம் எப்போதும். வைக்கோல் கன்றின் முட்டலில் கூட பால் சுரக்கிறதே பசு - அது போல்.

முன்பும் அப்பாவுடன் வாய்ச் சண்டைகள் போட்டிருக் கிறேன். அப்போதெல்லாம் அப்பாவும் சரிக்குச் சரி வாதாடுவார். ஒரு வேளை என்னுடைய வார்த்தைகள் அப் போது தடிப்பாக இல்லாமல் மென்மையாக இருந்தனவோ. அதனால் பதில் பேசினாரோ? இப்போது அக்னி ஜ்வாலை யாக வார்த்தைகள் வருவதால் அமைதியாகி விடுகிறாரோ?

அவர் வார்த்தைகளால் பதில் தந்த போது வாதாட முடிந்த என்னால் அவருடைய மௌனத்தை எதிர்கொள்ள முடிவதில்லை.

வார்த்தைகளை உதறி விட்டு நிற்கும் போது அவர் நிராயுதபாணி இல்லை என்று தான் படுகிறது. மௌனம்தான் அவருடைய அல்டிமேட் வெப்பன். பல சமயங்களில் அந்த மௌனம் பெரிய கண்ணாடியாக என்முன் விரிந்து என்னுடைய கோர உருவை அடையாளம் காட்டி அவ மானப்படுத்தியிருக்கிறது. 'பார்! நீ இப்போது என்னுடைய பழைய மகன்தானா? அவனுடைய அடையாளங்கள் ஏதாவது உன்னிடம் இருக்கிறதா? உனக்காவது உன்னை அடையாளம் தெரிகிறதா? உன்னிடத்தில் இப்போது நிற்பது ஓர் அரக்கன். அவனுடன் எனக்கென்ன பேச்சு? என் மகனுடன் மட்டும்தான் நான் பேசுவேன்' என்று அப்பா சொல்லாமல் சொல்வது போல் உருவகித்துக் கொள்வேன்.

அவர் இவ்வளவெல்லாம் யோசித்துச் செயல்படுப வரில்லை என்று தெரியும். எனக்குத்தான் அளவுக்கு மீறிய சிந்தனை. அதுவே எனக்கு எதிரி.

இன்றைய பேச்சுக்களின் போது கூட நான் கொஞ்சம் இதமான வார்த்தைகளை உபயோகித்திருக்கலாம். நாக்கு தடித்துப் போனது என்று சொல்வது போல் என் வார்த்தை கள் தடித்து விட்டன என்பது நிஜம்.

பயப்படறீங்க என்று சொல்ல நினைப்பதை கோழை என்று சொல்லும் போது முகத்தில் அறைந்த மாதிரி படுகிறதே. முகம் என்பது மூஞ்சி என்றாகி இப்போ தெல்லாம் முகரை என்று திரிந்து விட்டது. எதற்கு என்கிற பதம் கூட எந்த எழவுக்கு என்றுதான் வருகிறது.

பாவம் செய்கிறேன் என்று படுகிறது.

யோகம், தியானம் என்று ஏதாவது செய்ய வேண்டும். என்னை அறிய முயற்சிக்க வேண்டும். பாசமே உருவான அப்பா, எனக்கு முழு சுதந்தரம் கொடுத்து அன்பு பொழியும் அப்பா. அவர் மீது ஏன் எரிந்து விழுகிறேன் என்று தெரிய வேண்டும். காரணம் அறிந்து அதனை அகற்ற வேண்டும்.

குஞ்சு மிதித்து கோழிக்கு வலிக்கத் தொடங்கும் முன், அப்பா எப்போதாவது பெரிய அளவில் காயப்பட்டு விடும் முன் அதைச் செய்தாக வேண்டும்.

ஏதோ அப்பா வாழ்க்கையை, யோசனை, சிந்தனை, தெளிவு போன்ற உயர்நிலை அடுக்குகளைத் தொட்டுப் பார்க்கும் பிரயத்தனம் ஏதுமின்றியே ஓட்டி விட்டார். அவர் அதிர்ஷ்டம் இந்த மாதிரி காரணம் தேடி உள்மனம் உளைச்சல் பெறும் காரியம் ஏதும் அவர் வாழ்க்கையில் குறுக்கிடவில்லை. அதனாலேயேதான் என் கோபத்தை எதிர்கொள்ளக் கூடத் திராணி இல்லாதது போல் ஒடுங்கிப் போகிறார்.

பாவம் அவருக்கும் சிந்திக்க சொல்லித் தர வேண்டும்.

இப்போதைக்கு குறைந்தபட்சம் ஊருக்குத் திரும்பிய தும் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

கேட்டேன். அப்பா வழக்கமான புன்னகையுடன் அதனையும் எதிர்கொண்டார்.

"எனக்கு இருக்கிற ஒரே நிம்மதியும் ஆறுதலும் என்ன தெரியுமா அப்பா?"

அவர் சொல் என்பதுபோல் நிமிர்ந்தார்.

"நான் உங்களை என்ன பேசினாலும் நானாகப் பேசுகிறேன் என்பதே உங்களை உறுத்தாமல் இருக்கும் இல்லையா? அதாவது எனக்குக் கல்யாணமாகி இருந்து அதற்குப் பின் பேசினால் என்னதான் மருமகள் என்றாலும் அந்நிய வீட்டுப் பெண் முன்னால் இப்படிப் பேசுகிறானே என்றோ அவள் தூண்டி விட்டுப் பேசுகிறேன் என்றோ உங்களுக்குத் தோன்றக்கூடும் அல்லவா?" என்றேன் பெருமையாக.

அடுத்தவர்களின் மனநிலை என்ன ஓட்டங்கள் குறித்தெல்லாம் எனக்கு இருக்கும் கவனம் குறித்து எனக்கு லேசான கர்வம் கூட இருந்தது.

அப்பா என்னையே உற்று நோக்கினார்.

"என்னப்பா?"

"இருபத்தொன்பது வயது என்பது கல்யாணம் செய்து கொள்வதில்லை என்று முடிவு செய்வதற்குப் பக்குவமான வயது என்று எனக்குத் தோன்றவில்லை. நீ ஒப்புக் கொள் வாயோ மாட்டாயோ, இந்த மாதிரியான உன்னுடைய அர்த்தம் தெரியாத கோபக் கொந்தளிப்புகளுக்குக் காரணமே நீ கல்யாணம் செஞ்சுக்காததுதான் என்பேன்" என்றார்.

அப்பாவின் முகம் சாதாரணமாக இருப்பதுபோல் தோன்றினாலும் அவருடைய புருவமத்தியில் ஜோதி தெரிந்தது.

முதன் முறையாக அவர் முன் நடுங்கியபடி நின்றேன்.

10. இரண்டாம் பாகம்

பி.ஜே.சிங் என்றொரு சர்தார் எங்கள் அலுவலகத்தில் உண்டு. அவர் அடிக்கடி சொல்லுவார் 'தானே தானே மேலிக்கா ஹை, கானே வாலேகா நாம்' என்று. ஒவ்வொரு தானியத்திலும் எழுதியிருக்குமாம் அதை உண்ணப் போகிறவன் யார் என்று. என்னதான் எண்ணெயைத் தடவிக் கொண்டு உருண்டாலும் ஒட்டுவதுதான் ஒட்டும் என்று நம்மவர்கள் சொல்வதன் வேறு வடிவம்தான் அது. மொழி மாறினாலும் கலாசாரம் மாறினாலும் மானுட தர்மம் மாறுவதில்லை என்பதற்கான சாட்சி இது. என்னுடையது உன்னுடையது என்பதுகூட நம் தீர்மானங்களில் இல்லை என்பது உலகளாவிய தர்ம நம்பிக்கையாக உள்ளதே. எவ்வளவு நிஜம்!

அந்தப் பத்தாயிரம் ரூபாய் என்னுடையது என்று நான் நினைத்துக் கொண்டிருந்தது எவ்வளவு அசட்டுத்தனம். இதோ அது என்னுடையதல்ல என்றாகிவிட்டதே.

என்னால் வேலையில் ஒன்றவே முடியவில்லை.

நாற்பத்தைந்து நாள் விடுப்பு என்பது அப்படி ஒன்றும் மிக நீண்டதாக அதை அனுபவித்து விட்டு வந்த எனக்குத் தெரியவில்லை. ஏதோ முந்தா நாளோ அதற்கு முந்தைய நாளோதான் போன மாதிரி இருந்தது. இதோ வந்தாகி விட்டது. இலவச இணைப்பாகப் பயண அலுப்பும் இருந்தது.

ஆனால் இந்த இடைப்பட்ட பொழுதில் இங்கே நிகழ்ந்தவையாக விவரிக்கப் பட்டவை நிறைய இருந்தன.

குறிப்பாக பன்னீர்செல்வத்தின் பணி இடைநீக்க ஆணை நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்ட செய்தியும், அவனுக்கு வேறு ஊருக்குப் பணி மாற்றம் ஆனதும், அவனுடைய தங்கை திருமணம் நடைபெற்றதும், நிர்வாகம் அவனை மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப் பணித்த நீதிமன்ற ஆணையை எதிர்த்து அப்பீலில் போனதும், அவன் மீண்டும் இடைநீக்கம் செய்யப்பட்டதும் இந்த நாட்களில் நடந்திருந்தன. எல்லாம் கேட்டு முடிந்ததும் நான் கேட்ட முதல் கேள்வி:

"பன்னீர்செல்வம் இப்போது எங்கே இருக்கிறான்?"

"டேய், சாரும் பன்னீரைத் தேடறார். என்னாச்சு சார் நீங்களும் அவனுக்குக் கடன் ஏதும் கொடுத்திருக்கீங்களா?"

எனக்குள் பகீரென்றது. அடிவயிற்றில் ஒரு பயம் தூக்கம் விழித்த மலைப் பாம்பாக விரிய யத்தனித்தது. உள்ளுணர்வை வெளிக் காட்டக் கூடாது என்கிற என் முயற்சியையும் மீறி முகத்தில் ஏமாற்றம் கடை விரித்திருக்க வேண்டும்.

"ஆமாம் போலிருக்குடா. சாரும் ஏமாந்திருக்கிறார். எவ்ளோ சார் ரெண்டா மூணா?"

"சேச்சே, அதெல்லாம் ஒண்ணும் இல்லை. பாவம் குடும்பஸ்தன். ஏதோ தொந்தரவு நீங்கி வேலைல சேரப் போறான்னு நினைக்கும்போதே திரும்பவும் சஸ்பென்ஷன் என்றால் பாவமேன்னு நினைச்சேன் வேறொண்ணுமில்லை" என்று சமாளித்தேன்.

"நிஜமாவே அப்போ நீங்க ஏதும் ஏமாறலை?"

"இல்லைங்க. ஏன் இப்படிச் சொல்றீங்க? யாருக்கும் அவன் வாங்கின கடனைத் திருப்பித் தராமல் போயிட்டானா?"

"யாருக்குமா? யாருக்காவது திருப்பித் தந்திருக்கானான்னு கேளுங்க சார்."

மேற்கொண்டு அவர்கள் பேசிய பேச்சுகள், பன்னீரைத் திட்டிய வார்த்தைகள், விவரங்கள் ஏதும் என் காதுக்குள்ளோ கருத்துக்குள்ளோ ஏறவில்லை. அவர்கள் எப்போது பிரிந்து போய் என்னைத் தனித்து விடுவார்கள் என்கிற தவிப்புடன் தத்தளித்தேன்.

பத்தாயிரம் ரூபாய்!

நான் விடுப்பில் போவதற்கு ஒரு மாதம் முன்புதான் கேட்டு வாங்கினான். அப்போது தன் தங்கை திருமண விஷயமாகப் பேசிக் கொண்டிருந்தான் என்று ஞாபகம். பணி இடை நீக்கத்தில் இருந்தாலும் அடிக்கடி அலுவலகம் வந்து போவது அவன் வழக்கம். எல்லோருமே அவனிடம் நன்றாகத்தான் பேசுவார்கள். இன்னும் குறிப்பாகச் சொல்வ தென்றால் இன்று என்னிடம் அவன் ஏமாற்றுப் பேர்வழி என்று பேசிய மூவரும் கூட அவனிடம் குழையக் குழையப் பேசும் காட்சிகளைப் பலமுறை கண்டிருக்கிறேன்.

பணியில் இருந்த காலத்தில் நல்ல முறையில் வேலை செய்பவன். யாருக்கும் பிரச்சினை வரும்படி நடந்து கொள்ளாதவன், கொஞ்சம் ஏழ்மையான குடும்பத்தில் இருந்து வந்தவன் என்கிற காரணங்களால் எனக்குப் பன்னீர்செல்வத்தின் மீது பரிவும் பிடித்தமும் உண்டு.

அந்தப் பரிவு பலரறிய இருந்தும் அதைச் சொந்தக் காரணங்களுக்குத் துஷ்பிரயோகம் செய்ய முயற்சிக்காதவன் என்பதும் அவனுடைய கூடுதல் நற்பண்புகளாக நான் உணர்ந்தவை.

அப்படிப்பட்டவனா இப்படி சர்வசாதாரணமாக பத்தாயிரம் ரூபாயை அடித்துக்கொண்டு போய்விட்டான்?

எந்த நம்பிக்கையில் கொடுத்தேன் என்று யோசித்துப் பார்த்தால் அந்தக் கணத்தில் நான் ஏதோ புத்தி கெட்ட மயக்கத்தில் இருந்ததாகத்தான் தோன்றுகிறது. ஏனென்றால் வேலையில்லாமல் அரைச் சம்பளம் வாங்கிக்கொண்டு அதிலும் வாழ்க்கைக்குப் பாதி வழக்குக்குப் பாதி என்று அலைந்து கொண்டிருந்தவனை நம்பி அவன் கேட்ட மாத்திரத்தில் ஒரு கேள்வியும் கேட்காமல் கொடுத்திருக்கி றேனே! தங்கையின் திருமண ஏற்பாடுகளை முன்னிறுத்திக் கேட்டது என் மனத்தைத் தொட்டிருக்க வேண்டும். என் வீட்டுத் திருமணங்களின்போது நான் பட்ட சிரமங்கள் ஞாபகம் வந்து என் இரக்க உணர்வுகளைக் கிளறி இருக்க வேண்டும்.

அந்த இரக்கத்துக்குத் தண்டனையா இது?

ஒருவேளை பி.ஜே.சிங் சொல்வது போல் இந்தப் பணத்தில் என் பெயர் எழுதப்பட்டிருக்கவில்லையோ? என்னையும் அறியாமல் நான் பாவ வழியில் சேர்த்த பணமோ இது?

அலுவல் விஷயமாக வெளியூர்ப் பயணம் சென்று வந்தால் டி.ஏ.பில் க்ளெய்ம் செய்கையில் நான் வழக்கமாக

எழுதும் பொய்க் கணக்குகளெல்லாம் தேவையில்லாமல் நினைவில் வந்து போயின. நான் எழுதித் தருவதை நம்பிப் பணம் தரும் கம்பெனிக்கு நான் செய்ததை துரோகம் எனலாமா?

அம்மா போன வருஷம் கண் ஆபரேஷனுக்குப் பணம் கேட்டபோது நான் பிரைவேட்டாக லேசர் சிகிச்சை எல்லாம் வேண்டாம் அரவிந்த்தில் இலவசமாகவே பார்த்துக் கொள்ளலாம் என்று மறுத்தது தான் இந்த இழப்புக்குக் காரணமோ? அது இரக்கமில்லாமல் செய்த செயலல்ல. நிஜமாகவே என்னிடம் அப்போது பணமில்லை. அதோடு அம்மாவுக்கு நான் எவ்வளவு செய்தாலும், அவளுக்கு, தம்பியும் அவன் குடும்பமும் தான் பெரிது. அவர்கள் மீது தான் இரக்கம் பொழிவாள். அவனுடன்தான் இருப்பாள். என் மனைவியின் பிரசவம் சிக்கலாகலாம் என்று மருத்துவர்கள் பயமுறுத்தியிருந்த சமயத்தில்கூட துணைக்கு அழைத்த போது தம்பி மனைவிக்குக் காய்ச்சல் என்று காரணம் சொல்லிவிட்டு வராமல் தவிர்த்தவள். பணத்துக்கு மட்டும் தான் நான் என்றால் எனக்கு எப்படி மனம் கசியும்?

எது எப்படியோ என் செயல்களுக்கான என் நியாயங்கள் இயற்கையின் நியாயங்களோடு ஒத்துப் போகவில்லை என்பதைத் தானே இந்தப் பன்னீர்செல்வம் எபிஸோட் காட்டுகிறது!

நானும் ஏமாந்த விஷயத்தை வெளிப்படையாகச் சொல்லி இருக்கலாம் என்று தோன்றியது. எல்லோரையும் போல் அவனைத் திட்டித் தீர்த்து விட்டால் கொஞ்சம்

ஆறுதல் கிடைக்கலாம். ஆயிரம் இரண்டாயிரம் இழந்தவர் களுக்கே அவ்வளவு கோபம் என்றால் பத்தாயிரம் என்பது எவ்வளவு பெரிய தொகை!

விஷயம் என் மனைவிக்குத் தெரியாது. தெரியவரும் போது அவளுடைய ஆட்டத்தையும் எதிர்கொள்ள வேண்டி வருமே. அது ஒரு பொழுதான ஆட்டமாக இருக்காதே. வாழ்நாள் முழுதும் எப்போது நான் அவளுக்குப் பணம் தர மறுத்தாலும் சொல்லிக் காட்டுவதற்கான அருமையான ஆயுதமாகிவிடுமே இவ்விஷயம்! அதுவும் அவளுக்கு நாக்கு நெருப்பிலே செய்து விஷத்திலே தோய்த்தெடுத்த ஒன்று. அவளுடைய புத்திக்கும் பேச்சுக்கும்தான் அம்மா இங்கே வரவே பயப்படுகிறாள்.

அவளிடம் சொல்லவே கூடாது.

நடக்கிற காரியமா? இதுவரை எவ்வளவு விஷயங் களை அவளிடம் சொல்லக் கூடாது என்று உறுதி எடுத்துச் சொல்லாமல் விட முடிந்தது? ஏதோ ஒரு புத்தி கெட்ட மயக்க கணத்தில் அவள் ஆறுதலாகத் தலைகோதி விடுகிற சமயத்தில், இன்னும் கொஞ்சம் ஆறுதல் வேண்டி, அவளே தாயாய், தோழியாய், தெய்வமாய்த் தோன்றுகிற கிறுக்குக் கற்பனையில் உளறிக் கொட்டிய விஷயங்கள் எத்தனை எத்தனை! அப்புறம் அவற்றையே எனக்கு எதிரான படைக் கலன்களாக அவள் உபயோகித்து என்னைத் திகைக்க வைக்கிற காட்சிகள் தினசரி அரங்கேறிய வண்ணம் இருந்தும் எங்கே திருந்த முடிகிறது? மனைவிகளுக்குத் தெரியும் எங்கே கொக்கி போட்டால் கணவர்கள் உளறு வார்கள் என்று...

சே! எவ்வளவு பெரிய இக்கட்டில் மாட்டி விட்டுப் போய்விட்டான் இந்தப் பன்னீர் செல்வம்.

வேலையும் ஓடாமல் வேலை பார்ப்பதான பாவனை யோடு அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்தேன்.

"சார்! ஜாயினிங் ரிப்போர்ட் கொடுத்திட்டீங்களா?" என்று ப்யூன் ஞாபகப்படுத்த வேண்டியிருந்தது.

அவசரமாக எழுதி அவன் மூலமே பர்ஸனல் மேனேஜரிடம் கொடுத்தனுப்பினேன்.

போனவன் ஐந்து நிமிடங்களில் திரும்பி வந்தான். "சார்! அவர் உங்களை வரச் சொன்னார்" என்றான்.

எழுந்து போனேன்.

"என்ன சார், வந்தாச்சா? லாங் லீவு அடிச்சிட்டீங்க போல" என்று புன்னகை செய்தபடி வரவேற்று உட்கார வைத்தார். தன் மேசை டிராயரைத் திறந்து நூறு ரூபாய்க் கட்டு ஒன்றை எடுத்து வைத்தார். "பன்னீர் செல்வம் உங்க கிட்ட கொடுக்கச் சொன்னான். ஊரைக் காலி செய்து விட்டுக் கிளம்பும்வரை நீங்க எப்போ வருவீங்கன்னு கேட்டுட்டே இருந்தான். உங்களுக்கு ரொம்ப நன்றி சொல்லச் சொன்னான்" என்றார்.

நான், என் ஆனந்தம் உற்சாகம் இன்ப அதிர்ச்சி சகலத்தையும் மறைக்க முயன்றவனாகி "என்ன சார் ஆச்சு அவன் கேஸ்?" என்று கேட்டேன்.

"மேனேஜ்மென்ட் பழி வாங்கறாங்க சார். வேறென்ன சொல்ல?" என்றார். "ஆனா மீண்டு வந்திடுவான் பாருங்க" என்றார் தொடர்ந்து.

"பணக் கஷ்டத்தோட இதை எப்படித் திருப்பிக் கொடுத்தான்?" என்றபடியே அதை எடுத்துக் கொண்டேன்.

"யார் யாருக்குத் தரணுமோ எல்லாருக்கும் தந்திட்டுத் தான் சார் போயிருக்கான்."

"நிறையப் பேருக்குத் தரலைன்னு பேசிக்கிட்டாங் களே."

"நானும் கேள்விப்பட்டேன் சார். பேசுகின்ற யாரும் அவனுக்குக் கடன் தந்தவர்கள் இல்லை. குரைக்கத் தெரியாமல் ஒடுகின்ற நாயைக் கல்லெறிந்து சுகப்படும் ரகத்தைச் சேர்ந்தவங்க ஏதேதோ பேசறாங்க சார். எல்லாம் மேலே ஒருத்தன் கணக்கு வச்சிட்டிருக்கான்" என்றார் கூரையைக் காட்டி.

"ஆமாம் சார்" என்று தயக்கத்துடன் சொன்னபடி எழுந்தேன்.

என்ன கேவலமான மனிதர்கள் என்று எண்ண முடியாதபடி பன்னீர்செல்வத்தைப் பற்றி என்னுள் ஓடிய எண்ணங்களும் குறுக்கே வந்து குத்தின.

பத்து நாட்களுக்குப் பிறகு ஒருநாள் பன்னீர் செல்வத்தின் போன் வந்தது. உற்சாகமாகப் பேசினேன். அவன் குரல் கொஞ்சம் ஒடுங்கியிருந்தது. என் பக்க நலன்களை விசாரித்து விட்டு கடைசியாக, "சார்! பழைய

சொத்து கேஸ் ஒண்ணு எனக்குச் சாதகமா தீர்ப்பாயிருக்கு சார். கொஞ்சம் பணம் கிடைக்கும்னு தைரியம் வந்திருக்கு. கோர்ட் ஃபார்மாலிட்டிஸ்தான் பாக்கி. ஒரு ரிக்வெஸ்ட் சார். இப்போ அவசரமா ஒரு அஞ்சாயிரம் ரூபா தேவைப்படுது. நீங்க தந்து உதவ முடியுமா சார். நான் வெறும் பயலா இருக்கும்போதே நம்பித்தந்தவர் நீங்க. உங்களை வாழ் நாளில் மறக்க மாட்டேன் சார். இந்த முறையும் கொஞ்சம் ஏற்பாடு பண்ண முடியுமா சார்?" என்றான்.

'அதற்கென்னப்பா பண்ணிட்டா போச்சு' என்று சொல்ல நினைத்து திடீரென்று உஷாரானது போல் "யோசிச்சு சொல்றேன்" என்றேன்.

✲

11. நிரை நேர் நேர்

"எந்த ஓர் ஆரம்ப கட்ட எழுத்தாளனும் இந்த மூன்று நபர்களைப் பற்றி எழுதாமல் இருக்கவே முடியாது. ஒன்று அவனுடைய அப்பா. இரண்டாவது அவனுடைய முதல் காதலி. மூன்றாவது அவனுடைய தமிழாசிரியர்."

ஏதோ கவனமாக இருந்த நான் பளிச்சென்று நிமிர்ந்தேன்.

அடையாளம் தெரியாத ஓர் இளைஞன் தொலைக் காட்சியில் பேசிக் கொண்டிருந்தான். திரையின் அடிப் புறத்தில் துணைத் தலைப்பாக அவனுடைய பெயர் 'எழுத்தாளர் மதியழகன்' என்று போடப்பட்டிருந்தது.

மனத்திற்குள் அந்தப் பெயரை ஒருமுறை உச்சரித்துப் பார்த்தேன். பலமுறை பத்திரிகைகளில் பார்த்த ஞாபகம் மட்டும் இருந்தது. குறிப்பிட்ட ஏதாவது கதையைப் படித்த ஞாபகம் இல்லை.

அவனுக்கு முப்பத்தைந்து வயது இருக்கலாம். உற்சாகம் கொப்பளிக்கப் பேசிக் கொண்டிருந்தான்.

"என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். நான் பளிச் சென்று பல பேர் கவனத்தைக் கவர்ந்தது என்னுடைய தமிழாசிரியர் சாயலுடன் ஒரு பாத்திரம் படைத்து எழுதிய கதையால்தான். இன்னும் சொல்லப் போனால் என்னை ஓர் எழுத்தாளனாக்கியதே அவர்தான் என்பேன்..."

அவன் பேச்சு எனக்கு மிகுந்த சந்தோஷத்தை அளித்தது. நானும் ஒரு தமிழாசிரியன்; மனைவியை இழந்த

வன்; ஒய்வு பெற்றுப் பத்து வருடங்கள் ஆகிவிட்டன. வாழ்க்கையில் இவை மூன்றும் என்னுடைய வயதின் இருபது களில், நாற்பதுகளில், அறுபதுகளில் ஏற்பட்ட பேரிடிகள்.

மொழியியல் ஆசிரியர் என்றாலே இளக்காரம்தான் என்றொரு பொது விதி இருந்தால் கூட ஆறுதல் இருந்தி ருக்கும். தமிழாசிரியனுக்கு மட்டுமே இந்த நிலை. நான் பள்ளியில் இருந்த காலத்தில் கூட ஆங்கில ஆசிரியர் களுக்கு இருந்த மரியாதையே தனி. இந்த நாட்களிலோ சொல்லவே வேண்டாம். தமிழாசிரியர்கள் என்றாலே வேண்டாத பிறவிகளாகப் பார்க்கப்படுகிறார்கள். இங்குள்ள குழந்தைகள் எல்லாம் பெரும் கணினிப் பொறியாளர்களாக ஆகி அமெரிக்கா பெயர்ந்து போக இருக்கும் வாய்ப்பைக் கெடுக்கின்ற மொழிக்கு ஓர் ஆசிரியனா என்கிற சிந்தை வளர்ந்து விட்ட நிலையில் எனக்கு என்ன மரியாதை இருக்கும்? பல சமயங்களில் நான் ஒரு மனிதன் என்பதற்கும் வயதானவன் என்பதற்கும் கிடைக்கின்ற மரியாதை கூட அடுத்தகணம் நான் தமிழாசிரியன் என்று தெரிந்த மாத்திரத் தில் ஒரு பரிதாபமாக எதிராள் கண்களில் உருமாறுவதைக் கண்டிருக்கிறேன். இவ்வளவு ஏன், என் மருமகளே பேத்தியை அதிக நேரம் என்னுடன் பேச விடுவதில்லையே. அவளுடைய ஆங்கிலப் பேச்சுப் பயிற்சியை நான் கெடுத்து விடுகிறேனாம்!

விரக்தியை மட்டும் சுவாசித்தபடி வாழ்ந்து கொண்டி ருக்கிறேன். தமிழ், தமிழாசிரியர் போன்ற சொற்கள் காதில் விழும் போது மட்டும் கொஞ்சம் சிலிர்ப்பு ஏற்படுவதுண்டு. அப்போதைய மூச்சு மட்டும் கொஞ்சம் உயிர்ப்போடு இருப்பதாக உணர்வேன்.

மதியழகன் பேசிக் கொண்டிருந்தான்.

"என்னுடைய உயர்நிலைப் பள்ளிப் பருவத்தில் ஒரு தமிழாசிரியர் இருந்தார். வெறுமனே பாடங்கள் மட்டும் எடுக்க மாட்டார். கூடவே நிறைய விஷயங்கள் சொல்வார். தமிழில் அப்படி ஓர் ஆளுமை அவருக்கு இருந்தது. மரபுக் கவிதை சம்பந்தமாக நிறைய விஷய ஞானம் இருந்தது. அவர் எடுத்த இலக்கணம்தான் என் மனத்தில் இன்றும் ஆழப் பதிந்திருக்கிறது. நான் இலக்கணப் புத்தகங்களோ நோட்ஸோ வாசித்ததே கிடையாது. அவர் போட்ட அஸ்தி வாரம் அவ்வளவு அழுத்தம்..."

எனக்குப் பெருமையாக இருந்தது. யாரந்தத் தமிழாசிரியர். இவ்வளவு ஆழ்மனப் பாதிப்பை இவனுக் குள் ஏற்படுத்தியது என்கிற கேள்வி எழ, அந்த நிகழ்ச்சியை இன்னும் கவனமுடன் பார்க்க ஆரம்பித்தேன்.

மிக அரிதாகத்தான் இப்படி தொலைக் காட்சிகளில் காலை நிகழ்ச்சிகள் பார்க்க வாய்ப்புக் கிடைக்கும் எனக்கு. பொதுவாக அலுவலகம் கிளம்பும் பரபரப்பில் இருக்கும் மகனுக்கும் மருமகளுக்கும் பள்ளிக்குக் கிளம்பிக் கொண்டி ருக்கும் பேத்திக்கும் நடுவில் காலை நேரங்களில் எனக்கு ஒரு வேலையும் இருக்காதுதான். ஆனாலும் நான் சும்மா உட்கார்ந்திருந்தால் அது அம்மூவரில் யாருக்காவது இரத்த அழுத்தத்தை அதிகரிக்கச் செய்யும். சில சமயங்களில் நானாகவே முன் சென்று பேத்திக்குப் புத்தகப் பை தயார் செய்வது போலவோ, மகனுடைய வாகனத்தைத் துடைப்பது போலவோ செய்யப் போனால், 'ஏம்ப்பா, சும்மா ஓர் இடத்தில் இருக்க மாட்டீங்களா? ஏன் இப்படி குறுக்கும்

நெடுக்குமா வந்து எங்களுக்கு உதவி செய்யறதா நினைச்சு தொந்தரவு பண்றீங்க?' என்றும் வார்த்தைகள் கேட்க வேண்டி வரும். வயசும் ஆகிப் போய் மனைவியும் போய் விட்டால் இப்படித்தான். எனக்குப் பழக்கமாகவும் சகஜமாக வும் ஆகிப்போன ஒன்று இது.

இன்று அதிகாலையில் ஒரு நண்பர் வீட்டுத் திருமணம் என்று எல்லோரும் போயிருப்பதால் தொலைக்காட்சியும் அதன் தொலை இயக்கியும் என் கட்டுப்பாட்டில்.

எழுந்தாளர் மதியழகன் தொடர்ந்து பேசினான்.

".....எட்டாம் வகுப்பா ஒன்பதாம் வகுப்பா என்று தெளிவாக நினைவில்லை. அவர் சிலப்பதிகாரம் நடத்திக் கொண்டிருந்தார். கோவலன் கண்ணகி திருமணக் காட்சி. அதுதான் எப்போதும் பாடத்தில் இருக்கும். அது நடத்தும் போது டிரமாடிக் ஐரனி என்றால் என்ன என்று சொன்னார். 'காதலர் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்' என்றொரு வரி வரும். இளங்கோ அடிகள் காவியத்தின் முதல் சாப்டரி லேயே இந்த வரி வைத்ததற்குக் காரணம், பின்னாளில் கோவலன் கைவிடப் போகிறான்; காதலர்கள் பிரியப் போகிறார்கள் என்ற சூட்சுமமாகத் தெரிவிக்கும் எதிர்மறை வித்தையாகும் இது. இதற்குப் பெயர்தான் டிராமாடிக் ஐரனி என்று அவர் சொன்ன போதுதான் கதை எழுதுவது குறித்த முதல் பொறி என் எண்ணத்தில் விழுந்தது என்பேன்..."

எனக்குள் ஏதோ குறுகுறுவென்றது. நானும் வகுப் பெடுக்கும் போதெல்லாம் தவறாமல் சொனன விஷயமாகும் இது. ஆனால் நானென்று இல்லை; எல்லா தமிழாசிரியர் களுமே இதைச் சொல்லித்தானிருப்பார்கள். சிலப்பதிகாரத்

தில் முக்கிய வரிகளாக வருடந்தோறும் இடஞ்சுட்டிப் பொருள் விளக்குமாறு கேள்வி கேட்கப்படும் இடமாயிற்றே இது.

பேட்டி எடுத்துக் கொண்டிருந்த பெண், தன் அலங்காரம் குறித்த பிரக்ஞை குறையாமல் போலியாகக் கண்களை விரித்தபடி, "ஸோ உங்களுக்குள் ஓர் எழுத் தாளரை உசுப்பி விட்டது அந்த இன்ஸிடன்ட்தான், என்று சொல்லலாமா?" என்று கேட்டாள்.

"எக்ஸாக்ட்லி. அன்று முழுதும் அதே சிந்தனையில் இருந்தேன் நான். டிராமாடிக் ஐரனி என்கிற பதம் ரொம்பவே யோசிக்க வைத்தது என்னை. மறுநாள் தமிழ் வகுப்பில் அவரிடம், 'ஐயா நீங்கள் சொன்ன வரிகளுக்கு முன்பாகவே ஒரு வரி வருகிறதே 'தீவலம் செய்வது காண்பார்கண் நோன்பென்னை' என்று. அது கூட இன்று கண்ணகி தீயைச் சுற்றுகிறாள். பின்பொரு நாள் தீ அவள் சொல்படி சுற்றப் போகிறது என்று காட்டுகிற டிராமாடிக் ஐரனி என்று எடுத்துக் கொள்ளலாமா?' என்று கேட்டேன்..."

அவன் மேற்கொண்டு பேசியது எதுவும் என் காது களில் விழவில்லை. எனக்குள் தீப்பற்றிக் கொண்டாற் போலிருந்தது. இது எப்போதோ என் வகுப்பில் நடந்த நிகழ்ச்சி தான் என்று நினைவலைகள் கிளர்ந்து தெரிவித்தன. அடடே, கடைசியில் இந்தப் பிரபல ஏழுத்தாளன் என் பழைய மாணாக்கனா என்கிற எண்ணம் பீறிட்ட மாத்திரத் தில் உதடுகள் கோண, கண்கள் பொங்கின, பிரயத்தனப்பட்டு பேட்டியைத் தொடர்ந்து கவனித்தேன்.

"நீங்க படிச்ச ஸ்கூல், இந்த அளவு உங்களை பாதிச்ச தமிழாசிரியர் பெயர் எல்லாம் சொல்லுங்களேன்..."

என் செவிகள் கூர்மையாயின. இதோ என் பெயரைச் சொல்லப் போகிறான்.

"அவர் பெயர் க..." என்று அவன் சொல்ல ஆரம்பிக்க, பொசுக்கென்று மின்சாரம் போய் விட்டது.

கனகசபை என்கிற என் பெயரையும் நான் தமிழாசிரியராகப் பணியாற்றிய செங்கல்பட்டுக்குப் பக்கத்தைய ஊர்ப் பெயர், பள்ளியின் பெயர் எல்லாம் சொல்லியிருப்பானே. இந்த இழவெடுத்த மின்தடைக்கு வேறு நேரம் கிடைக்க வில்லையா? சே!

அடுத்த நான்கைந்து நாட்கள் நான் வீட்டில் கிடந்த எல்லாப் பழைய பத்திரிகைகளையும் பிரித்துப் பிரித்து மதியழகனின் படைப்புகள் வந்துள்ளனவா என்று தேடிப் படித்தேன். அவை நன்றாக இருந்தனவா அல்லது சுமார் ரகம்தானா என்று இனம் பிரிக்க முடியாதபடி, என்னுடைய மாணவன் - அதுவும் என்னை இன்னும் ஞாபகத்தில் நன்றியுடன் நினைத்திருக்கும் மாணவனின் எழுத்தாயிற்றே என்கிற முற்சாய்வு எண்ணம் மேலோங்கி நின்றது. ஒவ்வொரு படைப்பிலும் எங்காவது ஓரிடத்தில் என்னுடைய சாயல் இருக்கிறதா என்கிற திறனாய்வும் கூடவே செய்வதைத் தவிர்க்க முடியவில்லை.

எந்தப் பத்திரிகையிலாவது அவனைப் பற்றியக் குறிப்புகள் போட்டிருக்கிறார்களா என்று தேடி ஓய்ந்தேன். ஏதாவது பத்திரிகை முகவரிக்கு அவன் பெயரில் கடிதம் எழுதிக் கேட்கலாமா, அல்லது சென்னைக்கு ஏதாவது வாய்ப்பில் போக நேர்ந்தால் முகவரி அறிந்து நேரில்

போய்ச் சந்தித்து விடலாமா என்றெல்லாம் எண்ண ஓட்டங்கள்.

"என்னாச்சு உங்களுக்கு? எதையோ பறிகொடுத்திட்டுத் தேடற மாதிரி தெரியறது" என்று கேட்ட மகனிடம் அந்தத் தொலைக்காட்சிப் பேட்டி குறித்து உளற இருந்து சுதாரித்தேன்.

இவனிடம் சொல்வதால் என்ன பயன்? பேட்டியின் முக்கியப் பகுதியை நானே கேட்டிருக்கவில்லை. அது தெரிந்தால் இவன் இகழ்ச்சியாய்ப் புன்னகைப்பான். 'பெரிய ஆளுங்கள்லாம் பேட்டின்னு சொல்றதுல பல விஷயங்கள் மிகைப்பட்டதா இருக்கும். சுவையா இருக்கறதுக்காக கொஞ்சம் பொய் கூடச் சேர்த்துச் சொல்லுவாங்க. அதை யெல்லாம் அப்படியே எடுத்துக்கிட்டு உங்களையே ஏமாத்திக்கக் கூடாது' என்று அறிவுரை சொல்ல ஆரம்பிப் பான். புத்தகமே படிக்காத மருமகள் 'அந்த எழுத்தாளர் நாகர்கோயில்காரர், அவர் படிச்சது எல்லாம் அங்கேதான்னு ஒரு பத்திரிகைல படிச்சிருக்கேன், உங்க அப்பாகிட்ட சொல்லி வைங்க, நம்மிடம் சொன்னதை வெளி ஆட்கள் யாரிடமாவது சொல்லிடப் போறார்; எல்லோரும் நம்மைப் பார்த்துச் சிரிக்கப் போறாங்க' என்று ஜாடையாய்க் கேலி பேசுவாள்.

சரி, அந்த எழுத்தாளன் உன் பழைய மாணவன்தான் என்று நினைத்துக் கொள்வதில் சந்தோஷம் கிடைக்குது என்றால் அப்படியே இருந்துவிட்டுப் போகட்டுமே, விடேன் என்று உள்ளுர ஒரு குரல் சொன்னாலும் விட முடிய வில்லை. யாராவது ஒருவர் அந்தப் பேட்டியை முழுவது

மாகப் பார்த்தவராக 'என்ன கனகசபை சார், எழுத்தாளர் மதியழகன் உங்க பழைய ஸ்டூடண்ட்டாமே. உங்களைப் பற்றி இவ்வளவு பெருமையா சொல்றார் பேட்டிகள்ல' என்று சொன்னால் மனம் திருப்தி அடையும் என்று பட்டது.

பின்னொரு நாளின் விடுமுறை மாலையில் தொலைக் காட்சி முன் அமர்ந்து தொலை இயக்கியால் அலை வரிசைகளை மாற்றி மாற்றி விளையாடிக் கொண்டிருந்த மகன், திடீரென்று குரல் கொடுத்தான், "எல்லோரும் வாங்க. என் ஃபேவரிட் ரைட்டர் மதியழகனின் பேட்டி" என்று.

வேகமாக ஓடினோம். எனக்குத் தெரிந்து விட்டது அதே பேட்டியின் மறு ஒலிபரப்புதான் என்று.

எனக்குள் தடங்தடங் என்று ரயில் ஓடும் ஓசை, எவ்வளவு முயன்றும் இயல்பாய் இருக்க முடியவில்லை. இம்முறை தெரிந்துவிடும், அவன் என்னுடைய மாணவன் தானா என்று.

அமர்ந்திருப்பவர்கள் பாராட்டு மழையை என் மீது பொழியவோ, கேலிச் சகதியில் அழுத்தவோ காத்திருப்பது போன்ற எண்ணத்தை என்னால் தவிர்க்க முடியவில்லை. லேசாக மூச்சுத் திணறுவது போல் உணர்ந்தேன்.

மெல்ல எழுந்து வீட்டின் முன்பகுதிக்குச் சென்று உட்கார்ந்து கொண்டேன். அதுவும் சரிப்படாமல் விறுவிறு வென்று தெருவில் இறங்கி நடக்க ஆரம்பித்தேன். குறைந்தது ஒரு மணி நேரம் கழித்துத்தான் வீடு திரும்ப வேண்டும்.

12. மூலதனம்

ஒரு பெரிய கிளிக்கூண்டு. அது எங்கள் அலுவலகம் மாதிரி இருக்கிறது. என்னுடைய அறையில் ஏர்கண்டிஷன்ட் குளுமையில் சுகமாக உட்கார்ந்திருக்கிறேன். என் உடம்பு பச்சையாக நீளவாக்கில் இருக்கிறது. திரும்பிப் பார்த்தால் சின்னதாக வால்கூட இருக்கிறது. வாயும் மூக்கும் இணைந்து சிவப்பு நிறத்தில் புதிய அவயமாகத் தோன்ற உடனடியாக என்னை ஒரு கண்ணாடியில் பார்த்தாக வேண்டிய ஆவல் ஏற்படுகிறது. தாகம் எடுக்கிறது. அறையின் மூலையில் வாய கன்ற பாத்திரத்தில் தண்ணீர் இருக்கிறது. இதை எப்படிக் குடிப்பது என்கிற சந்தேகத்துடனேயே அதன் அருகில் போகிறேன். நடக்கும்போது என் கால்கள் மிகக் குள்ளமாகத் தெரிகின்றன. தண்ணீரைக் குனிந்து ஒரு பறவைபோல் குடிக்கிறேன்.

"ராசா வெளியே வா ஒரு நிமிஷம்" என்றொரு குரல். அமானுஷ்யமாய் ஒலிக்கிறது. இன்டர்காமில் எம்.டி. அழைக்கிறார்.

எம்.டி.யின் அருகில் ஒருவர் உட்கார்ந்திருக்கிறார். எம்.டி. கேட்கிறார். "சாருடைய ஃபைல் என்ன நிலையில் இருக்கு கொஞ்சம் பார்த்து சொல்லு ராசா..."

அவருடைய மேசை மீது பல ஃபைல்கள் இருக் கின்றன. அதில் ஒன்றை நான் எடுத்துக் கொடுக்க அதைப் பிரித்தவாறே எம்.டி என்னைப் பார்த்து புன்னகை புரிகிறார். "நீ பி.எஃப்ல லோன் அப்ளை பண்ணியிருந்தேல்ல?

அப்ரூவ் ஆகி ஸாங்க்ஷன் ஆர்டர் வந்தாச்சு" என்று ஒரு காசிதத்தை என்னிடம் நீட்டுகிறார். அது தானியங்களின் வடிவில் என் எதிரில் சிதற நான் ஆவலுடன் பொறுக்கிக் கொண்டு தத்தித் தத்தி என் அறைக்கு வருகிறேன். கம்பிக் கதவு மேலிருந்து கீழாக சட்டென்று மூடுகிறது. எதிரே இருந்த நிலைக் கண்ணாடியில் நான் ஒரு கிளியாக உருமாறி இருக்கிறேன்.

"நோ" என்று அலறியவாறு எழுந்து உட்கார்ந்தேன்.

"என்னங்க, என்னாச்சு?" என்று கூடவே எழுந்து பதறுகிறாள் மனைவி.

நான் என் கைகால்கள் முகம் குறிப்பாக மூக்கு எல்லாம் தொட்டுப் பார்த்துக் கொண்டு நிம்மதிப் பெருமூச்சு விடுகிறேன்.

"என்ன விஷயம்? ஏதும் கெட்ட கனா கண்டீர்களா?" என்று என் நெற்றியில் கழுத்தில் கன்னத்தில் புற உள்ளங் கை வைத்துப் பார்க்கிறாள்.

அவளுக்குப் புரியவில்லை. எழுந்து போய் தம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து தந்தாள். "முருகா முருகான்னு சொல்லிட்டுப் படுங்க. எனக்குத் தூக்கம் வருது நாளைக்கு தலைக்கு மேல வேலை இருக்கு" என்றபடி அவிழ்ந்திருந்த கூந்தலை அள்ளி முடிந்து கொண்டு படுத்து விட்டாள்.

எனக்கு தூக்கம் முழுவதுமாக விடைபெற்றுப் போய் விட்டது.

எங்கள் அலுவலக வாசலில் அந்த கிளி ஜோசியக் காரர் பல காலமாய் இருக்கிறார் என்றுதான் நினைக்கிறேன். பல விஷயங்கள் கண்ணின் பார்வை விளிம்புக்கு உட்பட்டு இருந்தாலும் கவனத்தில் நுழையாது தப்புகின்ற முக்கியத்துவ மற்ற பட்டியலில் தான் அவரும் இருந்தார் என்றுதான் நினைத்திருந்தேன். பெரும்பாலான சமயங்களில் அவரைக் கடந்து உள் செல்லும் போதும் வீடு திரும்பும் போதும் யாராவது அவர் முன் உட்கார்ந்திருப்பார்கள் ஒரே மாதிரி யான மாறாத குரலில் ஏதாவது சொல்லிக் கொண்டிருப்பார். எதிரே இருப்பவர் பயபக்தியில் தலை அசைத்துக் கொண்டிருப்பார். கிளி ஜோசியம் சொல்பவர்கள், கூவிக் கூவி கூட்டம் சேர்த்து லேகியம் விற்பவர்கள் இவர்களிட மெல்லாம் இருக்கின்ற ஒரே மாதிரியான மாடுலேஷனுட னான பேசும் தன்மை எனக்கு பலமுறை வியப்பை அளித்திருக்கிறது. வாக்கியத்துக்கு வாக்கியம் முற்றுப் புள்ளியே இருக்காது, எல்லாம் அரைப் புள்ளிதான். பள்ளி யில் படிக்கும்போது தமிழாசிரியர் அரைப்புள்ளியின் உபயோகம் குறித்து சொல்லித் தருகையில் லேகியம் விற்பவனைத் தான் உதாரணம் சொன்ன ஞாபகம். வாக்கியம் இலக்கணப்படி முடிந்த மாதிரியும் இருக்கும். விஷயப்படி இன்னும் தொடர்ந்தால்தான் ஆயிற்று என்கிற நிலையும் இருக்கும் லேகியம் விற்பவனின் தொடர் பேச்சைப் போல், அதனை வரிவடிவத்துக்குக் கொண்டு வருகையில் அரைப் புள்ளி இட வேண்டும் என்பார்.

நான் கண்டும் காணாமலுமாக இருந்தும் இந்த கிளி ஜோசியக்காரர் என் கருத்தில் ஆழப்பதிந்திருந்தார்

என்பதன் அடையாளம் தான் அக்கனவோ? என் அப்பாவித்தனத்தை எல்லோரும் உபயோகிக்கிறார்கள் என்கிற காயம் புரையோடி சீழ் வடிக்கிறதோ?

"உனக்குள் ஏதோ அவஸ்தை இருக்குடா. உன் வேலை குறித்து உன் பிறப்பு குறித்து மணவாழ்க்கை குறித்து ஏதோ குறித்து இருக்கிறது. எதிலோ நீ சந்தோஷமாக இல்லை. அந்தப் புழுக்கம் உன் ஆழ்மனதில் உள்ளது. அதன் வெளிப்பாடுதான் இந்த மாதிரியான கனவு" என்றான் நண்பன். சைக்காலஜி அது இது என்று ஏதேதோ படிப்பவன்.

"வாழ்க்கை குறித்து இளவயதில் ஏதும் கற்பனை வைத்திருந்தாயா? எல்லோருக்கும் இருக்கும். பின்னாளில் நடைமுறை வாழ்க்கையுடன் சமரசம் செய்து கொள்ளும் பக்குவம் ஏற்பட்டு சாதாரணமாகி விடுவார்கள். நீ அதை ஏமாற்றமாக நினைத்து உள்ளுக்குள் புழுங்கிக் கொண்டிருக் கிறாய் என்று நினைக்கிறேன்."

இந்த விஷயத்தை இவனிடம் ஆரம்பித்ததே தவறோ என்றுதான் தோன்றியது எனக்கு. தான் படித்த விஷயங் களைப் பரீட்சித்துப் பார்க்க என்னை கேஸ் ஸ்டடி மாடலாக்கி விடுவானோ என்கிற பயமும் வந்தது.

ஆனால் விஷயம் அந்தக் கனவுடன் முடியவில்லை. அது குறித்த சிந்தனைகள் என் கடந்த கால வாழ்க்கை நிகழ்வுகளைத் தோண்டி நாற்றம் கிளப்புமோ என்கிற அச்சம் ஏற்படுத்தும் அளவுக்கு ஏற்பட்ட வண்ணம் இருந்தன. சிறகுகள் வளர்ந்தால் பறந்து விடும் துடிப்புகூட ஏற்படத் தொடங்கியது. பேருந்து நிலையத்தில் யாராவது

மணி கேட்டால் கூட நான் கூண்டைத் திறந்து கிளியாக வெளிவந்து சீட்டெடுத்துக் கொடுத்து அதில் கடிகாரப் படம் வருவது போன்ற கற்பனைக் காட்சிகள் தோன்றி படபடக்க வைத்தன. நண்பனிடமே மீண்டும் தஞ்சமடைவதைத் தவிர்க்க இயலவில்லை.

"நீ உன்னை இறக்கை வெட்டப்பட்ட கூண்டுக் கிளியாக நினைத்து மருகுவதை தினசரிக் காட்சியான அந்த ஜோசியரின் கிளிக்கூண்டு உறுதி செய்துகொண்டே இருக்கிறது. நீ அவரிடம் பக்குவமாகப் பேசி அவரை இடம் மாறிப் போகச் சொல்" என்றான் அவன்.

அதே முடிவுடன் அவர் எதிரில் போய் அமர்ந்தேன்.

"ஐயா பேரென்ன?"

சொன்னேன்.

"ஐயாவோட இறந்தகாலம் எதிர்காலம் கஷ்ட காலம் போகும் காலம் எல்லாம் குறிச்சுச் சொல்ல வெளியே வந்து ஒரு நல்ல சீட்டா எடுத்தக் கொடுப்பா ராசா..."

அவருடைய குரல் என் எம்.டி.யின் குரலாக ஒலித்தது.

கூண்டு திறக்கப்பட கிளி தத்தித் தத்தி வெளியே வந்தது.

எனக்கு அந்தக் கிளியின் பெயரைக் கேட்டு அதன் பெயருக்குச் சீட்டு எடுக்கச் சொல்லிப் பார்த்தால் என்ன என்று தோன்றியது.

"கிளியின் பெயர் என்னங்க?" என்றேன்.

என்னுடைய பெயரையே சொன்னார்.

என் கவனம் முழுதும் அதன் மீதே பதிந்தது. அது தத்தி வந்து ஒவ்வொரு சீட்டாக தள்ளி விட்டபடி அவருடைய விரல்களின் மீது பார்வையை வைத்திருந்தது. அவருயை விரலின் சமிக்ஞைக்குப் பணிந்து ஒரு சீட்டை எடுத்து அவர் முன் போட்டுவிட்டு தன் கூண்டுக்குள் போய்விட்டது.

இந்த ஜோசியக்காரரை இடம் மாறச் சொல்வதற்கு பதில் இந்தக் கிளியையே வாங்கி சுதந்தரமாக வானில் பறக்கவிட்டால் என் மனம் லேசாகும் என்று தோன்றியது.

"இந்தக் கிளிக்கு இறக்கைகள் உண்டா?" என்று கேட்டேன்.

"ம் இருக்கே" என்றார். வெளியே அதை எடுத்துப் பிரித்துக் காண்பித்தார்.

"பொதுவா இறக்கைகளை வெட்டிடுவீங்கன்னு கேள்விப்பட்டிருக்கேன்."

"சின்னக் குழந்தை வெளியே போய் அடிபட்டுடக் கூடாதுன்னு வீட்டுக்குள் பூட்டி வைக்கிறதில்லையா? அது மாதிரிதான். இப்போ வளர்ந்து விவரம் தெரிஞ்சாச்சு. இறக்கையோடதான் இருக்கும்."

"இப்படி கிளியை சிறைப்படுத்தி கொடுமை பண்றீங் களே, பாவமில்லை? அதை சுதந்தரமா பறக்க விடாம அதன் பிறப்புரிமையை மூலதனமா வச்சு சம்பாதிக்கறது தப்பில்லையா?"

அவர் சிரித்தார், "பறந்து போய் என்ன செய்யும் சார்? அதுக்கு தேவை வேளைக்கு சாப்பாடும் தங்க இடமும். இரண்டும் நான் ஏற்பாடு செஞ்சிருக்கேன். அது தேடித் தேடி சாப்பிட அவசியம் இல்லாம நானே வேளைக்கு பழமும் தானியமும் தர்றேன். வேறென்ன வேணும் அதுக்கு?"

"அதது கூட்டத்தோட இருந்தா சந்தோஷமா இருக்கும் இல்லையா?"

"அப்படின்னு யார் சொன்னது? கிளிக்கு சந்தோஷம் எதுன்னு நாம எப்படித் தீர்மானிக்க முடியும்?"

எனக்கு பொட்டில் அடித்தது போல் இருந்தது.

"இருந்தாலும் சுதந்தரமா பறந்து திரியறது அதனுடைய பிறவிச் செயல்பாடு இல்லையா?"

"இறக்கை இருக்குங்கறதுக்காக பறந்திட்டே இருக்கக் கூடாது சார். கால் இருக்குன்னு நீங்க ஓடிட்டேவா இருக்கீங்க? சாயங்காலமானா வீடு திரும்பலையா? இறக் கைங்கறது கட்டுப்பாட்டுக்கான அடையாளம். எங்கே எவ்ளோ தூரம் எந்த திசையில் போகணுமோ அந்தளவு மட்டும் போறதுக்குத் தான் இறக்கை. வேணும்னா நீங்களே இதை பறக்க விட்டுப் பாருங்க" என்றவர் பளிச்சென்று கூண்டு திறந்து கிளியை வெளியே எடுத்து என் கைகளின் மீது வைத்தார்.

நான் தயங்க அது படபடவென இறக்கைகளை அடித்தது. நான் தூக்கிவிட பளிச்சென்று என் கைகளைக் கொத்தி விட்டு பறந்து போய் அவருடைய காலடியில் போய் உட்கார்ந்தது. தானே நடந்து கூண்டுக்குள் போனது.

நான் அது கொத்திய கையை உதறி விட்டுக் கொண்டிருந்தேன்.

"பறவை மிருகமெல்லாம் ரொம்பத் தெளிவு சார். இருக்கறதை விட்டுட்டு பறக்கறதை நினைத்து ஏக்கத்துலயே அழியறது மனித ஜாதி ஒண்ணுதான். என்னுடைய இந்தத் தொழிலுக்கு மூலதனமும் அந்த ஏக்கம்தான். இந்தக் கிளி இல்லை. புரியுதா சார்..."

தரையிறங்கினாற் போல் உணர்ந்தேன்.

✲

13. பாரம்

என் முகத்திலேயே எழுதி ஒட்டப் பட்டிருந்திருக்க வேண்டும் இது அவசர கிராக்கி என்று. ரிஸர்வேஷன் கவுண்டர்கள் இருந்த கட்டடத்துக்குள் நுழைந்த மாத்திரத்தில் "சார்! மும்பையா? என்னிக்குப் போகணும்?" என்று கேட்டபடி ஒருவன் நெருங்கினான்.

ஏர் கண்டிஷன் செய்யப்பட்ட பெரிய ஹால். கல்யாண வீடு மாதிரி கூட்டம். முப்பத்து சொச்சம் கவுன்டர்கள். அத்தனைக்கும் முன்னே நீளநீளமாய் வரிசைகள். இவ்வளவு பேரும் வெளியே போக ஆசை உள்ளவர்களா? சம்மர் வெகேஷன் வந்தாலே இதுதான் பாடு. எதிலும் கூட்டம்; எங்கும் நெரிசல். ஷாப்பிங்கா, ஆட்டோவா, பஸ்ஸா, ட்ரெயினா எல்லா இடங்களிலும் கூட்டம். எங்காவது போக வேண்டும். எல்லா இடங்களிலும் கூட்டம், சித்தி வீடு, தாத்தா வீடு என்று குடும்பம் புடைசூழ அலைய வேண்டும். அவர் களையும் அழைக்க வேண்டும்.

ஒவ்வொருவர் முகத்திலும் விதவிதமான உணர்ச்சி வெளிப்பாடுகள். கூட்டத்தைப் பற்றிய கவலையே இன்றி கடனே என்று நின்று கொண்டிருந்தனர் இரண்டு போலீஸ் கான்ஸ்டபிள்கள். சிலர் ஓர பிளாஸ்டிக் நாற்காலிகளில் உட்கார்ந்து புத்தகம் பார்த்துக் கொண்டிருந்தனர். வெயிலுக் காக ஒதுங்கியவர்களாக இருக்கலாம். உலகம் மறந்து உராய்ந்து உட்கார்ந்தபடி சில காதலர்கள். கிரானைட் ஸ்லாபுகளில் அவசரமாக ரிஸர்வேஷன் பார்ம் நிரப்பிக் கொண்டிருந்தனர் சிலர்.

"ஜல்தி போலியே சாப். கஹாங் ஜானா ஹை?" என்றபடி என்னைத் தொடர்ந்தவனை அலட்சியம் செய்தபடி ஓரத்தில் இருந்த டி.வி. மானிட்டர்களைப் பார்க்கப் போனேன். நாளைய நவஜீவனில் இடம் இருக்க சுத்தமாக வாய்ப்பு இல்லை என்றாலும் ஒரு நப்பாசை. மானிட்டர் இன்னும் ஒரு மாதத்துக்கு வெயிட்டிங் லிஸ்ட் கூட இல்லை என்று நோரும் காட்டியது.

அந்த ஹாலினைப் பரிதாபமாக சுற்றிப் பார்த்தேன்.

"எந்த ஊருக்கும் இன்னும் இருபது நாளுக்கு டிக்கெட் கிடையாது சார். எல்லாம் ஃபுல். உங்களுக்கு எங்கே போகணும்?" என்று கேட்டான் விரட்டி வந்தவன்.

சென்னை என்றேன்.

"சின்னை? ஷா பார்ட்டி. இங்கேயே இருங்க. ஷாகிட்ட சொல்லி அனுப்பறேன்" என்று நகர்ந்து கூட்டத்தினுள் மறைந்தான்.

"சூர்யா ரொம்ப பயந்திட்டா போலிருக்கு. உன்னைப் பார்த்தே ஆகணும்னு அடம் பிடிக்கறாளாம். உன்கிட்ட எப்படி சொல்றதுன்னு உன் மாமனார் தயங்கறார். நீ உடனே புறப்பட்டு வந்து சேரு"

அப்பாவின் சொற்கள் காதில் ஒலித்தபடி இருந்தன.

"சின்னையா?" என்ற குரலுக்குத் திரும்பினேன்.

ஷாவாக இருக்க வேண்டும்.

"என்னிக்குப் போகணும்?"

"நாளைக் காலை"

"செகன்ட் கிளாஸ்?"

"ம்"

"நானூறு ரூபாய் எக்ஸ்ட்ரா ஆகும்."

"அதிகம்" என்றேன்.

சலிப்பாய்ப் புன்னகைத்தான்.

"பேரத்துக்கே இடம் கிடையாது சார். பிக்ஸட் ரேட்ஸ்"

எனக்கு குப்தா சொன்னது ஞாபகம் வந்தது.

முன்பின் தியேட்டர்களில்கூட கள்ள டிக்கெட் எடுத்துப் பழக்கமில்லாதவன் நான். தூரத்தில் நின்ற போலீஸ்காரன் எங்களையே பார்த்துக் கொண்டிருப்பது போல் தோன்ற "போலீஸ் பார்க்கிறது" என்றேன் மெல்ல.

ஷா சிரித்தான். "முதல் தடவையா இங்கே வர்றீங்களா? சட்டுனு சொல்லுங்க. டிக்கெட் வேணுமா?"

"கன்பார்ம் டிக்கெட் கிடைக்குமா?"

"டிக்கெட் கைல வாங்கினப்புறம் கமிஷன் காசு குடுங்க போதுமா?"

"டிக்கெட் என் பெயரில் இருக்கணும்"

"இருக்கும்"

"நோ ரூம்னு போட்டிருக்கே"

"அதுக்குத்தான் சார் நானூறு"

"டிக்கெட் எப்போ கிடைக்கும்?"

"இப்போ டிக்கெட் காசும், இருநூறு ரூபா எக்ஸ்ட்ராவும் குடுங்க - வெயிட்டிங் டிக்கெட் எடுத்துத் தர்றேன். நைட் எட்டரை மணிக்கு வாங்க, கன்பார்ம் பண்ணித்தர்றேன். பாக்கி அப்போ கொடுத்தா போதும்"

எனக்குள் பயம். இப்படிப்பட்ட ஆட்களை நம்பலாம் என்று குப்தா சொல்லியிருந்தும் கூட தயக்கம், டிக்கெட் காசும், எக்ஸ்ட்ரா இருநூறும் சேர்த்து அடித்துக் கொண்டு போய் விட்டால்?

எவனோ ஒருவன் அவசரமாக ஷாவிடம் வந்து, "ஒரு பார்ட்டி வாரங்கலுக்கு நாலு டிக்கெட் கேட்குது" என்றான்.

"இருக்கச் சொல்லு" என்று அவனை அனுப்பிய ஷா "சார்! இவ்வளவு பயமும், தயக்கமும் கூடாது. நான் இந்தத் தொழிலில் ஊறியவன். உங்ககிட்ட ஐநூறு ரூபா அடிச்சிட்டுப் போய் எத்தனை நாள் வாழ்ந்திட முடியும் நான்? இந்த மாதிரி சம்மர் வெகேஷன் இதை விட்டா தீபாவளி, சங்கராந்தி பீரியட்கள்ல ஏதோ கிடைக்கும், பண்றேன் அவ்வளவு தான். அவசர கேஸ்கள் ஆயிரக் கணக்கில் செலவளிக்கத் தயாரா இருந்தும் எதிலும் டிக்கெட் கிடைக்காம போக முடியாதபடி தவிக்கிறவங்களுக்கு என் மாதிரி ஆட்களின் அருமை தெரியும். என்னால் உபயோகம் அடைந்தவங்க பத்து பேர்கிட்ட சொல்லி அனுப்பி விடறாங்க. நீங்களெல்லாம் கண்ணாடி ரூம்ல டேபிள் சேர் போட்டு டிராவல்ஸ்ங்கற பேர்ல ஃப்ராட் பண்ணினா, போய் ஆயிரமாய்க் கொட்டி ஏமாறத்தயாரா இருப்பீங்க. கால் நடையா பைஜாமா போட்டுக்கிட்டு ஷா ஓர் அம்பது ரூபா சம்பாதிக்க நினைச்சா ஆயிரம் சந்தேகம் வரும். உங்களைக்

கட்டாயப் படுத்தலை. யோசிச்சு வைங்க" என்றபடி நகர்ந்து விட்டான்.

கண்ணாடி ஜன்னல்களுக்கு வெளியே அகமதாபாத் நகரம் பிஸியாய் வியர்த்துக் கொண்டிருந்தது. இந்த மாதிரி ஏமாற்று வழியில்லாமல் சென்னைக்கு நேர்மையாய்ப் போக வேறு மார்க்கம் இருக்கிறதா என்று யோசித்துப் பார்த்தேன். நாற்பது மணிநேரப் பிரயாணம். இந்த பொரித்தெடுக்கும் நூற்றுப் பதிநான்கு டிகிரி வெயிலில் அன்ரிஸர்வ்ட் பெட்டியில் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஹிட்லர் காலக் கொடுமை. சூர்யா பாவம்; வயிற்றுப் பிள்ளைக்காரி. சும்மாவே பயந்த சுபாவம். முதல் பிரசவம்; குழந்தை பொஸிஷன் சரியாக இல்லை. சிஸேரியன் தான் என்று சொன்னால் மிரளாமல் என்ன செய்வாள்?

ஷாவிடம் போனேன். பணத்தைத் தந்தேன். பத்து நிமிடங்களில் வெயிட்டிங் லிஸ்ட் எண் இருநூற்று எண்பத் தெட்டு என்று ஒரு டிக்கெட் நாளைய தேதியோடு கொண்டு வந்தான். "ராத்திரி எட்டரை மணிக்கு வாங்க. கன்பார்ம் பண்ணிடலாம்" என்றான்.

"இந்த பில்டிங் எட்டு மணிக்கு அடைச்சிடும்னு போட்டிருக்கே" என்று கேட்டேன் தயக்கமாய், எனக்கே கேட்காத குரலில்.

ஷா சிரித்தான். "அதிலும் சந்தேகமா? நாங்க எல் லோரும் இங்கே தான் சார் இருப்போம். எட்டு மணிக்கு கவுன்டர்கள்தான் மூடுவாங்க. பில்டிங் திறந்துதான் இருக்கும். தைரியமா போயிட்டு வாங்க" என்றான்.

ஏதோ ஒருவித மெஸ்மரிஸ மயக்கத்தில் பேசக்கூட ஏன் தயங்கினேன் என்று யோசிக்க வியப்பாக இருந்தது. ஏமாறுகிறோம் என்று உள்ளுணர்வு எச்சரிக்கிறதா அல்லது தப்பு செய்கிறோம் என்று உறுத்துகிறதா என்று இனம்பிரிக்க முடியவில்லை, ஏமாற வேண்டும் என்று விரும்புகிறனோ? ஏன்? தப்பு செய்வதில் இருந்து தப்பிக்கவா? நான் செய்வது தப்பு தானா? உலகத்து ஜனங்கள்ல ரெண்டே வெரைட்டி தான் சார். ஒண்ணு தப்பு பண்றவங்க. இன்னொண்ணு தப்பு பண்ண சரியான சந்தர்ப்பம் கிடைக்காதவங்க என்று குப்தா கெக்கலிப்பாய்ச் சொல்லிச் சிரித்தாரே அது உண்மை யாகிறதே என்கிற ஈகோ பாதிப்பா?

எங்கள் கம்பெனியின் பல துணைக் கான்ட்ராக்டர் களில் முக்கியமான ஆள் குப்தா. வயது நாற்பதுகளில் இருக்கலாம் என்று நம்பவைக்கும் ஐம்பத்தெட்டு. அலட்டாமல் ஆனால் அழுத்தமாய்ப் பேசக் கூடிய ஆள். வாயில் எப்போதும் பான் அல்லது தம்பாக்கு.

குஜராத்தி ஆட்களில் தம்பாக்கு போடுவது ஒரு வியாதி மாதிரி. பள்ளிப் பருவத்திலேயே ஆரம்பித்து விடுகிறார்கள். அதற்காகவே வாசலின் டப்பா மாதிரி இரண்டு பக்கம் மூடியுடன் எப்போதும் சட்டைப் பையில் வைத்திருப்பார்கள்.

குப்தா எப்போது என் சீட்டுக்கு வந்தாலும் "என்ன சார் எப்படி இருக்கீங்க?" என்று கேட்டபடியே பதில் எதிர் பார்க்காமல் பையிலிருந்து அந்த டப்பாவை எடுத்துத் திறந்து இடது உள்ளங்கையில் கொஞ்சம் காய்ந்த புகை

யிலைத் தூளைக் கொட்டிக் கொள்வார். அதே டப்பாவைப் பின்புறம் திருப்பித் திறந்து கொஞ்சமாய் வலது சுட்டுவிரல் நுனியில் சுண்ணாம்பு எடுத்துக் கொள்வார். டப்பாவை மூடி பையினுள் வைத்து விட்டு இடது உள்ளங்கையைக் கிண்ணம் மாதிரி ஆக்கிக் கொண்டு வலது சுட்டு விரலை உள்ளே விட்டு சுண்ணாம்பும், புகையிலை தூளும் நன்கு கலக்கும் வண்ணம் கசக்குவார். பிறகு கையை விரித்தாற் போல் வைத்துக் கொண்டு வலது கையால் பட், பட் என்று தட்டுவார். பிசிறு புகையிலைகள், ஓரம் கட்டும். வாயால் ஊதி அவற்றைப் பறக்க விட்டு மீதித் தூளை என் பக்கமாய் நீட்டி, 'எடுத்துக்கோ சார்' என்பார். நான் மறுப்பேன் என்று தெரியும். இருந்தும் நீட்டுவார். நான் மறுத்தபிறகு அவற்றைக் கூட்டி வாயினைக் குவித்து கீழ் உதட்டுக்கும் கறை படிந்த பல்ஈறுக்கும் நடுவே கொட்டி கீழ் உதட்டைக் கொஞ்சம் உப்பலாக வைத்துக் கொண்டு நாவில் விழுந்த பிசுறுகளை பூ-பூ- என்று துப்பி விட்டு புத்துணர்வு வந்தவராய் ஏதாவது ஒரு தேதி முடிந்த டென்டர் பற்றிக் கேட்பார். ஓர்க் கம்ப்ளீஷன் சர்டிபிகேட் சேர்க்காமல் அவர் அனுப்பி இருந்த பில்களின் பேமன்ட் பற்றி விசாரிப்பார். திடீரென்று குரல் குறைத்து, போன வாரத்தில் அவர் யார் யாருக்கு எவ்வளவு தந்தார் என்று கிசுகிசுப்பார். நான் எவ்வளவு வெறுப்பு காட்டினாலும் ஏன் அவர் என்னிடம் பிரியமாக சுற்றிச் சுற்றி வருகிறார் என்பது அவருக்கும் ஆண்ட வனுக்கும் தான் தெரியும்.

"தம்பி! உனக்கு வயசு இருக்கு. முக்கியமான இடத்துல உட்கார்ந்திருக்கிற. பழகிக்க. தப்புன்னு நினைச்சா எல்லாமே

தப்புதான். தரும தரிசனத்துக்கு பாமரன் மணிக்கணக்கா காத்திருக்க, சிறப்பு தரிசனம்னு காசு குடுத்து சீக்கிரமா சாமி பார்ப்பீங்களாமே உங்க ஊர்க் கோயில்கள்ல, அது உன் இலக்கணப்படி தப்பில்லையா? பிறக்க வச்சு அனுப்பும் போது கடவுள் எதுவும் கண்டிஷன் போட்டா அனுப்புறார்? எல்லா ரூல்ஸும் மனுஷன் போட்டதுதான். மற்ற ஜீவராசிகள்ல இல்லாத குழப்பம் மனுஷ ஜன்மத்துல மட்டும் இருக்குன்னா அதுக்கு காரணம் அது எல்லாம் ஒரே மாதிரியான இயற்கைக் கட்டுப்பாட்டுல இயங்குது. மனுஷன் தான் ஆள் ஆளுக்கு வித்தியாசம். ஒரு சிங்கத்தை பழக்கினா அதே மாதிரி எல்லா சிங்கத்தையும் பழக்கிடலாம். ஒரு மனுஷனை செட்டப் செய்யற மாதிரி இன்னொருத்தனைப் பண்ண முடியறதில்லை. எங்களுக்கெல்லாம் எவ்வளவு கஷ்டம் தெரியுமா? ஒருத்தன் காசு வாங்கறான்னு இன்னொருத்தனுக்கு கொடுத்திட முடியறதில்லை. தையா தக்கான்னு ரூல்ஸ் பேசுவான். கொஞ்சம் நெருக்கினா தெரியும். அவர் நேரடியாக வாங்கமாட்டார். வீட்ல கொடுத்திடணும்னு. ஒண்ணு சொல்லவா தம்பி? சந்தர்ப்பம் கிடைக்கும் வரை எல்லாப் பொண்ணுகளும் கற்புக்கரசின்னு சொல்லுவாங்க. அது அவங்களை விட ஆம்பளைங் களுக்குதான் அச்சு அசலாப் பொருந்தும்”

“மகா மட்டமான ராஷனலைஸேஷன்” என்பேன் வெறுப்பாக.

“உலகம் அப்படி ஆயிட்டு வருது தம்பி. நான் நாலு தலைமுறை ஆட்களைப் பார்த்திட்டேன். படிச்சவங்க கூடக் கூடத்தான் இந்த குறுக்கு வழி, திருட்டுத்தனம் எல்லாம்

பெருகிப் போச்சு. வக்கீல் படிப்புக்கெல்லாம் முன்னால, கிராமங்களில் எல்லாம் கட்டப் பஞ்சாயத்துதான். அனுபவ சாலி கிழவங்கதான் ஜட்ஜூகள், ஒழுக்கமும், கட்டுப்பாடும், ஜனங்களுக்கு பாதுகாப்பும் இருந்தது. இன்னிக்கு மாதிரி நீதியைப் பணத்தால் ஒத்திப் போடவோ, இல்லாம ஆக்கவோ முடிஞ்சதில்லை. ஆடிட்டர் படிப்புக்கெல்லாம் முன்னால், கோயில்ல சத்தியம் பண்ணிச் சொல்றதுதான் கணக்கு, கள்ளக் கணக்கும், பதுக்கலும் லீகலைஸ் ஆன தெல்லாம் இப்போதான். சரித்திரத்துல எந்த ராஜாவாவது அகாலமா குத்திக் கொல்லப்பட்டு செத்ததுண்டா? இன்னிக்கு எந்த நாட்டு லீடராவது தனியா தைரியமா ஒண்ணுக்குப் போக முடியுதா? பிஸினஸ்கள்ல திருட்டுத்தனம் பெரிய அளவில் வளர்ந்ததும், ஆபீஸ்கள்ல நிர்வாகம் கெட்டதும் படிச்சவன் ஆக்ரமிப்பு செஞ்ச பின்னாடிதான். உன் உடம்புல மட்டும் சுத்தமான இரத்தம் ஓடறதா நினைக்காதே. உனக்கு சந்தர்ப்பம் வாய்க்கலை. கூடவே கொஞ்சம் பயம்."

"என்ன பயம்?"

"மாட்டிக்குவோமோ, பேர் கெட்டுப் போயிருமோன்னு பயம். நீயும் தப்பு பண்ணுவே. யாருக்கும் தெரியாம முதல்ல தப்பு பண்ணும்போது என் ஞாபகம் நிச்சயமா உனக்கு வரும்"

குப்தா அப்படி சவால் விட்டதால் தான் உறுத்தலா? என் மனமே என்னைப் பார்த்து கிண்டல் பண்ணுவது போன்ற தன்னிரக்கமா?

குறுக்கு வழியில் டிக்கெட் வாங்குவது என் அகராதிப் படி தப்பா, தப்பில்லையா என்றே தெரியவில்லை. எப்படித்

தப்பாக முடியும்? மனைவிக்கு சீரியஸ். அவளைப் பார்க்கப் போக வேறு வழி இல்லை. நான் எங்கே தப்பு செய்கிறேன்? இது தப்பான வழி என்றால் இதைப் பற்றிச் சொல்லும் போது குப்தா இளக்காரமாகச் சிரித்திருக்க வேண்டுமே.

அப்பாவிடமிருந்து போன் வந்து முகம் இறுக என்ன செய்வது என்று உட்கார்ந்திருக்கும் போது ஒடி வந்து ஆறுதல் சொன்னது குப்தாதானே? "என்ன தம்பி! இதுல பயப்பட என்ன இருக்கு? பாபிஜிக்கு ஒண்ணும் ஆகாது. நீங்க போய் அவங்களுக்கு தைரியம் சொல்லுங்க" என்று இதமாய்ச் சொன்னாரே. சம்மர் வெகேஷனைச் சுட்டிக்காட்டி டிக்கெட் கிடைக்காதே என்று கலங்கியபோது ஷா மாதிரி ஆட்கள் இப்படி டிக்கெட் பெற்றுத் தருவார்கள் என்று எடுத்துச் சொல்லி அனுப்பி வைத்தாரே.

"பார்த்தியா சார்! உனக்கு, உன் ஓய்ஃப்புக்கு ஒரு பிரச்சினைன்னா உடனே ரயில்வே ஆளுக்கு லஞ்சம் கொடுக்க தயாராயிட்டயே இது எந்த ஊர் நியாயம்? நான் ஒரு கான்ட்ராக்ட் பிடிக்க லஞ்சம் குடுத்தா சாக்கடைப் புழுவைப் போலப் பார்க்கற. இப்போ உன்னைக் கண்ணாடியில் எப்படிப் பார்ப்பியாம்?" என்று நான் திரும்பி வந்த பிறகு குப்தா கெக்கலி கொட்டமாட்டார் என்று என்ன நிச்சயம்?

குப்தா..... குப்தா..... குப்தா.....

தலையைச் சிலிர்த்து அவர் ஞாபகத்தை அகற்ற முயன்றேன். பகல் ஷோ சினிமா பார்த்து நேரம் கடத்தினேன். சாப்பாடு முடித்து ரயில்வே ஸ்டேஷன் ரிஸர்

வேஷன் கட்டடத்திற்கு வந்தேன். அங்கே ஷாவை மீண்டும் பார்க்கும் வரையில் ஓரத்தில் இருந்து உறுத்திக் கொண்டி ருந்த பயம் பளிச்சென்று நீங்கியது.

ஷா என் டிக்கெட்டை வாங்கிப் போய் க்ால் மணி நேரத்தில் எஸ் - 8/46 என்று எழுதி வாங்கி வந்து தந்தான். "தைரியமா போயிட்டு வா சார்" என்றான். பேசியபடி மீதிப் பணத்தை எண்ணித் தந்து விட்டு வெளியே வந்தேன்.

அப்பாவுக்கு போன் செய்து நான் வருகின்ற விஷயத்தைச் சொன்னேன். சூர்யா சீரியஸாகத் தான் இருக்கிறாள் என்பது அவர் மழுப்பலாகப் பேசியதில் தெரிந்தது. இன்னும் ஏழெட்டு மணிநேரம் பாக்கி. ரயிலில் ஏறி உட்கார்ந்தால் நாற்பது மணிநேர பிரயாணம்.

உடனடியாக அவள் பக்கத்தில் போய் உட்கார்ந்து அவளுக்கு ஆறுதல் சொல்ல வேண்டும் போலிருந்தது. "ஒண்ணும் ஆகாது சூர்யா. நாம் மனசறிஞ்சு எந்த தப்பும் பாவமும் செஞ்சதில்லை.... இல்லையா?" யார் பெயருக்கோ ஆகியிருக்க வேண்டிய கன்ஃபர்மேஷனை என் பெயருக்கு மாற்றிக் கொண்டதற்கு என்ன பெயர்? போலிச் சான்றிதழ் காட்டி யாருக்கோ நியாயமாய்க் கிடைத்திருக்க வேண்டிய வாய்ப்பினைத் தட்டிப் பறித்து வேலை பெறுபவர்களுக்கும், எனக்கும் என்ன வித்தியாசம்?

சின்ன வயதில் இருந்து நேர்மை, ஒழுக்கம் என்று ஊட்டி வளர்த்த அப்பா மீது கோபம் வந்தது. நடைமுறை வாழ்க்கைக்கு ஒத்து வராத விஷயங்களை ஏன் இரத்தத்தில் ஊற விட்டார்? இப்போது மனம் எந்த அளவுக்கு

சம்பந்தமில்லாத விஷயங்களை முடிச்சுப் போட்டுத் தொலைக்கிறது.

குழப்பமாக இருந்தது. பிளாட்பார்ம் சிமின்ட் பெஞ்சில் படுத்தேன் .

சூர்யா எந்தப் பாவமும் அறியாதவள். குழந்தை பொஸிஷன் சரியில்லை என்பது இந்த நாட்களில் சாதாரணம். நூற்றுக்குத் தொண்ணூறு கேஸ்கள் இந்த நாட்களில் ஏதாவது காரணம் தொட்டு சிஸேரியன் தான். சூர்யா கொஞ்சம் அனீமிக் என்று முன்பொருமுறை டாக்டர் சொன்னது ஞாபகம் வந்தது. வயிற்றைக் கீறினால் தாங்குவாளா? முதல் பிரசவம் கண்டம் என்பார்களே. பாவம் பெண்கள். ஆம்பளைங்களுக்கு நிமிஷ சுகம். பொண்ணுங் களுக்குத் தான் என்ன கஷ்டம்!

நேரம் ஓடிக் கொண்டிருந்தது.

ரயில் பிளாட்பார்முக்கு வரும் முன்பே போர்டில் சார்ட் ஒட்டினார்கள். கூட்டம் முண்டியடித்துக் கொண்டு பார்க்க முயன்றது.

ரயில் வந்து நின்றது. நான் அன்ரிஸர்வட் கம்பார்ட் மென்ட் நோக்கி நடந்தேன்.

அன்ரிஸர்வ்ட் கம்பார்ட்மென்ட் பயணம் நெரிசலாக இருந்தது, அசுத்தமாக இருந்தது, புழுக்கமாக இருந்தது, அலுப்பாக இருந்தது. ஆனால் மனபாரம் இல்லாமல் இருந்தது.

✲

14. கடைசி வைக்கோல் துணுக்கு

"ஏன், மகாராணி என் கூட வரமாட்டாளாமா? அன்னிக்கு கிருஷ்ணன் பக்கத்துல ஒட்டி உட்கார்ந்து போனது மட்டும் இனிச்சது; நாங்கன்னா கசக்குதாமா?" என்று சுந்தர்ராஜன் சார் கொக்கரித்துக் கொண்டிருந்தது அந்த அறையினுள் ஃபைலைக் கொண்டு வைக்கச் சென்ற என் காதுகளில் பட துடித்துப் போனேன்.

நரகலில் கால் அழுந்த அது விலையுயர்ந்த பட்டுச் சேலை சரிகை பார்டரிலும் படர்ந்துவிட்டது போன்ற அரு வருப்பில் மொத்த உடம்பும் ஒருமுறை குலுங்கி அடங்கியது, என் கைகள் நடுங்கத் தொடங்கியிருந்தன.

சுந்தர்ராஜன் சாரும் எதிரே நின்றிருந்த சபாபதியும் என்னை அங்கே எதிர்பார்த்திருக்கவில்லை.

என்னைப் பார்த்த மாத்திரத்தில் சபாபதி விறைத்துப் போக சுந்தர்ராஜன் சார் சட்டென்று முகத்தையும் குரலையும் மாற்றிக் கொண்டு, "மேடம்! உங்க வேலை எல்லாம் முடிஞ்சாச்சா? கம்பெனி காரிலேயே போயிடலாமே" என்றார் குழைவாக.

பாவி! எப்படித்தான் இப்படி ஒரு பணிவையும் அன்பையும் அப்பாவித்தனத்தையும் ஒரே விநாடியில் குரலுக்குள் கொண்டு வர முடிகிறதோ உன்னால்!

"இல்லை சார்! நீங்க கிளம்புங்க எனக்கு அடுத்த தெருவில் உள்ள பிரண்ட் வீட்டில் ஓர் என்கேஜ்மென்ட்

இருக்கு. நடந்தே போயிடுவேன்" என்று அழுத்தமாகக் கூறிவிட்டு ஃபைலை அவருடைய மேசையின் மீது வைத்துவிட்டு அவர்களை ஏறிட்டு பார்க்கும் தைரியம் இல்லாத்வளாக அவசரமாக அறையை விட்டு வெளியே வந்தேன்.

படபடப்பாக இருந்தது.

தண்ணீர் கூலரில் இருந்து குளிர்ந்த நீரினைத் தம்ளரில் நிரப்பிக் கொண்டு வாஷ்பேசினுக்குப் போய் முகத்தில் தெளித்தேன். பாதி நீரினை குடித்தேன்.

கண்ணாடியில் என்னைப் பார்க்க எனக்கே பரிதாபமாக இருந்தது. என்ன பிழைப்பு? என்கிற சுய இரக்கம் பிறந்தது.

நேராக என் இருக்கைக்குப் போய் இரண்டு கைகளை யும் நெற்றிக்குக் கொடுத்து தொய்ந்து உட்கார்ந்தேன். ஏசி அறையிலும் வியர்த்துக் கொண்டிருந்தது.

கிருஷ்ணன் பக்கத்தில் உட்கார்ந்து போனது இனிச்சது; என் பக்கத்தில் உட்கார்ந்தால் கசக்குதா?

என்ன ஆணவமான வார்த்தைகள்!.

என்ன அருவருப்பான பிறவிகள்!

அலுவலகத்தில் மேலிட இன்ஸ்பெக்ஷன் என்று அதிகப்படி வேலை. கம்ப்யூட்டர் ஆபரேஷன்ஸ் எல்லாம் சரளமாகத் தெரிந்தவள் நான் மட்டுமே என்பதால் என் குறைந்த வயதையும் தங்களுடைய அதிக வயதுகளையும் கூட மறந்து "மேடம், மேடம், ப்ளீஸ்!" போன்ற அலங்கார

வார்த்தைகளால் தோரணம் கட்டி அதிக நேரம் இருக்க வைத்து ரிப்போர்ட்டுகளில் புள்ளி விவரங்களில் இருக்கும் பலகீனங்களை அவற்றின் புற அலங்காரங்களில் மறைக்க என் உதவியை நாடும்போது எவ்வளவு பணிவாகக் குழைகிறார்கள்.

வேலை எல்லாம் முடிந்த மறுகணமே இவர்களுக்குத் தம் பதவிகள் ஞாபகம் வந்து விடுகின்றன. பெண்ணாயிற்றே என்று இரவில் வீட்டுக்குப் போக பொறுப்பாக உதவி செய்தாக வேண்டியதைக் கடமை என்று கூட இவர்கள் உணர்வதில்லை.

அலுவலகத்திற்கு என்று ஒரு கார் இருக்கிறது. அது எதெதற்கோ ஊர் சுற்றும். என்னை வீட்டில் கொண்டு விடுவது என்றால் மட்டுமே கம்பெனியின் சிக்கன நட வடிக்கை குறிப்புகள் அனைத்தும் இவர்களுக்கு ஞாபகம் வரத் தொடங்கும். கம்ப்யூட்டர் ஆபரேட்டருக்காக கார் பதினைந்தும் பதினைந்தும் முப்பது கிலோ மீட்டர் பயணிப்பதா? என்கிற கேள்விகள் எழும். கம்ப்யூட்டர் ஆபரேட்டர் என்பதை விட கேவலம் ஒரு 'பொம்பளை' என்கிற உள் அர்த்தம் வெளித் தெரியாமல் பொறுப்புப் பூச்சுடன் அலங்காரமாக வெளிவரும்.

இதே மாதிரிதான் போன முறையும் ஆனது.

அன்று எட்டரை மணி ஆகிவிட்டது எல்லா வேலை களும் முடிய. அப்போது சுந்தர்ராஜன் சார் லீவில் இருந்தார். கிருஷ்ணன் சார் பொறுப்பில் இருந்தார். "முதலில் மேடத்தை வீட்டில் விட்டு விட்டு வா" என்றார் டிரைவரிடம்.

அவன் "வண்டியில் டீசல் இல்லை சார்" என்றான். அதிக பட்சமாக ஒரே டிரிப்தான் அடிக்கலாம் என்கிற நிலைமை. மொத்தம் ஐந்து பேர் போக வேண்டும்.

காரில் மூவர் பின் சீட்டில் உட்காரலாம். நான் மட்டும் பெண். முன் சீட்டில் உட்காரலாம். பாக்கி இருக்கும் ஒருவர்?

அலுவலகம் புறநகர்ப்பகுதியில் இருக்கிறது. என் வீடும் அடுத்த புறநகர்ப் பகுதி. எட்டு மணிக்கு மேல் பேருந்து வசதி மிகக் குறைவு. இரண்டு மூன்று பேருந்துகள் மாறி பயணிக்க வேண்டும்.

ஆளுக்கு ஒரு திசையில் வீடு. ஆண்கள் யாரும் தாமாகவே முன் வந்து எப்படியாவது போய்க் கொள்கிறோம் என்று இறங்கத் தயாரில்லை.

கிருஷ்ணன் சார் "பரவாயில்லை. நீங்க நான்கு பேரும் கிளம்புங்க நான் பார்த்துக்கறேன்" என்றார்.

எங்கள் எல்லோருக்கும் தலைமைப் பொறுப்பில் இருக்கும் அவரை விட்டு விட்டு எப்படி நாங்கள் புறப்பட முடியும்?

நிலைமையைப் பார்த்துவிட்டு நானே முன்வந்து "பரவாயில்லை சார். அட்ஜஸ்ட் செய்து போய் விடலாம்" என்று கூறி டிரைவருக்குப் பக்கத்தில் அவர் உட்கார்ந்து கொள்ள கதவுப்பக்கம் ஒடுங்கி உட்கார்ந்து கொண்டு அன்று வீடு போய்ச் சேர்ந்தேன்.

இன்றைக்கு வேலை தாமதமாகும் என்று தெரிந்த மறுகணமே நான் டிரைவரைக் கூப்பிட்டு டீசல் இருப்பதை

உறுதி செய்து கொண்டிருந்தேன். இன்று நான் தனியாகவே வீட்டுக்குப் போவதில் சிரமம் இருக்காது என்று ஒரு நிம்மதி இருந்தது.

வேலைகள் முடிந்த மாத்திரத்தில் சபாபதியிடம் "நான் முதல்ல போய் சென்ட்ரல் பஸ் ஸ்டாண்டில் இறங்கிக் கொண்டு வண்டியைத் திருப்பி அனுப்பிடறேன். அங் கிருந்து எங்க வீட்டுக்கு நேர் பஸ் கிடைத்து விடும்" என்றேன்.

"ஒரு நிமிஷம் மேடம், சுந்தர்ராஜன் சாரிடம் சொல்லிட்டு வந்திடறேன்" என்று போனவன் தொங்கிய முகத்தோடு திரும்பி வந்தான்.

"ரொம்ப சாரி மேடம்! சார் திட்டறார். எல்லோரும் ஒரே டிரிப்ல போயிடலாம்னு சொல்றார். வண்டி நிறைய ஓடுதாம். ஆடிட் அப்ஜக்ஷன் வரும்ங்கறார்" என்றான்.

"எல்லோர் கூடவும் என்னால் வரமுடியாது. நான் நடந்து போய்க்கிறேன்" என்று வெடித்தேன்.

இவனிடம் எப்படிச் சொல்ல முடியும் எனக்கு பீரியட் என்று? எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது. அடி வயிற்றின் வலியை யாருடன் பகிர்ந்து கொள்வது?

காலையிலேயே இன்று விடுப்பு எடுத்துக் கொள்ள லாமா என்று தோன்றுகிற அளவு வலி. நாளைய இன்ஸ் பெக்ஷனை நினைவில் வைத்துத்தான் வந்தேன். எல் லோரும் என்னையும் கம்ப்யூட்டர் கைவண்ணத்தையும் முழுக்க சார்ந்திருக்கிறார்கள் என்று தெரிந்த பிறகும் விடுப்பு எடுப்பது பொறுப்பற்ற செயலாகப் பட்டது.

அதற்கு தண்டனையா?

யார் உணர்கிறார்கள் இதை எல்லாம்?

உங்களுக்கென்ன மேடம்! ஜாலி! ஏசி ரூமில் உட் கார்ந்து ஏதோ கம்ப்யூட்டரைத் தட்டிக் கொண்டிருந்தால் போதும். ஒரு கஷ்டம் உண்டா? ஒரு துளி வியர்வை உண்டா?

எவ்வளவு முறைதான் புன்னகைத்தபடியே இது போன்ற சாதாரண கமெண்ட் என்கிற பெயரில் அடிவயிற்று எரிச்சலைக் கொட்டிக் கொண்டிருப்பவர்களைச் சகித்தபடி இருக்க முடியும்?

ஒற்றைப் பெண். அதுவும் கல்யாணம் ஆகாதவள் என்பதனாலேயே என்னவெல்லாம் கேட்க வேண்டி யிருக்கிறது.

காய்ச்சல், தலைவலி என்று ஓரிரு நாட்கள் விடுப்பு எடுக்க முடிகிறதா? மறுநாள் வந்தவுடன் "என்ன மேடம் எதுவும் பிரச்சினையா?" என்று கேட்பவர்களும் "மடையா இதை எல்லாமா அவர்களிடம் கேட்பது? உனக்கு அந்த வயதில் பொண்ணு இருந்தால் புரியும்" என்று பதில் சொல்லுபவர்களும் எல்லாமாக நாற்பத்தைந்து வயதுகளைக் கடந்தவர்களாக இருந்து தொலைக்க, எவ்வளவு தர்ம சங்கடமாக உணர வேண்டியிருக்கிறது.

புதிதாகக் கல்யாணம் ஆன வெங்கடேஷ் அன்று சொல்கிறான். "மேடம் நீங்க அடிக்கடி எங்க வீட்டுக்கு வாங்க. என் ஒய்ஃபுக்கு உங்க மாதிரியான டிரஸ்ஸிங் சென்ஸே இல்லை. கொஞ்சம் சொல்லிக் கொடுங்களேன்."

"என்ன பிராண்ட் பாடி ஸ்ப்ரே உபயோகிக்கறீங்க மேடம்? என் லவ்வருக்கு பிறந்தநாள் வருது. வாங்கித் தரலாம்னு நினைக்கிறேன்"

நாய்ப் பிறவிகள். தன் மனைவியிலும் காதலியிலும் என்னுடைய பிரதியை ஏன் பார்க்க விரும்புகிறார்கள். என்ன ஒரு மட்டமான எண்ணம். மனைவியின் உடையைப் பார்க்கும்போதும் காதலியை மோப்பம் பிடிக்கும்போதும் என் ஞாபகம் ஏன் இவர்களுக்கு வர வேண்டும்?

ஏதேதோ எண்ணங்கள் சம்பந்தா சம்பந்தமில்லாமல் அணிவகுத்துத் தாக்க வயிற்று வலியுடன் தலைவலியும் சேர்ந்து கொள்ளத் தொடங்கியது.

வாசலில் நிழலாட நிமிர்ந்தேன்.

"மேடம்! எல்லோரும் கிளம்பறாங்க"

எழுந்தேன்.

காரில் எல்லோரும் ஏறியிருக்க "மேடம்! உங்களை உங்க பிரண்ட் வீட்டில் டிராப் பண்ணிட்டுப் போறது எங்களுக்கு சிரமமே இல்லை" என்றார் முன் வரிசையில் டிரைவருக்குப் பக்கத்தில் தனியே உட்கார்ந்திருந்த சுந்தர் ராஜன் சார்.

எனக்கு சிரமம் இருக்கு என்று சொல்லாமல் விழுங்கி விட்டு "பரவாயில்லை சார். அடுத்த தெரு தான்" என்றபடி எதிர்த்திசையில் நடந்தேன்.

காரின் கதவை அவர் அறைந்து சாத்தியதில் வெளிப் பட்ட அவருடைய ஏமாற்றமும் எரிச்சலும் என் பிடறியைத் தாக்கின.

குபுக்கென்று கண்களில் நீர் வந்து முட்டியது.

அந்த ஆள் பக்கத்தில் இடித்துக் கொண்டு உட்கார்ந்து போக மறுப்பதற்குப் பெயர் திமிரா? உங்க வீட்டுப் பெண்கள் இப்படி அந்நிய ஆணின் தோளிலும் தொடையிலும் உரசிக் கொண்டபடி உட்கார்ந்து வந்து வீட்டு வாசலில் இறங்குவதை ஜீரணிக்கும் சக்தி இருக்குமா? அந்நியப் பெண்களிடம் மட்டும் இந்த கள்ளத்தனமான எண்ணத்தை ஏன் எதிர்பார்க்கிறார்கள்?

எல்லோரும் மோசம் என்று சொல்ல முடியாவிட்டாலும் பெரும்பாலான ஆண்கள் இப்படித்தானே இருக்கிறார்கள்? பெண்ணை வசப்படுத்த அவரவர்க்கே உரிய வழிகளில் முயன்ற வண்ணம் தான் இருக்கிறார்கள்.

உடையைப் புகழ்வது, அற்ப விஷயங்களுக்கெல்லாம் வாழ்த்து சொல்வது, தங்கள் கஷ்டங்களைப் பகிர்ந்து கொள்வது போல் ஆறுதல் வேண்டி அழுகுணி வேடத்தில் வழிவது, வேலையில் சந்தேகம் கேட்பது, நாள் பூரா கம்ப்யூட்டர் முன்னாலேயே உட்கார்ந்திருக்கீங்க. கண் வலிக்காதா மேடம் என்று இரக்கம் காட்டுவது என்று எத்தனை அவதாரங்கள்! சிலர் பேசவே மாட்டார்கள். அகஸ்மாத்தாகப் பார்க்கும்போதுதான் தெரியும். என் கவனம் எங்காவது இருக்கும் போதெல்லாம் பார்வையாலேயே மேய்ந்து கொண்டிருப்பார்கள்.

சே!

செருப்பாலடிக்க வேண்டும் ஒவ்வொருவரையும்.

நடக்கும்போது அடிவயிற்றின் வலி கூடத் தொடங்கி யது. எங்கு நடக்கிறேன்? அடுத்த தெருவில் ஃபிரண்டும் கிடையாது; எங்கேஜ்மென்ட்டும் கிடையாது. இரண்டு தெருக்கள் தள்ளி பேருந்து நிறுத்தம் தான் இருக்கிறது. இப்போது பஸ் இருக்கிறதோ இல்லையோ எவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டுமோ!

ஏதாவது குடித்தால் தேவலை என்று தோன்றியது. கடையைத் தேடினால் ஒன்றுமே இல்லை.

அலுப்புடன் நடந்தேன்.

அப்பாவால் வந்த வினை. இவ்வளவு தூரம் தள்ளி உள்ள இடத்தில் வேலை வேண்டாம். கம்ப்யூட்டர் ஆப ரேட்டருக்கு எங்கு வேண்டுமானாலும் வேலை கிடைக்கும். வீட்டுக்குப் பக்கத்திலேயே பார்த்துக் கொள்கிறேன் என்று சொன்னதை எங்கே கேட்டார்?

அவருடைய நண்பர் ஒருவரின் சிபாரிசில் கிடைத்த வேலையாம் இது. இதை நான் வேண்டாம் என்றால். அது அந்த நண்பரை அவமானப்படுத்துவதாகுமாம்.

அவருக்கு தன்னைப் பற்றி அடுத்தவர்கள் சொல்வது நினைப்பது எல்லாம்தான் முக்கியம். அதில் ஒரு பங்கமும் வந்துவிடக் கூடாது. அதைத்தான் இமேஜ் என்று சொல்லிக் கொள்வார். அதனைப் பொத்தி வைத்துக் காக்க எந்த விலையும் தருவார்.

அவருக்கு பெண்கள் என்றால் ஓர் இளக்காரம். அம்மாவாகட்டும் மனைவியாகட்டும் மகளாகட்டும் எல் லோரும் பொட்டச்சிகள்தான்.

பொட்டச்சிகளை வைக்க வேண்டிய இடத்தில் வைக்க வேண்டும் என்பது அவர் தினசரி முழங்கும் சித்தாந்தம். அவரிடம் என் கஷ்டங்களைப் பகிர்ந்து கொள்ளவே முடியாது.

"நான் வேலைக்குப் போகலைப்பா" என்று சொல்ல முடியாது. படிச்ச திமிர் என்பார். பொட்டச்சிகளிடம் கருத்து கேட்க ஆரம்பித்தால் குழப்பம்தான் மிஞ்சும் என்று ஒரே வாக்கியத்தில் எல்லாவற்றையும் முடித்து விடுவார்.

மகளுக்கு சம்பாதிக்க தகுதி உள்ளது. சமையல் செய்ய தகுதி உள்ளது. வீட்டு வேலைகள் செய்ய தகுதி உள்ளது. கருத்து சொல்ல மட்டும் தகுதி கிடையாது. சம்பாதிக்கி றோம்ங்கற திமிர் என்கிற அடைமொழி மட்டுமே எதிர்க் கேடயம்.

அம்மா இறந்த பிறகு மறுகல்யாணம் செய்து சித்தி கொடுமைக்கு ஆளாக்காமல் காப்பாற்றியிருக்கிறாராம். அதைச் சொல்லிக்காட்டியே வாயடைத்து விடுவார்.

சித்தி என்று ஒரு பெண் வந்திருந்தால் கூடத் தேவலையோ என்று அவ்வப்போது தோன்றும். வீட்டில் இன்னொரு பெண் இருப்பதே ஒரு மனோபலம்தானே. ஒரு கணம் இல்லாவிட்டால் ஒரு கணத்தில் பெண்ணுக்குப் பெண் ஆதரவும் ஆறுதலும் ஏற்படாமலா போயிருக்கும்?

அடிவயிற்றின் வலி இன்னும் கொஞ்சம் கூடியது.

இப்போதெல்லாம் பீரியட் சமயங்களில் ரொம்பவே வலிக்கிறது. டாக்டரிடம் போக வேண்டும் என்று நினைத்த

படியே ஒவ்வொரு மாதமும் கடந்து விடுகிறது. இதுபற்றி அப்பாவிடம் கேட்கக் கூட பயம்.

"இதெல்லாம் மாதாந்தர ரொட்டீன். இதற்கெல்லாமா டாக்டர்? பெரிய ராணின்னு நினைப்பு" என்பார்.

படிக்கிற காலங்களில் ஊர் சுற்றித் திரிந்துவிட்டு இப்போது தனக்கு வேலை கிடைக்காமல் சகோதரி சம்பாதிக்கிறாளே என்கிற காழ்ப்புணர்வில் 'பொட்டச்சி களுக்கு எப்படியாவது வேலை கிடைச்சிடுது' என்று கூசாமல் குறை கூறித் திரியும் அண்ணன்.

சே!

பேருந்து நிறுத்தத்தில் ஓரிரண்டு பேர் மட்டும் இருந்தார்கள். பெண்கள் யாரும் இல்லை.

தனிமையில் இருப்பது போல் உணர்ந்தேன். இன்ன தென்று சொல்ல முடியாதபடி ஏதேதோ கலவை உணர்வுகள். என்ன முயன்று எண்ணங்களை மாற்றினாலும் சுற்றிச் சுற்றி எனக்கு நியாயம் வழங்கப் படுவதில்லை என்பது போலவே முடிந்து சுய இரக்கம் பீறிட்டபடியே இருந்தது.

பஸ் வந்து நிற்க ஓரடி எடுத்து வைத்தேன்.

எங்கிருந்து எப்போது எப்படி முன்னேறி வந்தான் என்றே தெரியாமல், ஒருவன் பின்பக்கமாக என்மீது படராத குறையாக ஓரிரு இடங்களில் கைவைத்து அழுத்தினான்.

சுரீரென்று நெருப்பு அள்ளிக் கொட்டப்பட்டது போல் திரும்பினேன். லேசான சாராய வாடையுடனும் அசிங்கமான

இளிப்புடனும் நின்றிருந்தான். வேண்டுமென்றே பட்டிருக்கி றான் என்று தெரிந்தது.

சுந்தர்ராஜன் சார் உள்ளிட்ட அலுவலக சகாக்கள், அன்றாடம் பார்வையாலும் வார்த்தைகளாலும் மேயும் தெருப் பொறுக்கிகள், அவதூறு பேசித் திரியும் அண்ணன், கொஞ்சம் அப்பா என்று எல்லோரும் படபடவென்று நினைவில் வந்து மோத என வலது கை இடது கால் செருப்பை உருவி எடுத்தது.

அவனை பளார்! பளார்! என்று கன்னங்கள், முகம், கழுத்து, தோள், மூக்கு, வாய் என்று ஓரிடம் பாக்கியின்றி அடித்து நொறுக்கினேன். அவன் முகத்திலிருந்து இரத்தம் கொட்டத் தொடங்கியிருந்தது.

"விடும்மா! விடும்மா!" என்று பஸ்சில் இருந்தவர்கள் உள்பட பலரும் முன்வந்து என்னைக் கட்டுப்படுத்தி இட்டுச் செல்ல வேண்டியிருந்தது.

மறுநாள் பத்திரிகை ஒன்றில் இந்த விஷயம் பெட்டிச் செய்தியாக வந்தது. அடுத்த சில நாட்களாக அதே பத்திரிகையின் வாசகர் கடிதம் பக்கங்களில் நான் செய்தது சரி என்றும் தவறு என்றும் அணி பிரிந்து அடித்துக் கொள்ள ஆரம்பித்திருந்தார்கள்.

'என்ன இருந்தாலும் ஒரு குடிகாரன் தன்னிலை மறந்த நிலையில் செய்த சிறிய தவறுக்கு அந்தப் பெண் கொடுத்தது மிக அதிகபட்சத் தண்டனையே' என்று பெண்கள் சிலரே எழுதியிருந்த கடிதங்களைப் படிக்கையில் நெஞ்சுக்குள் வலித்தது.

15. உறவு என்றொரு சொல் இருந்தால்...

நான்கு மணிவாக்கில் ஆபீஸுக்கு போன் வந்தது.

தர்மபத்தினி ரஞ்சிதா படபடத்தாள்.

"உங்க மாமா வந்து வீட்டில் உட்கார்ந்திருக்கார்"

"மாமா?" என்று வியந்தேன். "வீடு எப்படி தெரிந்தது?"

"ஆமா, என்ன நிலாவிலயா வீடு புடிச்சுப் போயிருக்கீங்க தெரியாம இருக்கறதுக்கு? நாலு தெரு தள்ளி வந்திட்டா அட்ரஸ் கண்டுபிடிக்க முடியாமல் போயிடுமா?" என்றாள் வெடுக்கென்று.

கூட்டி விழுங்கினேன். "என்ன விஷயமாம்?"

"ம். நேட்டோ பிரச்சினையைத் தீர்த்து உலக சமாதானம் உண்டாக்க உங்ககிட்ட ஒப்பினியன் கேட்க வந்திருக்காரு. சீக்கிரம் வீடு வந்து சேருங்க. அவர் அறுவையை என்னால ரொம்ப நேரமெல்லாம் தாங்க முடியாது"

டக்கென்று தொடர்பைத் துண்டித்து விட்டாள்.

வீட்டில் போன் கிடையாது. எனக்கு விஷயத்தைச் சொல்ல வேண்டும் என்பதற்காகவே ரஞ்சிதா பால் வாங்கி வருகிறேன் என்று மாமாவிடம் சொல்லிவிட்டு வெளியே வந்து டெலிபோன் பூத்திலிருந்து பேசியிருப்பாள்.

அவளைப் பொறுத்தவரையில் இப்போது பந்தினை என் பக்கத்துக்கு அனுப்பி விட்டாள். இனி என்னைக்

கண்காணிக்கும் நிலைக்கு உயர்ந்து கொள்வாள். நான் என்ன சொல்கிறேன் என்பதில் இருக்கும் ஆர்வத்தை விட என்ன செய்தாலும் கமென்ட் அடிக்க முடிகிற சுதந்திரத்தை பரிபூரணமாக சுவீகரித்துக் கொள்வதில் ராணி அவள்.

"வாங்க மாமா" என்றபடி நான் உள்ளே நுழைந்தபோது மாமா காபியை முடித்திருந்தார். போன முறை பார்த்ததற்கு இப்போது இன்னும் ஒடுங்கி இருந்தார். அழுக்கு வேட்டி சட்டை சாயம் போன மேல் துண்டு முகத்தில் மூன்று நாள் தாடி எல்லாம் அவரை இன்னும் ஏழையாகக் காட்டின.

அவர் எழுந்து என்னைப் பார்த்து கைகூப்பியது என் மனதைப் பிசைந்தது.

"என்ன மாமா அந்நியன்ட்ட பண்ற மாதிரி இதெல்லாம்" என்று சங்கோஜத்தை வெளிப்படுத்தியபடி எதிரே அமர்ந்தேன்.

"இளைச்சிட்டீங்க" என்றேன்.

"விதி" என்றார் ஒற்றைச் சொல்லில்.

ஒரு நிமிடம் என்ன கேட்பது என்று தெரியாமல் உட்கார்ந்திருந்தேன். எல்லாரும் நல்லாயிருக்காங்களா என்று கேட்க வேண்டும், பதில் எனக்கே தெரியும். எல்லாரும் என்கிற சொல்லில் அடங்குகிற மாமாவின் பிள்ளைகள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தார்கள் என்பவர்களில் யாரும் நன்றாக இல்லை என்று தெரியும். கேட்பானேன் என்று சும்மா இருந்தேன்.

"உனக்கு நான் ஏற்கெனவே இருபதாயிரத்துக்கு மேல தரவேண்டியிருக்கு" என்று ஆரம்பித்தார் மாமா. "இப்போ நேரா திருச்சில இருந்து தான் வர்றேன். வக்கீலைப் பார்த்தேன். கொஞ்சம் நம்பிக்கையா சொல்றார். அடுத்த மாசம் தீர்ப்பாயிடும். எனக்கு சாதகமாத்தான் ஆகும்னு சொன்னார். ஒருவழியா அந்த சொத்து திரும்பி வந்தா வித்து எல்லா கடனையும் அடைச்சிட்டு பிள்ளைகளுக்கும் ஒரு வழி பண்ணிட்டு நிம்மதியா கண்மூடுவேன்."

அவருடைய உடம்பு குலுங்கத் தொடங்கியது. மேல் துண்டால் முகத்தைப் பொத்திக் கொண்டார்.

"அடடா... விடுங்க... எதுக்கு போட்டு இந்த வயசுல உடம்பை வருத்திக் கொண்டு..." என்றேன் பதறிப் போய்.

"இல்லப்பா. நான் உனக்கு எப்பவோ செஞ்ச உதவி களை எல்லாம் மறக்காம எனக்கு அப்பப்போ கைமாறு பண்றயே, உன் கடனை அடைக்கலன்னா என் கட்டை வேகுமா?" என்று தேம்பினார்.

அவஸ்தையாக நிமிர்ந்தேன். அவருக்குப் பின்புறமாக என் எதிரே நின்ற ரஞ்சிதா அவர் முதுகைப் பார்த்து உதடு சுழித்து வலித்துக் காட்டினாள்.

எனக்கு அவளுடைய எரிச்சலுக்குக் காரணம் புரிந்தது. மாமா பேச்சோடு பேச்சாய்ச் சொன்ன 'உனக்கு நான் எப்பவோ செஞ்ச உதவிகளை எல்லாம் மறக்காம' என்கிற வார்த்தைகள் எனக்கே உள்ளுர எரிச்சல் தந்திருக்கின்றன ஆரம்ப நாட்களில்.

'அடிக்கடி சொல்லிக் காட்டறீங்களே, எனக்கு அந்தக் காலத்துல ஏதோ செஞ்சுதா, அப்படி என்ன செஞ்சீங்க மாமா' என்று கேட்பதற்குத் தோன்றும். வார்த்தைகள் முண்டியடித்துக் கொண்டு நாக்கு நுனி வரை வரும். ஆனால் அவருடைய முகம் பார்த்து ஏற்படும் பரிதாபத்தில் கேட்காமல் விட்டு விடுவேன். அவர் நன்றாக இருந்த காலத்தில் கேட்டிருக்க வேண்டும். அப்போது விட்டாச்சு. இப்போது கேட்பது நன்றாக இருக்காது. மீண்டும் அவர் நன்றாக ஆகி நல்ல நிலைக்கு உயர்ந்த பிறகு நிச்சயம் கேட்க வேண்டும். அட்லீஸ்ட் இதைக் கேட்பதற்காகவாவது மாமா கஷ்டங்கள் நீங்கி நல்ல நிலைக்குத் திரும்ப வேண்டும்.

அவர் எனக்கு எதுவுமே செய்ததில்லை என்பதுதான் உண்மை. ஒரு சட்டைத் துணியோ செருப்போ கூட வாங்கித் தந்ததில்லை. என்னையும் கடைக்குக் கூட்டிப் போய்த் தன் பிள்ளைகளுக்கு உடைகளும் தின்பண்டங்களும் வாங்கிய காலங்களில் கூட உனக்கும் எடுத்துக்கோ என்று சொன்ன தில்லை அவர்.

நானும் ஆசைப்பட்டதில்லை என்பது நிஜமாதலால் எனக்கு ஏக்கங்கள் இருந்ததில்லை.

ஆனால் தனக்கு சம்பந்தமில்லாத விஷயங்களில் கூடப் பொய்யாக பங்குப் பெருமை வாங்கிக் கொள்வது அவருக்கு வாய்வந்த கலை. இது அவர் நல்ல வசதியுடன் பணப்பழக்கங்களுடன் இருந்த காலங்களிலேயே இருந்த பழக்கம்.

ரஞ்சிதா வீட்டில் ஆரம்பத்தில் ஒருமுறை என்னைப் படிக்க வைத்ததே அவர்தான் என்று சொல்லியிருக்கிறார். எங்கள் இருவருடைய முன்னிலையிலேயே மூன்றாம் மனிதர்களிடம் இந்தக் கல்யாணத்தை ஏற்பாடு செய்ததே தான்தான் என்று சொல்லியிருக்கிறார். இவருடைய வாய்ப் பந்தல் பேச்சுக்களால் எங்கள் வீட்டின் கலர் டி.வி. கூட இவர் வாங்கித் தந்ததுதான் என்று என் நண்பர்கள் இன்னும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

ரஞ்சிதாவுடன் பேசிக் கொண்டிருக்கையில் எப் போதாவது மாமா பற்றிப் பேச்சு வந்தால் இது போன்ற உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போவாள். 'எத்தனையோ விதமான ஆட்கள் கேள்விப்பட்டிருக்கிறேன். உங்க மாமா மாதிரி நானில்லை யாருமே கேள்விப் பட்டிருக்க மாட்டாங்க' என்பாள் எரிச்சல், சலிப்பு, கொஞ்சம் சிரிப்பு எல்லாம் கலந்து முத்தாய்ப்பாக.

வசதியாக இருந்த நாட்களில் அவர் அப்படி போலிப் பெருமைகளைச் சுயமாக்கிக் கொண்டிருந்தது உறுத்தாமல் இருந்ததோ? இப்போது அவர் ஏழ்மையின் கோரப் பிடிகளில் சிக்கிச் சீரழியும்போது அவருடைய வார்த்தை களை அங்கீகரிக்கச் சிரமமாக இருக்கிறதோ என்று எழுகிற கேள்விகள் மட்டும் அவ்வப்போது என் சிந்தனையைக் குழப்பும்.

எனக்குள் ஆழமாகப் பதிந்த மாமாவின் கம்பீரமும் அந்த தன்னம்பிக்கையான பேச்சுகளும் இளவயது ஞாபகங்கள்.

அவருடைய பிள்ளைகள் யாரும் சரியில்லை என்பதாலும் நான் புத்திசாலியாக துறுதுறுவென்று இருந்ததாலும் அவ்வப்போது என்னைக் கூடவே அழைத்துச் சென்று சக பெரியவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்த காலங்களில் என்னை தூசு மாதிரி உணர்ந்திருக்கின்றேன். தொழில் எங்கே எப்படி யாரால் கோட்டை விட்டார்; மகன்கள் அழிவதை எப்படி அறிய மறந்தார்; இப்படி ஒரு கஷ்ட நிலைக்கு எப்படி ஆளானார்; மீள்வதற்கான வழிகளை ஏன் முயற்சிக்கவில்லை என்பது போன்ற கேள்விகளுக்கு என்னிடம் பதில் கிடையாது.

நானும் அவர்களுக்கு எதுவும் சொல்ல முடியவில்லை. மாமாவின் பேச்சில் உண்மையின் சதவீதம் மிகவும் குறைவாக இருக்கும் என்பதோடு, எங்கள் பிரச்சினைக்கு நீ எப்படி தீர்வு சொல்ல முடியும் என்கிற ரீதியான அதீத திமிர்வாதம் அந்தக் குடும்பத்தின் சகலருக்கும் இரத்தத்தில் ஊறிய விஷயம். அதனால் அவர்களுடைய அழிவைப் பதற்றத்துடன் வேடிக்கை மட்டுமே பார்க்க முடிந்தது.

கண் எதிரே நின்ற இமயம் மெல்ல மெல்ல பொடிந்து நொறுங்கியதை இன்னும் நொறுங்கிக் கொண்டிருப்பதைக் கண்டும் காணாமலும் இருக்க வேண்டிய நிலை கொடியது.

மாமா தொடர்ந்து பேசினார்.

இரண்டாவது மருமகள் ஆஸ்பத்திரியில் இருப்பதாகச் சொன்னார். திடீரென்று கைகால்கள் இழுத்துக் கொண்டதாம். அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் தான் டாக்டரை அழைத்து வந்தார்களாம். அவர் தன்னுடைய காரிலேயே தன்

கிளினிக்குக்குக் கூட்டிப் போய் மூன்று நாட்கள் டிரீட் மெண்ட் கொடுத்து கைகால்களில் அசைவு ஏற்படுத்தி னாராம். அப்படி மட்டும் அவர் செய்திருக்காவிட்டால் நிரந்தரமாகவே அவளுக்கு கைகால் விளங்காமல் போயிருக்குமாம். இன்னும் கூட முழுதாக சரியாக வில்லை யாம். ஆனால் முக்கியமான சிகிச்சை முடிந்து விட்டதால் இப்போது வேறு ஒரு வாடகை குறைந்த கிளினிக்கில் அட்மிட் செய்து பார்த்துக் கொண்டிருக்கிறார்களாம்.

"டாக்டர் ஃபீஸ் ஐயாயிரம் குடுக்க வேண்டியதாப் போச்சு. பணத்துக்கு நான் எங்கே போவேன்? அவ புருஷன் இதோ வர்றேன்னு போனவன் பத்து நாளா எந்தத் திசையில் இருக்கான்னே தெரியலை. மூத்தவன் எதுக்கும் லாயக்கு கிடையாது. உனக்கே தெரியும். அவன் பெண்டாட்டி நாலு வீடுகளில் டியூஷன் சொல்லி கைக்கும் வாய்க்குமாக சம்பாதிக்கிறதுதான் பதினொரு பேர் இருக்கும் கூட்டுக் குடும்பத்தின் ஒரே வரும்படி..."

அவர் சொல்லச் சொல்ல என்னவோபோல் இருக்கும். நிறைய மிகைப்படுத்தித்தான் சொல்கிறார் என்று தெரிந் தாலும் கூட உள்ளுக்குள் ஏதோ பிசையும். டி.வி.யில் சோமாலியா என்பது போன்ற ஆப்பிரிக்க நாட்டு வறுமைக் காட்சிகளைக் காட்டும் போது ஏற்படுகின்ற உணர்வு மாமாவின் பேச்சுக்களைக் கேட்கும் போதும் ஏற்படும்.

சுற்றி வளைத்து யாரிடமோ கடன் வாங்கித்தான் அந்தப் பணத்தைத் தந்தேன். அதை அடைக்க வேண்டும். நீ கொடு என்று முடித்தார்.

நான் தயாராக இருந்த ஜாக்ரதை உணர்வுடன் "என்னிடம் அவ்வளவு பணமெல்லாம் இல்லை மாமா" என்று மட்டும் சொன்னேன். குரல் என்னவோ பலகீன மாகத்தான் இருந்தது. எனக்கும் செலவுகள் பெருகிவிட்டன. ஒரே பையன் என்று போர்டிங் ஸ்கூலில் சேர்த்ததற்கு என் சகலமும் அங்கே செலவழிகின்றன என்று சொல்லி அவருடைய வயிற்றெரிச்சலில் விழ மனமில்லை எனக்கு.

"உனக்கென்னப்பா கடவுள் புண்ணியத்திலயும் ரஞ்சிதா வின் கெட்டிக்காரத்தனத்திலயும் நிறைஞ்ச வசதியோட தான் இருக்கிற. இந்த சந்தர்ப்பத்துல உதவி செய். அங்கே எல்லாரும் நான் பணத்தோட தான் வருவேன்னு நம்பிட்டு இருப்பாங்க. நான் உன்னிடம் வர்றதாவே இல்லையே, திருச்சி வக்கீல்ட்ட வாங்கிட்டுப் போகலாம்னுதான் போனேன். விதி இங்கே விரட்டிருச்சு. நீயும் என் தொந்தரவு வேணாம்னு தான் வீடு மாற்றின விஷயத்தைக் கூட தெரியப்படுத்தாமல் இருந்திட்ட தேடிவரவேண்டியதாப் போச்சு..."

மென்று விழுங்கினேன். நெற்றியடிகள் எப்போதும் நிலை குலையச் செய்கின்றன.

"சாப்பிட வாங்க" என்று அழைத்தாள் ரஞ்சிதா.

மாமா திரும்பவும் மேல் துண்டால் முகம் மூடிக் கொண்டு உடல் குலுங்க ஆரம்பித்தார்.

"எனக்கு சாவும் வந்து தொலைக்க மாட்டேங்குது. தானாக வராத சாவை வலிய அணைச்சுக்கற தைரியமும்

இல்லாமல் போச்சு, என்னை மாதிரி வெறும் பயலுக்குக் கூட என்ன எதிர்பார்ப்பில் உயிரோட இருக்கணும்ங்கற ஆசை தொக்கி நிக்குதுன்னு புரியலை...”

மறுநாள் வரை இருந்து மூவாயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டுதான் போனார் மாமா.

‘பொய், பொய் வாயைத் திறந்தால் பொய்யைத் தவிர வேறு இல்லைங்கற ரீதியில் தான் அவர் பேசறார்னு தெரியுதில்ல? இப்போ கூடப் பாருங்க. திருச்சில இருந்து வர்றேன்னு சொல்றாரு. சட்டைல இருந்து கீழே விழுந்த டிக்கெட் சென்னைல இருந்து வர்றோம்னு சொல்லுது. என்ன கேஸோ என்ன வக்கீலோ.. யார் கண்டா, இது கூடப் பொய்யாக இருக்கலாம். இதுவரை எத்தனை தடவை ஆயாச்சு? பள்ளிக்கூடம் போவதையே நிறுத்திட்ட பிள்ளைகள் பேரைச் சொல்லி ஸ்கூல் பீஸுக்குன்னு வாங்கிட்டுப் போனார். நீங்க ஊர்ல இல்லாதப்போ உங்க பிரண்ட்கிட்ட வாங்கியதாச் சொல்லி அதை அடைக்கறதாச் சொல்லி வாங்கிட்டுப் போனார். வக்கீல் பீஸ் ஏதோ கட்டலைன்னா ஜெயிலுக்குப் போக வேண்டியிருக்கும்னு சொல்லி வாங்கிட்டுப் போய் குடும்பத்தோட டூர் போயிட்டு வந்திருக்காங்க. எவ்வளவு பட்டாலும் உங்களுக்கு ஏமாளித் தனம் போகாது. அவருடைய கண்ணீரைப் பார்த்திட்டா ஏமாந்திடறீங்க...’ என்கிற ரீதியில் கொஞ்ச நாள் ரஞ்சிதா பேசப் போவது நிஜம்.

தன்னுடைய பெருமைகளுக்காக மட்டுமே பொய் சொல்லிக் கொண்டிருந்தவர் மாமா. இப்போ இயலாமையின்

காரணமா பொய் சொல்ல நேர்ந்தது பாவமில்லையா? அவருடைய பொய்களை நம்பி இரக்கப்படவில்லை. இத்தனை வயசுக்கப்புறம் அவரைவிட கிட்டத்தட்ட நாற்பது வயது குறைந்த என்னிடம் வந்து பொய் சொல்ல வேண்டிய நிலைமைல இருக்காரே அதுக்காக இரக்கப்படாம எப்படி இருக்க முடியும்? போகட்டும். இந்த ஏமாறறங்களால் நாம் ஒன்றும் குறைந்து போய் விடமாட்டோம் ரஞ்சிதா என்று அவளுக்கு பக்குவமாகச் சொல்ல முயற்சிக்க வேண்டும்.

✲

16. நாய் வால்கள்

பொன்னுசாமி பிள்ளை பார் கடை கண்ணில் பட்ட மாத்திரத்தில் சுண்டி இழுத்தது.

பொறு பொறு என்று புன்னகையை அடக்கியபடி துள்ளும் மனதைத் தட்டிக் கொடுத்தேன். அங்கேதானே போகப் போகிறேன். என்ன அவசரம் என்று செல்லமாய்க் கடிந்து கொண்டேன்.

திடீரென்று ஏற்பட்ட வேகத்தில் மார்க்கெட்டினுள் நுழைந்து அவசரமாகக் காய்கறிகளையும் பலசரக்கு கடை யொன்றில் நூடுல்ஸ் பாக்கெட்களையும் வாங்கிக் கொண்டேன். ரைட், ஊர்மிளா வாங்கச் சொன்ன எல்லாம் வாங்கியாகிவிட்டது.

இனி பொன்னுசாமி பார்.

என் வேகம் எனக்கே சிரிப்பைத் தந்தது. இது என்ன பரபரப்பு குழந்தைத்தனமாக? இத்தனை வயதுக்கப்புறமும் மாறமாட்டேனென்கிறதே! சாயங்காலம் ஆகி விட்டாலே பொருட்காட்சியில் நுழைந்த குழந்தை ராட்டினம் ஏறுவ தற்குப் பெற்றோரிடம் அனுமதி கேட்கிற விதமாகக் குதியாட்டம் போடத் தொடங்கி விடுகிறதே! இது என்றுதான் அடங்கும்?

அடங்குகின்ற விஷயமா? அடக்க நினைத்தவர்களை யும் நினைத்தவளையுமே அடங்க வைத்த விஷயமாயிற்றே.

ஊர்மிளாவின் முகம் ஞாபகத்தில் வந்து போனது.

'பையன் ரொம்ப நல்ல பையன். இந்தக் காலத்தில் சிகரெட், தண்ணி என்று ஒரு கெட்ட பழக்கமும் கிடையாது' என்று சொல்லி என்னை அவளுக்கு மணமுடித்திருந் தார்கள்.

நிஜமாகவே அப்போது அந்த இரண்டு பழக்கங் களுமே இல்லாமல் தான் இருந்தேன். முதலில் சிகரெட் தான் ஆரம்பம்.

ஐயோ! இந்தப் பழக்கம் உண்டா? என்று அலறிய வளிடம் சிரித்தபடி சமாதானம் சொன்னேன். "ஊர்மிளா இது ஒரு கெட்ட பழக்கமே கிடையாது. உலகத்தில் தண்ணி அடிக்கிறவன் சீட்டாடுறவன் எல்லாம் ஒரு கட்டத்திலாவது அந்த பழக்கங்களின் பாதிப்பில் மனைவியைக் கைநீட்டி அடித்திருப்பான். சிகரெட் பிடிக்கிறவன் அதற்காக மனைவியை அடித்ததாக எங்காவது கேள்விப்பட்டதுண்டா? இதிலிருந்து என்ன தெரிகிறது? சிகரெட் ஒரு மனிதனைக் காட்டுமிராண்டி ஆக்குவதில்லை. அப்படி இருக்க அது எப்படி கெட்ட பழக்கமாகும்? சிலருக்கு பூண்டு வாசனை பிடிக்காது போல் சிலருக்கு சிகரெட் வாசனை பிடிக்காது. எது கெட்டது எது நல்லதுங்கறது அவரவர் பார்வையைப் பொறுத்தது. கவலைப்படாதே"

என் வார்த்தைகள் கொஞ்ச நாட்களில் அவளை அடக்கிவிட்டன. நாளா வட்டத்தில் இந்த பிராண்ட் வேண்டாமே முன்பு பிடிச்சிட்டிருந்தீங்களே அதுவே தேவலை என்று சொல்லுமளவு சமரசமாகியிருந்தாள்.

அப்புறம் ஆரம்பித்தது குடி.

இதற்கும் ஐயோ.

சமாதானப் படுத்தினேன். "ஊர்மி! நான் முன்பு சொன்னதை வைத்து பயப்படுகிறாய் என்று நினைக்கிறேன். தண்ணி அடிக்கிறவன் ஒருநாள் தர்மபத்தினியையும் அடிப்பான் என்பது பொதுவிதி அல்ல.

அதெல்லாம் வெறித்தனமாய் கண்மண் தெரியாமல் கையிருப்பை மறந்து கடனுக்குக் குடித்துவிட்டு காசுக்காக அலைபவன்தான் மனைவியை அடிப்பான். நமக்கு வரு மானத்துக்கு என்ன குறை? வரம்பு மீறி நானும் எங்கே குடிக்கப் போகிறேன்? ஏதோ அப்பப்போ கொஞ்சம். என் வியர்வை வாசனை மாதிரி இதுவும் கொஞ்ச நாளில் உனக்குப் பழகி விடுகிறதா இல்லையா பார்"

ஊர்மிளா இந்த முறை சமாதானமாவதாகத் தெரிய வில்லை. எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். "உன்னையோ நம் குழந்தைகளையோ பாதிக்கும் விஷயமாக இதனை ஆக்கமாட்டேன். உங்கள் தேவைகளை எந்த விதத்திலும் குறைக்க வைக்க மாட்டேன்" என்றெல்லாம் வாக்குறுதிகள்.

ம்ஹூம். அவள் எதற்கும் மசியவில்லை.

கடைசியில், "நான் தண்ணி விஷயத்தில் என்றைக்கு உன்னைக் கைநீட்டி அடிக்கிறேனோ அன்றோடு நான் குடிக்கிறதையே விட்டுடறேன். அல்லது நீ என்னை விட்டுப் போய்விடு" என்றொரு சபதம் செய்து கொடுத்தேன்.

அப்படி ஒரு சபதம் இருப்பதாலோ என்னவோ இது விஷயமாக ஊர்மிளா அடிக்கடி சண்டை போட்டாள்,

என்னைக் கிள்ளுக்கீரையாய் அற்பனாய் மதித்துப் பேசுவது போல் நடந்து கொண்டாள். நான் கோபப்பட்டால் தானே? எல்லாவற்றையும் ஒரு புன்னகையில் எதிர்கொள்ள ஆரம்பித்தேன்.

இருபக்கப் பெரியவர்களின் துணையோடு இவள் கூட்டிய பஞ்சாயத்துகள் வீணாயின. நாளாக ஆக என் குடியின் அளவு கூடிக் கொண்டே போனாலும் ஊர்மிளா வின் சண்டையின் உக்கிரம் கூடிக் கொண்டே போனாலும் என் சபதம் மட்டும் அடிமனதில் மறக்காமல் இருந்ததால் என் புன்னகையில் மட்டும் மாற்றமில்லை.

பாரினுள் நுழைந்தேன். ஓரத்து மேசைகளில் தான் நான் உட்காருவது வழக்கம். ஒரு மேசையில் உட்கார்ந்திருந்த வரை முதலில் கவனிக்காமல் எதிரே உட்கார்ந்த பிறகு பார்த்தால் செல்லையா சார்.

"அடடே வாங்க வாங்க" என்று வாய்திறந்த சிரிப்போடு வரவேற்றார் ஏதோ அவர் வீட்டுக்கு வந்த விருந்தாளியை வரவேற்பது போல்.

அசட்டு புன்னகை புரிந்தேன். அவர் பக்கத்தில் ஒரு பெரிய பை.

"கடைக்கு சாமான் வாங்க வந்தேன். அப்படியே கொஞ்சம்..." என்று வழிந்தார். அவரே திரும்பி, "தம்பி! இங்க வாப்பா! சாரைக் கொஞ்சம் கவனி" என்று பையனைக் கூப்பிட்டார்.

"உங்க பிராண்ட் எனக்கே தெரியும். க்வாட்டர் பிராந்தி, சிப்ஸ் சுண்டல், பிஸ்லரி சோடா சில்லுனு தண்ணி எல்லாம் சீக்கிரம் கொண்டு வா பார்ப்போம்" என்று அவரே ஆணை பிறப்பித்தார். என் பக்கமாய்த் திரும்பி "நீங்களும் கடைக்குத் தான் போயிட்டு வர்றீங்க போல" என்றார்.

"நம்மை மாதிரி குடிகாரர்களே இப்டித்தானே சாயங் காலத்துக்கு மேல் வீட்டை விட்டு வெளியே போக எப் போதடா சான்ஸ் கிடைக்கும்னு பார்த்திட்டிருக்கிறது தானே நம் வேலையே. ஒய்ஃப் எதாவது வாங்கிட்டு வரச் சொல்ல மாட்டாளா கிளம்பிட மாட்டோமான்னு எவ்வளவு பரபரப்பா ஆயிடுது சாயங்காலமானாலே" என்றேன்.

அவர் இதனை ஜோக்காக எடுத்துக் கொண்டு, சிரிக்க முயன்றாலும் அவருடைய சிரிப்பு ஜீவனின்றி இருந்ததாகப் பட்டது. குடிகாரன் என்று நான் சொன்னது அவரைத் தைத்திருக்குமோ? எவ்வளவுதான் குடித்தாலும் குடிகாரன் என்று தன்னைத்தானே பெருமையாகச் சொல்வது போல் வேஷம் கட்டிக் கொண்டாலும் எதிராள் அதே வார்த்தையை உபயோகிக்கும் போது மனம் சுண்டித்தான் போகிறது காரணமே இல்லாமல்.

நானாவது அதை உணர்ந்திருக்க வேண்டும். குறைந்த பட்சம் அவருடைய வயதுக்காவது மரியாதை கொடுத்தி ருக்க வேண்டும்.

பேச்சை சகஜமாக்க முயன்றேன். "நினைத்துப் பார்த்தா சிரிப்பு வர்றதில்லையா சார். நம்மை விட வயதிலும் பலத்திலும் உருவத்திலும் சிறிய வீக்கர் செக்ஸ் பெண்கள்

பெண்டாட்டி என்கிற பட்டம் மட்டுமே தருகிற பலத்தில் நம்மை மிரட்டுவதும் கண்டிப்பதும் நாம் பயப்படுவதும் விளையாட்டாக இல்லை? அவள் கிடக்கிறாள் என்று நாம் கிளம்பினால் என்ன செய்து விடமுடியும் இவர்களால்? இருந்தும் அவர்களாக கடைக்குப் போகச் சொல்லும் வரை தயங்குகிறோமே, இந்தத் தயக்கம்தான் நாம் அவர்களுக்குத் தரும் மதிப்பும் மரியாதையும் என்று ஏன் புரிந்து கொள்வ தில்லை அவர்கள்...?"

"அதானே..." என்று சிரிக்க ஆரம்பித்தார் அவரும்!

நேரம் போனதே தெரியவில்லை.

வீட்டுக்கு அருகில் வரும்போது தான் எல்லா வீடு களிலும் விளக்குகள் அணைந்திருப்பது புத்தியில் உரைத்தது. கரெண்ட் போயிடுச்சா? இல்லையே மங்கலான இரவு விளக்குகளின் ஒளி ஜன்னல்கள் வழியே வருதே. ஓ! ரொம்ப நேரமாயிடுச்சா?

அழைப்பு மணி அழுத்தினேன்.

கதவு திறந்த ஊர்மிளாவின் முகத்தில் வரவேற்புக் குறி இல்லை.

"சாரிம்மா! ரொம்ப நேரமாயிடுச்சா? செல்லையா சாரைப் பார்த்தேன் பேசிட்டு வர்றதுக்குள்ளே நேரமாயிடுச்சு போல. பிள்ளைகளை எங்கே காணோம்?" என்று கேட்ட படி கையிலிருந்த பையை நீட்டினேன்.

"உங்களுக்கு பிள்ளைகளா பிறந்திட்டு நூடுல்ஸ் சாப்பிட ஆசைப்படலாமா? அதான் அதுகளுக்கு

தண்டனை. பசி பசின்னு கத்திட்டிருந்திட்டு பிரட் ஜாம் சாப்பிட்டுட்டு தூங்கிட்டாங்க" என்றாள் விரக்தியாக.

நான் வருத்தப்பட முயன்றேன்.

"அடடா... அப்புறம் நீ?" என்று கேட்டேன்.

"இருந்த பிரட் அதுகளுக்குத் தான் சரியா இருந்தது. எப்படியும் நீங்க வந்தப்புறம் நம் இரண்டு பேருக்கும் ஏதாவது செய்துக்கலாம்னு தண்ணியைக் குடிச்சிட்டு உட்கார்ந்திருக்கேன்" என்றவள் பையைப் பார்த்துவிட்டு "ஐயோ! இது நம்ம பை இல்லை" என்றாள்.

ஒருகணம் திடுக்கிட்டு "ஹ்ஹ்ஹா" என்று சிரித்தேன்.

பாரை விட்டு வெளியே வரும் போது வேஷ்டியை இறுக்கிக் கட்டிக் கொள்வதற்காக செல்லையா சார் ஒரு நிமிஷம் பிடிங்க என்று அவருடைய பையை என்னிடம் தந்ததும் வேஷ்டியை சரிவர கட்டிய பிறகு ஒரு பையைத் திரும்ப வாங்கியதும் ஞாபகம் வந்தது.

"பை மாறிடுச்சு. இது செல்லையா சாருடையது" என்றேன்.

கொட்டிப் பார்த்தாள். காய்கறி ஏதும் இல்லை. வெறும் பலசரக்கு சாமான்கள்தான் இருந்தன. கூடவே கொஞ்சம் தலைவலி மாத்திரைகள்.

"அடடா சாப்பாடு? ஏதாவது ரோட்டோர இட்லிக் கடையில் புரோட்டாவோ ஏதோ வாங்கி வரவா?" என்று கேட்டேன் கரிசனத்துடன்.

"வேண்டாம்" என்றாள் ஊர்மிளா ஸ்பஸ்டமாக. "இப்போ நீங்க வெளியே போனா காலைல தான் வருவீங்க" என்றாள் காட்டமாக. "உங்களைக் கட்டிக்கிட்ட பாவத்துக்கு பச்சைத் தண்ணியைக் குடிச்சிட்டுப் படுக்கறேன்" என்றபடி பிரிட்ஜிலிருந்து ஐல் வாட்டர் எடுத்து முகவாய் கழுத்து எல்லாம் வழிய விட்டு அரைபாட்டில் குடித்தாள். அப்படியே போய்ப் படுக்கையில் விழுந்தாள்.

கொஞ்ச நேரம் எதுவும் தோன்றாமல் நின்றேன். பிறகு மெல்ல அவள் அருகில் போனேன். அவள் உடம்பு குலுங்கிக் கொண்டிருந்தது.

அழுகிறாளா?

"ஊர்மி!" என்றபடி அவளைத் திருப்ப முயன்றேன்.

"யோசித்துப் பாருங்க. என்ன சம்பாதிச்சும் நமக்கு ஏன் இந்த நிலை. இன்னிக்கு வீட்டில் எல்லோரும் பட்டினி. அந்த செல்லையா சார் வீட்டில் பாவம் எவ்வளவு தீவிர தலைவலியோ. இந்த மாத்திரைகளுக்காக எவ்வளவு நேரம் துடிச்சிட்டிருந்தாங்களோ, ஏன் இப்படி பண்றீங்க? தண்ணியடிக்கிற ஆளுங்களுக்கெல்லாம் என்ன இழவுக்கு கல்யாணம் குடும்பம் எல்லாம், தனியா இருந்து தொலஞ்சு அழிய வேண்டியதுதானே..."

சண்டை போட உடலில் பலமில்லாததால் அழத் தொடங்கினாள்.

நான் நெடுநேரம் யோசித்தபடி இருந்தேன். இவ்வளவு பிரச்சினைக்கும் என்ன காரணம் என்று என் மூளை அலசி

ஆராய்ந்து கொண்டிருந்தது இறுதியில் முடிவாக ஊர்மிளா விடம் சொன்னேன். "இந்த முறை மட்டும் மன்னிச்சுக்கோ ஊர்மி. இன்னொருமுறை இப்படி நடக்கவே நடக்காது, இனிமே எப்போ வெளியே போனாலும் மறக்காம வாட்ச் கட்டிட்டுப் போயிடறேன்..."

ஒரு பெரிய பிரச்சினைக்கு தீர்வு கண்ட திருப்தியுடன் நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்தேன்.



17. அப்பாவின் தொடுப்பு

"**வா**ப்பா" என்று என்னை வரவேற்று கதவு திறந்தாள். இவளை எனக்கு உறவு என்று கொள்வதா பகை என்று கொள்வதா தெரிந்தவள் என்று கொள்வதா புரியவில்லை. எந்த வகைப்பாட்டிலும் நான் இடம் தராத பெண். நான் முழுக்க முழுக்க வெறுப்பவள் என்ற வகையில் வேண்டுமானால் என்னுடன் சம்பந்தம் எனலாம்.

"உள்ளே வா" என்று விலகினாள். சுற்றிலும் ஒரு முறை பார்த்துக்கொண்டு உள்ளே போனேன். உடம்புக்குள் ஓடிய கூச்ச உணர்வில் அருவருப்பின் சாயலை உணர முடிந்தது என்னால். நாற்காலியில் உட்கார்ந்தேன். அவள் உள் அறையின் நிலைப்படியில் நின்று கொண்டாள்.

"என்னை ஏன் வரச் சொன்னாய்?" என்று கேட்க வந்து "சொன்னீங்க" என்று திருத்தினேன். என்ன இருந்தாலும் வயதுக்கு மரியாதை கொடுக்கலாமே. மெதுவாய் நிமிர்ந்து அவள் முகம் பார்த்தேன். அதில் ஒரு கீற்றுப் புன்னகை.

"விஷயம் கேள்விப்பட்டேம்ப்பா. ரொம்ப ஷாக்கா இருந்தது..." என்றாள் மென்மையான குரலில். "உங்கம்மா ஒரு மகா மனுஷி" என்றாள் பின் இணைப்பாக.

என் முகம் இறுகத் தொடங்கியது. மனம் கப்பென்று அடைத்தது. இடதுகை என்னையுமறியாமல் எழுந்து என் மொட்டைத் தலையைத் தடவியது. ஆனாலும் என் அம்மாவின் சாவுக்கு இவள் இரக்கப்படுவதை நான் விரும்பவில்லை.

உங்களுக்கு சந்தோஷமாத்தானே இருக்கும் என்று எழுந்த கேள்வி தொண்டைக்குள்ளேயே நின்று போனது. ஏன் கேட்கவேண்டும் இவளிடம் பேச்சு வளர்ப்பானேன். என் வெறுப்போ பேச்சுகளோ இவளிடம் எந்த பாதிப்பை யும் ஏற்படுத்தப் போவதில்லை. ஏற்படுத்தும் என்றிருந்தால் இப்படி இங்கே வந்து நான் உட்காருகின்ற கட்டம் என் வாழ்க்கையில் ஏன் வருகிறது? எப்போதோ இவள் ஊரை விட்டுப் போயிருப்பாளே.

எனக்கு என் பக்கமே பலமில்லை. எல்லாம் அப்பா வால் அவருடைய சபல புத்தியால் அவர் இங்கே வந்து வந்து விழுந்து கிடந்ததால் வந்த வினை.

"நிலா எப்படி இருக்கிறாள்?"

நிலா என் தங்கை.

"ம். இருக்கிறாள்" என்றேன்.

அப்பா எப்படி இருக்கிறார் என்றுதானே கேட்க ஆசை? அவர் எத்தனை நாள் கழித்து இங்கே வருவார் என்பதுதானே அறிய ஆசைப்படும் விஷயம். கேளேன் நேரடியாக. பெண்டாட்டி செத்த கருமாதி கூட முடியும் முன் அவர் இங்கே வந்தால் நன்றாகவா இருக்கும்? இதுகூடவா உனக்குப் புரியவில்லை. என்ன பெண் நீ...

அவள் உள்பக்கமாய் நடந்து போனாள்.

"நான் போகணும்" என்றேன் கொஞ்சம் குரல் உயர்த்தி.

"போகலாம். கொஞ்சம் இரு" என்றாள் உள்ளிருந்த படியே. நான் அவஸ்தையாக உணர்ந்தேன்.

காபி எடுத்துக் கொண்டு வந்தாள்.

"வேண்டாம்" என்று மறுக்க முயன்றேன். "குடி" என்றாள் அமானுஷ்யமான குரலில். பணிந்தேன்.

"என் மீதான உன் வெறுப்பை என்னால் புரிந்து கொள்ளமுடிகிறது. நான் இந்த ஊரை விட்டே போகிறேன். யாரிடமாவது சொல்லிக் கொண்டு போக வேண்டும் என்று தோன்றியது."

சட்டென்று நிமிர்ந்தேன். "அப்பா..." என்று என்னையு மறியாமல் வாய் முணுமுணுத்தது. அவள் கொஞ்ச நேரம் அமைதியாக இருந்தாள். என்ன சொல்லப் போகிறாள் ஒப்புதல் வாக்குமூலமா, மன்னிப்பா..

"உன் அப்பாவின் சொற்களிலிருந்தும், உன்னைப் பற்றி நான் கேள்விப்பட்ட வகையிலும் ஒரே ஒருமுறை நீ இங்கு வந்து சண்டை போட்டபோது உன்னை அளந்ததிலிருந்தும் நீ எந்தத் தாயும் அடைய விரும்பும் நல்ல மகன் என்று தெரிந்து கொண்டேன். அடுத்த ஜென்மத்தில் நீ என் மகனாகப் பிறக்க வேண்டும் என்று சொன்னால் டயலாக் அடிப்பதாகத் தோன்றும். உன் அப்பா என்னை வைத்திருப்ப தாலேயே ஒரு வகையில் நீ எனக்கு மகன் தானே என்று ஒட்டுப் பெருமையில் குளிர் காயவும் எனக்கு ஒப்புதல் இல்லை. இந்த பந்தம் உன் அப்பா நான் உன் அம்மா மூவரும் மட்டுமே சம்பந்தப்பட்டது. முக்கோணப் பந்தம் என்று கூடச் சொல்ல முடியாது. உன் அம்மாவுக்கும் எனக்கும் ஏதாவது தொடர்பு இருந்தால் அல்லவா முக் கோணம். உன் அப்பாவின் இரு கிளைகளாய் நாங்கள்

இருந்தோம். அதன் நியாயம், மூலம் பற்றி எல்லாம் இனி மேலான ஆராய்ச்சியில் என்ன புதிதாய் நடந்து விடப் போகிறது?" என்று பெருமூச்சு விட்டாள்.

அப்பாவுக்கு எப்போது இந்தத் தொடுப்பு ஏற்பட்டது என்று எனக்குத் தெரியாது. தெரியவந்த போது ப்ளஸ் டூவில் இருந்தேன். அம்மாவிடம் கேட்டபோது ஒரு கணம் அதிர்ந்து கண்களில் நீர்பெருக்கி மறுகணம் தெளிந்து "எனக்குத் தெரியும்" என்றாள். அவ்வளவுதான். இந்த விஷயத்தை வைத்து அப்பாவும் அம்மாவும் என் முன்னிலையிலோ அல்லது நிலா முன்னிலையிலோ ஒரு முறை கூட சண்டையிட்டதில்லை. ஆனால் அப்பாவின் நண்பர்கள் முதல் எங்கள் உறவினர்கள் வரை பலரும் பலமுறை அவருடன் சண்டையாக சமாதானமாக சாம பேத தான தண்ட முறைகளைப் பயன்படுத்தி இந்த விஷயத்தைப் பேச முற்பட்டிருக்கிறார்கள். "போங்கடா..." என்பதுதான் அப்பாவின் அலட்சியமான பதிலாக இருந்தது.

அதுவே என்னையும் நிலாவையும் அவரிடமிருந்து தூர வைத்தது. அம்மாவின் நிலை பற்றி வெளிப்படையாய்த் தெரியாது. அவள் பல சுமைகளை அமைதியாகவே தாங்கியவள். என்னையும் நிலாவையும் தன் இரு கண் களாய்க் காத்தவள். அவளுடைய வாயை விட கைகளும், அரவணைப்பும், கண்களின் பளபளப்பும், சில சமயம் பெரு மூச்சுகளும் எங்களிடம் அதிகம் பேசியுள்ளன. எங்களுக்கு பலவும் புரிந்ததில்லை. ஆனாலும் மழலைகளாய் உணர்ந்த படி தாயின் முகம் பார்த்தே வளர்ந்தோம். எங்களுக்கு ஆறுதல் தேவை என்று அந்த அளவு பாசம் காட்டினாளா

அல்லது அவளுடைய ஆறுதலுக்காக எங்களை இறுக்கிக் கொண்டாளா என்பது தெரியாது. ஆனால் அந்த இதம்தான் எங்களை இதுவரையில் இயக்கி வந்ததென்பது நிஜம்.

இப்போது சட்டென்று வெறுமை.

"பெண் சாகிற நிலை ஒரு வீட்டுக்கு மிக மிகச் சோதனையான காலகட்டம். வீட்டின் பெரிய ஆணும் சரி பிள்ளைகளும் சரி குடும்பத்தின், எதிர்கால பயத்தின் மிரட்சியின் உச்சத்தில் இருக்கும் நேரம் அது. திசைமாறிப் போவதற்கும், கெட்டுச் சீரழிவதற்கும் தீய சக்திகள் எல்லாக் கதவுகளையும் திறந்து வைத்து அழைக்கின்ற மோசமான சூழ்நிலை அது. அதில் மீண்டு வர வேண்டும். முதல் கோடு அழுத்தமாய் நேராய்ப் போட்டுவிட்டால் அப்புறம் பயணம் குழப்பமின்றி இருக்கும். நீயும் உன் தங்கையும் அப்பாவைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள். உங்கம்மா என்கிற பெரிய மனுஷி சூட்சும சக்தியாய் உங்களை வழி நடத்து வாள்."

எனக்கு அழுகை வந்தது. குலுங்கி அழ ஆரம்பித்தேன்.

"அழாதே. உன் கண்ணீரை இங்கே வீணாக்காதே. போ... போய் உன் அப்பா மேல் விழுந்து அழு. உன் அப்பாவின் மடியை, தோள்களை, புறங்கையை உன் கண்ணீரில் நனையவிடு. பாசப்பயிர் செழித்து வளர அந்த ஈரம் ரொம்ப அவசியம்" என்று சொல்லிக் கொண்டே இருந்தாள்.

நான் அழுது முடித்து நிமிர்ந்தேன்.

குடிக்க குளிர்ந்த நீர் கொடுத்தாள்.

இந்த நிமிஷத்தில் அப்பா எல்லோராலும் தனிமைப் பட்டது போல் உணரக்கூடிய சூழ்நிலை. சாவு வீட்டிலேயே என் காதுபடவே அப்பாவின் காரெக்டர் வெளியாட்களால் அலசப்பட்ட விதம் யாரையும் கொத்த மாட்டேன் என்று முனிவனுக்கு வாக்குக் கொடுத்த நல்லபாம்பின் நிலை அப்பாவுக்கும் ஏற்பட சகல சாத்தியக் கூறுகளும் தயாராக இருக்க, இவளும் ஊரை விட்டுப் போகிறேன் என்கிறாளே, அப்பா என்ன ஆவார்?

"உங்கப்பா அழுதாரா?"

"இல்லை. எங்கோ வெறித்தபடி உட்கார்ந்திருக்கிறார்"

"நீயும் உன் தங்கையும் அவருக்கு ஆறுதல் சொன்னீர் களா?"

"இல்லை. அவர் பக்கத்தில் போகவே பயமாய் இருக்கிறது"

"தப்பு செய்கிறீர்கள். பொண்டாட்டி இருக்கும் வரை தான் ஆம்பளைக்கு எல்லா பலமும். உலகத்தையே எதிர்க்கும் திறனும் அந்தப் பொண்டாட்டியையே எதிர்க்கும் திமிரும் எல்லாமும். அவள் போயிட்டா அவ்வளவுதான். பற்றுக் கொம்பற்ற கொடியின் நிலைதான். அப்படிப்பட்ட ஆம்பளையைப் பிள்ளைகள்தான் தாங்கிப் பிடிக்கணும். பிள்ளைகளுக்கும் துக்கம் இருக்கும். ஆனாலும் வழி யில்லை. இது ஒரு கூட்டு முயற்சி மாதிரி. உங்களுக்கு நான் எனக்கு நீங்கள்னு அணைச்சுக்க வேண்டியதுதான். நீ உங்கப்பாவை கடைசியா எப்போ தொட்டிருக்கிறாய்?"

நிமிர்ந்தேன். யோசிக்க வேண்டி வந்தது. வீட்டுப் புழக்கங்களில் ஒதுங்கி ஒதுங்கித் தானே இருந்திருக்கிறேன்.

"ஞாபகமில்லை" என்றேன்.

"நினைத்தேன். போய்த் தொடு. அப்பாவைத் தொட்டு பேசு. அவர் தோலில் உன் ஸ்பரிசம் பட்டு இருவருக்கும் சிலிர்க்கட்டும். தொடுதல் என்பது சாதாரண விஷயம் இல்லை. புலன்கள் சகலத்துக்கும் செய்தி சொல்லும் முறை. செல்கள் பாஷை பரிமாறிக் கொள்ளும் வழி. ஆயிரம் வார்த்தைகளில் சொல்ல முடியாத விஷயங்களை ஒரு தொடுதலில் உணர்த்த முடியும். சற்று நேரம் முன்பு நீ அழுதாயே அப்போது நான் உன்னைத் தொட்டு ஆறுதல் சொல்லாது தவிர்த்ததற்கும் உன் அப்பா மேல் விழுந்து அழு என்று சொன்னதற்கும் எதிர்காலத்தில் காரணம் புரிந்து கொள்வாய்..."

"உங்க அம்மா உங்களுடைய எத்தனையாவது வயதில் இறந்தார்கள்?" என்று கேட்டேன்.

கண்கள் பளபளக்க ஆச்சர்யமாய் நிமிர்ந்தாள். பதில் சொல்லவில்லை. என்னுள் இரக்கம் சுரந்தது.

"நீங்கள் கட்டாயம் போகத்தான் வேண்டுமா? இங்கேயே இருக்கலாமே. எங்கள் எல்லோருக்கும் நல்ல நண்பராய், ஆலோசகராய்..." மேற்கொண்டு பேசக் கூச்சமாய் இருந்தது, தயங்கினேன்.

"நீ சொன்ன வார்த்தைகளை விட சொல்ல வந்து விழுங்கிய வார்த்தைகள் எனக்கு சந்தோஷம் அளித்தன.

அதற்கு நன்றி. ஆனால் இனிமேலும் என்னால் இந்த ஊரில் இருக்க முடியாது. என்னுடைய இருப்புக்கும் உன் அம்மா தான் ஆதாரமாய் இருந்தாள் என்பதை நீ எவ்வளவு தூரம் புரிய முடியும் என்று தோன்றவில்லை. அதோடு, இனிமேல் உன் அப்பாவை நான் பார்க்க முடியும் என்று நினைக்கி றாயா? மனைவி நல்லபடியாக இருக்கும்போது, தான் செய்வது தவறு என்கிற குற்ற உணர்வு மறைக்கத்தான் தொடுப்பு வைத்துள்ள ஆண்கள் ரொம்ப அடாவடியாக, அதிகத் திமிராக, யாரையும் மதிக்காத அலட்சியம் உள்ளதாகத் தங்களைக் காட்டிக் கொள்வார்கள். சரியோ தப்போ உங்கப்பாவை அப்படியான அடாவடிக் கோலத்தில் ரசித்தவள் நான். எனக்கு, துக்கத்தால் மருகி குற்ற உணர்வால் குன்றிப் போன நிலையில் உள்ள உங்கப்பாவை எதிர்கொள்ளும் மனபலம் நிச்சயமாக இல்லை. அந்த சிங்கத்துடனான பழைய நாட்களை மட்டுமே மனதில் பூஜித்தபடி சந்தோஷமாய் என்னால் இருந்து கொள்ள முடியும்...”

நின்ற நிலையிலேயே என்ன என்று கேட்டுவிட்டுத் திரும்பி விட வேண்டும் என்ற முடிவோடு வந்த நான் நீண்ட நேரம் அங்கே இருந்தேன். தவிர்க்க முயன்றும் இயலாமல் அம்மாவுடன் இவளை ஒப்பீடு செய்து பார்த்தது மனம். அவளுடைய மௌனம் தந்த ஆறுதலை இவளு டைய பேச்சு தருகிறது. அவளுடைய அண்மை தந்த இதத்தை இவளுடைய பார்வை தருகிறது. அப்பாவுக்கு அம்மாவிடம் கிடைக்காத என்ன இவளிடம் கிடைத்திருக்க முடியும் என்கிற என்னுடைய ஆரம்ப காலக் கேள்வி

களுக்கு இப்போது விடை கிடைத்த மாதிரி இருந்தது. அம்மாவையும் இவளையும் வித்தியாசப்படுத்த முடியாத தோல்வியை அப்பா ஒப்புக்கொண்டு சரணடைந்திருப் பாரோ?

இன்றைய தேதிக்கு சில ரிஷிமூலங்கள் தேவை யற்றவை. இவளுடைய முடிவிலும் மாற்றம் இருக்கப் போவதாய்த் தோன்றவில்லை.

வெளியில் வரும்போது கோயிலிலிருந்து திரும்பும் உணர்வோடு வந்தேன். அம்மாவின் மரணம் ஏற்படுத்தி இருந்த துக்கத்தை மீறி இருந்த ஒருவித பயம் இப்போது அகன்றிருந்தது. துக்கத்தை முழுக்க அனுபவித்துக் கொள்ளும் பக்குவம் வந்த மாதிரி இருந்தது. அப்பாவுடனும் நிலாவுடனும் பகிர்ந்து கொள்ளத் தீர்மானித்தேன்.

புதிதாக ஏற்பட்டிருந்தது ஒரு கனம். அதைத்தான் என்ன செய்வதென்று தெரியவில்லை.

✲

18. ஒரு மரத்துப் பறவைகள்

குளித்துவிட்டு வந்த கையோடு மணி எட்டு இருபது என்று பார்த்த மறுகணமே "நான் ஸ்கூலுக்குப் போக மாட்டேன்" என்று உறுதிபடக் கூறிவிட்டான் மகன் விக்னேஷ்.

"நேரம் இருக்குடா. பதறாதே. இந்தக் கடிகாரம் பத்து நிமிடம் ஃபாஸ்ட்" என்று ஏதேதோ சமாதானம் சொல்லிப் பார்த்தோம். அவன் கேட்பதாக இல்லை.

"என்ன நடக்கும்னு எனக்குத் தெரியும். கேட்டை பூட்டிடுவாங்க. எப்படியும் பேரண்ட்ஸைக் கூட்டிட்டு வந்தாத்தான் உள்ளே விடுவாங்க. நீங்க யாராவது கூட வந்தா போறேன். இல்லைன்னா நோ" என்றான் ஸ்பஸ்டமாக.

"வேணாம் வேணாம்னு சொல்லியும் பிடிவாதமா நீங்கதானே செகண்ட் ஷோ கூட்டிட்டுப் போனீங்க... இப்போ ஸ்கூலுக்கும் நீங்களே கூட்டிட்டுப் போங்க." என்ற மனைவியிடம், 'ஒரு நாள் நைட் படத்துக்குப் போனா மறுநாள் காலைல எட்டு மணி வரைக்கும் பொம்பளை தூங்கின வீடு விளங்குமா? உனக்குப் பொறுப்பு வேணாம்? ஏழு மணிக்கு எழுந்திருச்சு பையனைப் பள்ளிக்கூடத்துக்கு ரெடி பண்ணத் துப்பில்லை. வாய் மட்டும் நீளுது. ஒரு பையனை வளர்க்கவே இந்த அலட்டல். அந்தக் காலத்துல எங்கம்மா ஆறு பிள்ளைகளை ஒரு சத்தம் இல்லாம வளர்த்திருக்கா' என்று ஆரம்பித்து சண்டை போட சமயம்

இல்லை. இப்படிப்பட்ட சண்டைகளின் முடிவுகளை நிறையப் பார்த்தாச்சு.

"வா" என்று பையனை இழுத்துக் கொண்டு போய் ஸ்கூட்டரை உதைத்தேன். குளிக்கக்கூட அவகாசம் இன்றி.

பள்ளிக்கூடம் இருக்கும் சந்தின் முனை திரும்பும் போதே தூரத்தில் கேட் மூடப்படுவது தெரிந்தது.

"இனி என்னடா ஆகும்?" என்றேன் மகனிடம்.

"ஒன்பது இருபதுவரை ஸ்டடி கிளாஸ் டாடி. அப்புறம் டென் மினிட்ஸ் பிரேக்கும் பிரேயரும். அதுக்கப்புறம் தான் இந்த விக்கெட் கேட் வழியா உள்ளே கூப்பிடுவாங்க. பிரின்ஸிபாலைப் பார்த்து அவங்க சீட்டு கொடுத்தாத்தான் க்ளாஸ் மிஸ் அலவ் பண்ணுவாங்க" என்றான் விக்னேஷ், தமிழும் ஆங்கிலமும் கலந்து.

மூடிய கேட்டின் உள்ளே பிரேயர் சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது. இன்னும் நான்கைந்து குழந்தைகளும் அவர்களின் பெற்றோரும் வந்து சேர்ந்தனர்.

வெளியே பிச்சைக்காரர்கள் மாதிரி எல்லோரும் நின்று கொண்டிருந்தோம்.

கைக்கடிகாரத்தையும் கேட்டையும் மாறி மாறி பார்த்து எரிச்சல்பட்டுக் கொண்டிருந்த ஒருவரைப் பார்த்து புன்னகைக்க முயன்றேன்.

"அநியாயம் பண்றாங்க" என்று முணுமுணுத்தேன்.

"இப்போ என்ன செய்வாங்க?" என்று கேட்டார் மற்றொருவர்.

நான், 'தெரியாது' என்று உதடு பிதுக்கினேன்.

ஒரு பெண்மணி, "அந்த பிரின்ஸிபால் மேடம் கூப்பிட்டுவிடுவா. அவள் ரூமில் வைத்து நம்மைக் கண்டிப்பா. ப்யூன் பக்கத்தில் நின்னு பார்த்துட்டிருப்பான். நாக்கைப் பிடுங்கிக்கலாம்னு தோணும். என்ன பண்ணித் தொலைக்கிறது. பிள்ளைங்க நல்லா படிச்சு பெரிய ஆளா வரணும்னு இப்படிப்பட்ட ஸ்கூல்ல சேர்த்துவிடறோம். அதுக்கு இப்படிப்பட்ட அவஸ்தையையும் சேர்த்து அனுப விக்க வேண்டியிருக்கு" என்றார் சலிப்புடன்.

உனக்கு உடம்பு சூடானது.

பிரின்ஸிபால் ஒரு பெண் என்பதை எப்படி மறந்து போனேன்? அதுவும் ப்யூன் முன்னிலையில் திட்டுவாளா?

விக்னேஷைப் பார்க்க அவன் 'அதான் திட்டு வாங்குவதற்கு நீ இருக்கியே' என்பது போல் அலட்சியமாக நின்றிருந்தான்.

"பிள்ளைகளைப் படிப்பதற்காகத்தான் சார் அனுப்ப றோம். என்ன, கொத்தடிமைகளாகவா விட்டிருக்கோம்? அவங்க எப்படி நம்மைத் திட்ட முடியும்?" என்றேன் லேசாகக் குரல் உயர்த்தி.

அமைதியாக இருந்து டென்ஷன் ஆவதைவிடக் கொஞ்சம் பேசினால் நன்றாக இருப்பதை உணர்ந்தவர்கள் ஒவ்வொருவராக வாய் திறந்தார்கள்.

"பிள்ளைங்களுக்கு ஒழுக்கம் சொல்லித் தர்றோம்ங்கற பேர்ல இவங்களுக்கு நாம எல்லா விதத்திலும் வளைந்து

கொடுக்கக் கொடுக்க பெரிய சர்வாதிகாரிகளா, மனிதாபி மானமே இல்லாதவங்களா மாறிட்டு வர்றாங்க சார்.”

“கரெக்ட். அதுக்கு உதாரணம் இப்போ நாம எல்லோரும் இங்கே நிக்கற காட்சி.”

“அதெல்லாம் விடுங்க சார். எனக்கு இது முதல் அனுபவம். பிரின்ஸிபால் கூப்பிட்டுவிட்டா என்ன பண்ணணும் சார்?” என்று கேட்டார் ஒருவர், படபடப்பை அடக்க முடியாமல்.

“ஏன் லேட்டுன்னு கேப்பா. ஏதாவது பொய் சொல்ல வேண்டியதுதான்.”

“எதுக்கு பொய் சொல்லணும் சார்? நான் உண்மையைச் சொல்லப் போறேன். நேத்து என் பையனை செகண்ட் ஷோ சினிமா கூட்டிட்டுப் போயிருந்தேன். தூங்க லேட்டாயிடுச்சு. காலைல அவனால சீக்கிரம் எழுந்திருக்க முடியாமல் போயிருச்சு.” என்றேன்.

எதிரே இருந்தவர் வாயில் கை வைத்தார்.

“இது ஒண்ணும் தினமும் நடக்கப் போகிற சமாசாரம் இல்லையே. என் பையன் படிப்பு முடியும் வரை செகண்ட் ஷோ படமே பார்க்காம வளரணும்னு எதிர் பார்க்கிறது தப்பு. மனசைத் தொட்டுச் சொல்லுங்க சார். நம்ம ஜெனரேஷன்ல இந்த பிரின்ஸிபால் பொம்பளை உட்பட யாருமே படிக்கிற காலத்துல பெற்றோர்கூட செகண்ட் ஷோ படமே போன தில்லையா?”

மற்றவர்கள் ஆடிப் போனது போல் என்னைப் பார்த்தார்கள்.

"பிள்ளைகள் கரெக்ட் டயத்துக்கு ஸ்கூலுக்கு வரணும் கறது ரூல். ஓ.கே. நல்ல விஷயம்தான். பட், தவிர்க்க இயலாத சில காரணங்கள் வந்து, அந்த ரூலை ஃபாலோ பண்ண முடியாமல் போயிட்டா, அதுக்காக மன்னிப்பே கிடையாதா? ஒரு முறை அல்லது இரண்டு முறை பார்ப்பது... மூன்றாம் முறை கண்டிப்பது. அப்படியும் திருந்தலைன்னா தண்டிப்பதுங்கற ஒரு வரைமுறை இல்லை? இப்படி ஆன்னா ஊன்னா பெற்றோரைக் கூட்டிட்டுவான்னு விரட்டினா என்ன சார் அர்த்தம்?" என்றார் ஒருவர்.

"அப்படி வர்ற பெற்றோரையும் இப்படி கைதி மாதிரி வெளியே நிறுத்தி வச்சு தண்டனை தர்ற அதிகாரம் இவங்களுக்கு யார் சார் கொடுத்தது? இன்னிக்கு நான் நல்லா கேட்கப் போறேன்."

என்னை வியப்புடன் பார்த்தார்கள் மற்றவர்கள்.

என்னுள் வீரம் பொங்கியது.

"இங்கே படிக்கிற எல்லா ஸ்டூடண்ஸுக்கும் ஒரே மாதிரி யூனிஃபார்ம், ஒரே மாதிரி ரூல்ஸ். எந்த எக்ஸப்ஷனும் கிடையாதுன்னு இந்தப் பாடு படுத்தறாங்களே.... அப்போ எல்லா ஸ்டூடண்ட்ஸையும் ஏன் இவங்களால ஃபர்ஸ்ட் ரேங்க் எடுக்க வைக்க முடியலை? இங்கே படிச்சு வெளியே வர்ற எல்லாப் பையனும் புரொஃபஷனல் காலேஜ் போறாங்களா? இவங்க சொல்றபடியெல்லாம் ஆடறோம். இவங்க சொல்ற ட்யூஷன் வைக்கறோம். ஏதாவது தவறு

நடந்தா இவங்க தர்ற பனீஷ்மெண்ட்டையும் ஒத்துக்கறோம். இத்தனையும் மீறி நம்ம பையன் சரியா படிக்கலைன்னா இவங்களுக்கு என்ன தண்டனை சார்? இவங்க ஏதும் கியாரண்டி தர்றாங்களா? இவங்களுக்கு எதாவது கமிட் மெண்ட் இருக்கா? இவங்களையும் கன்ஸ்யூமர் கோர்ட் சட்டதிட்டங்களுக்குள்ள கொண்டு வரணும் சார்" என்றேன்.

எனக்குள் தீர்மானங்கள் கிளர்ந்தன. பேசப் பேச வேகம் எழுந்தது.

"விடுங்க சார். இவங்ககிட்டே ஏன் போய்ப் பேசிக் கிட்டு... சும்மா ஒரு தடவை எக்ஸ்க்யூஸ் கேட்டுக்கிட்டா எல்லா பிரச்சினையும் சால்வ் ஆயிடும். இதைப் போய் சண்டை போடறேன்னு காம்ப்ளிகேட் பண்ணி பையனோட எதிர்காலத்தை ஏன் பாழ் பண்ணணும்?" என்றார் ஒருவர், என்னை சமாதானப்படுத்தும் குரலில்.

"என்ன சார் எதிர்காலம்? இவங்க ஸ்கூல்ல படிக்காத பிள்ளைங்களெல்லாம் பிச்சை எடுத்திட்டா இருக்கு? இப்பல்லாம் கிராமத்து முனிசிபல் ஸ்கூல்கள்ல, கார்ப்ப ரேஷன் ஸ்கூல்கள்ல இருந்துதான் சார் ராங்க் ஹோல்டர்ஸ் எல்லாம் வர்றாங்க. இந்த மாதிரி ஸ்கூல்ல இருந்து வர்ற ஸ்டூடண்ட்ஸ் தன்னம்பிக்கையே இல்லாத அடிமைப் புத்தி யோடதான் வர்றாங்க. அதனாலதான் புத்தகப் புழுவா இருந்துட்டு அமெரிக்கா அங்கே இங்கேன்னு வெளி நாடுகள்ல போய் இரண்டாம்தரக் குடிமக்களா வாழறதுக்கும் சம்மதம்னு போயிடறாங்க. இங்கே ஒழுக்கம் சொல்லித் தர்றதில்லை. அடிமைப் புத்தியைத்தான் சொல்லித் தர்றாங்க.

ஸாரி, இப்படிப்பட்ட இடத்தில் என் பையன் ஒண்ணும் சீரழிய வேண்டாம். இவங்க டி.ஸி. தரட்டும். அவனை கார்ப்பரேஷன் ஸ்கூல்ல சேர்த்து பெரிய ஆளா ஆக்கிக் காட்டறேன்" என்றேன் சவால் விடும் குரலில்.

விக்னேஷ் கூட என்னை பயத்துடன் பார்த்தான்.

"வேண்டாம் டாடி. நீங்க பாட்டுக்கு எதையாவது பேசாதீங்க. அப்புறம் என்னைத்தான் பனிஷ் பண்ணு வாங்க."

"இன்னிக்கு நான் போடப் போற போடுல உன்னை மட்டுமில்லை, யாரையுமே அவங்க பனிஷ் பண்ண பயப்படணும். ஒண்ணு தெரியுமா சார். சட்டத்துலயே ஒரே தப்புக்கு இரண்டு தண்டனை கிடையாதுன்னு இருக்கு. இப்போ இந்த ஸ்டூடண்ட்ஸ் வர்றதுக்குக் கொஞ்சம் லேட்டாயிட்டதற்காக முதல் பீரியட் பாடத்தை மிஸ் பண்ணுறாங்க. நம்மையும் கூப்பிட்டு இப்படி காக்க வச்சு தண்டனை தர்றாங்க. இதுக்கப்புறம் இவங்க மிஸ் பண்ணின பாடத்தைத் திரும்பவும் நடத்தப் போறாங்களா? கிடையாதே. இந்த ரெட்டைத் தண்டனை எந்த வகையில் சார் நியாயம்?"

விக்கெட் கேட்டின் கதவு திறந்தது. ப்யூன் எட்டிப் பார்த்து ஒவ்வொருவராக உள்ளே அழைக்கத் தொடங்கினான். ஒவ்வொரு பெற்றோரும் பையனுடன் போய்விட்டு தனியே வெளிவந்தார்கள். முகம் சிவந்தபடியோ, தொங்க போட்டபடியோ, அசட்டுப் புன்னகையுடனோ அவசரமாக அங்கிருந்து கலைந்தார்கள்.

என்னுடைய முறை வரக் காத்திருந்தேன்.

"என்ன ஆச்சு?" என்று கேட்டாள் மனைவி.

"அந்த பிரின்ஸிபாலை உண்டு இல்லைன்னு பண்ணி யிருப்பேன். விக்னேஷ்தான் ரொம்பப் பயந்துட்டான். ஒண்ணும் பேசிடாதீங்க டாடின்னு கெஞ்சறான். அந்த பிரின்ஸிபால் ஒரு பொம்பளைன்னு நீ சொல்லவே இல்லை. பொம்பளைக் கூடப் போய் என்ன சண்டை போடறது? அதான் பேசாமல் வந்துட்டேன்"

"....."

"இந்தா! இனிமே அவன் ஸ்கூல்ல எதாவது ப்ராப்ளம்னா நீயே போய்ப் பேசிக்கோ. எனக்கு இந்தச் சில்லறை வேலைக்கெல்லாம் நேரமே கிடையாது" என்றேன் முடிவாக.

✲

19. சாவு என்ற சங்கடம்

ரத்தினம்மாள் தவித்தாள்.

தற்கொலை செய்தே தீருவேன் என்று பிடிவாதமாய் நிற்கும் அந்த இளம் பெண்ணைத் தடுக்க வழியறியாது கைபிசைந்தாள். தனக்கு நீச்சல் தெரியாமல் போனது எவ்வளவு துரதிர்ஷ்டவசமானது என்று கண்கலங்கினாள். இந்த நேரத்தில் தான். அங்கே வந்தது சரியா தவறா என்று கூட ஒருகணம் குழம்பினாள். வராமல் இருந்திருந்தால் இந்தத் தவிப்பு ஏற்பட்டிருக்காதே என்று எண்ணினாலும் வந்ததனால் தானே இவளை இப்போதைக்கு நிறுத்தி வைக்க முடிந்தது என்று சிறிய நிம்மதி. அதற்கும் பலனின்றி அவள் குதித்து விட்டால்... என்கிற நினைப்பு அடிவயிற்றைப் பிசைந்தது.

பத்து நிமிடம் முன்பு எவ்வளவு சாதாரணமாக நடந்து கொண்டிருந்தாள் தூரத்து வரப்பின் மீது.

நிறைய வருமானம் இருக்கிறது என்கிற தைரியத்தில் ஏழெட்டு குழந்தைகளைப் பெற்றுவிட்ட பிறகு, திடீரென்று தொழில் முடங்கிப் போய்க் கையிருப்பு கரைந்து கொண்டி ருப்பவன் ஏதோ நம்பிக்கையில் உறங்கிக் கொண்டிருக்கும் குழந்தைகளைப் பார்ப்பது போன்ற ஏக்கத்தோடு மேட்டூர் தண்ணீரை நம்பி பாதி வளர்ந்திருந்த பச்சைப் பயிர்களைப் பார்த்தபடி வரப்பு மேடுகளின் மீது வந்து கொண்டிருந்தாள்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை எவரும் இல்லையோ என்பது போல் ஓவென்றிருந்தது அந்த மத்தியான வயல் காடு. தயங்கியபடி வீசிய காற்றில் கூட பசிய ஈரம் மிகக் கொஞ்சமாகத்தான் இருந்தது. தூரத்தே தெரிந்த நாயக்கர் வீட்டுக் கிணற்றின் கரையோரம் யாரோ நின்று கொண்டு ஏதோ செய்து கொண்டிருப்பது நிழலோவியமாய்க் கவனம் கவர்ந்தது.

உற்றுக் கவனித்தாள்.

அது ஒரு பெண் மாதிரி இருந்தது. பெரியதொரு கல்லினைக் கிணற்றின் சுற்றுச் சுவர் மீது எடுத்து வைத்து கயிறு ஒன்றை அதைச் சுற்றிக் கட்டுவதும் மறுமுனையைத் தன் இடுப்பைச் சுற்றிக் கட்டுவதும் தெளிவாகத் தெரிந்தன.

இங்கிருந்து 'ஓ... யாராது?' என்று ஓங்கிக் குரல் கொடுத்தபடி வரப்புகளிடையே ஓடத் தொடங்கினாள், ரத்தினம்மாள் அந்தப் பெண்ணை நோக்கி இரண்டு கை களையும் உயரத் தூக்கி வேண்டாம் என்று காட்டியபடி.

சத்தம் கேட்டு நிமிர்ந்த அந்த இளம்பெண்ணின் முகத்தில் ரத்தினம்மாளைப் பார்த்ததும் கொஞ்சம் அதிர்ச்சி யும் சலிப்பும். சட்டென்று தலையில் அடித்துக் கொண்ட வளாக அவசரமாகக் கயிற்றினை இடுப்பிலிருந்து விடு வித்தாள்.

ஓடிவந்து மூச்சு வாங்கிய ரத்தினம்மாள், "ஏந்தாயி என்ன காரியம் பண்ண இருந்தே?" என்று பதற்றத்துடன் கேட்டாள்.

அந்தப் பெண் கொஞ்ச நேரம் ஒன்றும் பேசவில்லை. அந்தக் கல்லையே தழுவி நின்றபடி அடுத்து என்ன செய்யலாம் என்பது போல யோசிக்க ஆரம்பித்தாள்.

'சே! நிம்மதியாய்ச் சாகக் கூட முடியவில்லை!' என்று அவள் முணுமுணுப்பது ரத்தினம்மாள் காதுகளில் விழுந்தது. மெல்ல முன்னேறி அந்தப் பெண்ணின் தலையைக் கோதி விட்டாள்.

"நீ யாரு? இந்த ஊர்ல உன்னை நான் பார்த்த தில்லையே; எங்கிருந்து வர்ற? இந்த வயசுல உனக்கு அப்படி என்ன கஷ்டம் தாயி? என்னிட்ட சொல்லு. கொஞ்சம் பாரம் குறைஞ்சாப்புல இருக்கும்"

வெடுக்கென்று அவள் கைகளைத் தட்டி விட்டாள் அந்தப் பெண்.

"ம்ஹூம்.. என் கஷ்டங்கள் என்னோட போகட்டும். எவ்வளவு விளக்கமா நான் சொன்னாலும் உனக்கு அதனுடைய நேரடித்தாக்கம் ஏற்படப் போறதில்லை. எல்லாம் கேட்டுட்டு இதெல்லாம் ஒரு பிரச்சினையா? உன்னைவிட அதிகமா கஷ்டப்படறவங்க எத்தனை பேர் இருக்காங்க தெரியுமான்னு பட்டியல் போட்டு அட்வைஸ் பண்ணுவ. அதைக் கேட்டு நான் மனசு மாறி என் முடிவை மாத்திப்பேன்னு கனவு காணாதே"

"அப்போ எதுக்கு என்னைப் பார்த்ததும் நின்ன? அப்படியே குதிச்சிருக்க வேண்டியதுதானே?"

"நீ பின்னாடியே வந்து என்னைக் காப்பாத்தித் தொலைஞ்சா நான் இந்த ஊருக்கே காட்சிப் பொருளா ஆயிட்டிருப்பேனே. அதான் தயங்கினேன்."

"நான் எங்கே உன்னைக் காப்பாத்த? எனக்கு நீச்சல் தெரியாதே" என்று சொன்ன ரத்தினம்மாள் சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டாள். 'இதைச் சொல்லியிருக்க வேண்டாமே. இப்போது இவளுடைய தயக்கத்தை நானே விடுவித்த மாதிரி ஆகிவிட்டதே.'

ரத்தினம்மாள் கிணற்றை எட்டிப் பார்த்தாள். நல்ல ஆழத்தில் தண்ணீர் பரப்பு ஒருவித பயங்கரத் தோரணை யில் வா என்று அழைப்பது போல் அசைவற்று இருந்தது. ஏகப்பட்ட அடி ஆழத்துக்கு தண்ணீர் மட்டம் உண்டு என்பது ஊருக்குள் பிரசித்தம்.

அந்தப் பெண், ரத்தினம்மாளின் முகத்தில் தெரிந்த பீதியைப் பார்த்து ரசித்தவளாக "உனக்கு நீச்சல் தெரியாதா?" என்று கேட்டாள்.

ரத்தினம்மாள் உதடு பிதுக்கினாள்.

"உனக்கு?"

"நல்லாத் தெரியும் அதான் பிரச்சினையே. நீச்சல் தெரிஞ்சா தண்ணீல முங்கி சாவறது ரொம்பக் கஷ்டம் அதுக்காகத்தான் கல்லைக் கட்டிட்டு விழறது"

ரத்தினம்மாள் மீண்டும் ஒருமுறை கிணற்றுள் எட்டிப் பார்த்தாள் அவள் உடம்பு பயத்தில் குலுங்கி அடங்கியது.

"இவ்வளவு பயங்கரமான தண்ணீரிலேயே நீச்சல் அடிக்க முடியற உனக்கு வாழ்க்கைல எதிர்நீச்சல் போட முடியலையா?"

அவள் சிரித்தாள். "இப்படி ஓரமா உட்கார்ந்து தத்துவம் பேசிட்டிரு. தைரியம் இருந்தா நான் முங்கிச் சாவறதை வேடிக்கை பாரு" என்றபடி கல்லின் மீது கட்டியிருந்த கயிற்றினைச் சோதித்துக் கொண்டாள். மறுமுனையை இடுப்பைச் சுற்றிக் கட்டத் தொடங்கினாள்.

ரத்தினம்மாள் மன்றாடினாள். "புரிஞ்சுக்க முயற்சி பண்ணுடி பொண்ணே. வாழ்க்கைல அடிபட்டவ அனுபவப் பட்டவ சொல்றேன். உனக்கு உங்க வீடு உறவுதான் பிரச்சினைன்னா என்கூட வந்திடு. உன்னை மகளா ஏத்துக்க றேன். கூழோ கஞ்சியோ என் பங்கில் பகிர்ந்துக்கறேன். இப்படி அவசரப்படாத தாயி..."

பதற்றத்துடன் அங்குமிங்கும் பார்வையை ஓட்டினாள். 'ஐயோ! யாராவது கண்களில் படக்கூடாதா?'

"இதோபார்! நீ விரும்பிக் கேட்டு, தவமிருந்து இந்த வீட்டில் பிறக்க வேண்டும் என்று வரம் வாங்கி வந்ததல்ல இந்த உயிரும் உடம்பும் உனக்கு ஒரு பிறவி வாய்த்திருக்கு துன்னா அது தானாகவே முடிவதற்குள் இந்த மண்ணுக்கு, நீ பிறந்த ஊருக்கு, சமூகத்துக்கு உன் பெயர் நிக்கற மாதிரி ஏதாவது செய்யலைன்னா என்ன பயன்? நீ கேட்டோ கேட்காமலோ உன் இத்தனை வருட வளர்ச்சிக்கு இந்த மண்ணும் சமூகமும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ நிறைய உதவிகள் செஞ்சிருக்கும். அதற்கு ஈடா மறு

கைமாறு ஏதாவது செஞ்சியா நீ? அதெல்லாம் பாக்கி வச்சிட்டு ஏதோ பிரச்சினைன்னு இப்படி சாகப் போறது கோழைத்தனமில்லையா? இந்த அழகான உடம்பையும், வேகமான ஆற்றல் உள்ள இளமையையும் ஒரே ஒரு சின்ன முட்டாள்தனமான செயலால் ஒன்றுக்கும் உதவாம பண்றது உனக்கே சரின்ன படுதா...”

அவள் அலட்சியமாக சிரித்தாள்.

“நீ ஏதாவது சினிமாவுக்கு கதை வசனம் எழுதப் போகலாம். ஆனா நான் என் முடிவை மாத்திக்கிறதா இல்லை. எனி ஹௌ உன் பதற்றத்துக்கும் அன்பிற்கும் நன்றி. அடுத்த ஜென்மத்தில் மீட் பண்ணலாம் பை...” என்றபடி கிணற்றினுள் குதிக்கத் தயாரானவளை, “அடியே..” என்கிற ஆவேசமான ரத்தினம்மாளின் குரல் கொஞ்சம் நிறுத்தியது.

“உன் வயசுக்கே பிரச்சினைகள் இருக்குன்னா, என் வயசுக்கு நான் எவ்வளவு காயங்கள் பட்டிருப்பேன். நீயே சாகப் போறே. நான் எந்த நம்பிக்கைல இந்த சருகு உடம்போட உயிரை வச்சிட்டிருக்கணும்? உனக்கு முன்னால் நான் குதிக்கிறேன். உனக்கு நிஜமாவே உயிருங்கறது அற்பமான ஒன்றுதான்னு பட்டதுன்னா சாக விட்டுடு. நீயும் குதி. ஒண்ணாவே சொர்க்கம் போகலாம்” என்ற ரத்தினம் மாள் அவளுடைய பதிலுக்குக் காத்திராமல் பளிச்சென்று கிணற்றுக்குள் பாய்ந்தாள்.

அந்தப் பெண் திடுக்கிட்டாள். ஒருவிநாடி யோசித்தாள். இடுப்புக் கயிற்றினை அவசரமாக அவிழ்த்தாள். உள்ளே

பாய்ந்து தண்ணீர் குடித்துத் திணறிக் கொண்டிருந்த ரத்தினம்மாளின் மயிரைப் பற்றி இழுத்து வந்து மேலேற்றினாள். கட்டிக் கொண்டு குதிப்பதாக இருந்த கல்லினைக் கிணற்றுக்குள் தள்ளி விட்டாள். ரத்தினம்மாளைக் கட்டிக் கொண்டு அவள் கண்ணீருடன் தன் கண்ணீரைக் கலந்தாள்.

தூரத்தே கேட்ட பறவைகளின் ஒலி மத்தியான நிசப்தத்தின் ஊடே தட்டிக் கொடுத்து நம்பிக்கை வாழ்த்துப் பாடுவதாக இருந்தது. வானம் மேகங்களற்று நிர்மலமாகப் பளீரிட்டது.

✲

20. ஓடிப்போனவள்

காலையில் சைட்டுக்குப் போகும்போதே சிறுவயல் கிராமத்து அரசமரத்தடி மேடை, ஆட்களால் சூழப் பட்டிருப்பது தெரிந்தது.

"என்ன விசேஷம் மாதவா?" என்று கேட்டேன்.

"அந்த அஞ்சலை திரும்பி வந்திட்டா சார். அவளை என்ன செய்யறதுன்னு இன்னிக்கு பஞ்சாயத்து கூடி முடிவு செய்யப் போறாங்க. நேத்து உங்களை வீட்டில் விட்டுட்டு வந்தேனில்லையா? அப்போதே 'ஊர் சொல்லி' இது விஷயமா வீட்டு வீட்டுக்குப் போய் சொல்லிக் கொண்டிருந் தான்" என்றான் மாதவன்.

எனக்கு அஞ்சலை விவகாரத்தின் சாரம் தெரியும்.

"அந்தப் பொண்ணு ஓடிப்போய் மூணு மாசம் இருக்குமா?"

"நாலு மாசமாச்சு சார்"

"இப்போ அது மட்டும் தான் திரும்பி வந்திருக்கா அல்லது மணியக்காரர் மகனும் திரும்பி வந்தாச்சா?"

"அவன் ஏன் சார் வர்றான்? வந்தா கை காலை முறிச்சிட மாட்டாங்களா? அவமட்டும்தான் வந்திருக்கா"

"என்னவாம்?"

"வேறென்ன, கூட்டிட்டுப் போனவன் எல்லாம் முடிஞ்சு சலித்ததும் விரட்டி விட்டுட்டான் அவ்வளவுதான்"

"அடடா" என்றேன்.

"அவளுக்கு ஏன் சார் இரக்கப் படறீங்க? இது எதிர் பார்த்ததுதான். கட்டின புருஷனுக்கும் பிள்ளைகளுக்கும் துரோகம் பண்ணிட்டு ஓடுற ஓடுகாலிகளுக்கு இப்படித்தான் விடியும்னு தெரிஞ்சதுதானே சார்" என்றான் மாதவன், சாலையை வெறித்தபடி ஜீப் ஓட்டினவனாக.

அவனுடைய பேச்சில் தெறித்த எரிச்சல் கண்டு நான் மௌனமானேன். மேற்கொண்டு... அவள் பாவமில்லையா? புருஷனையும் பிள்ளைகளையும் விட கள்ளக் காதலன் மேலானவன் என்று படுகிறதென்றால், அவள் தரப்பிலும் ஏதாவது நியாயம் இருக்கலாம் அல்லவா? என்று பேசிப் பேச்சு வளர்க்கலாம். மனமில்லை. எனக்குமே முகம் தெரியாத அஞ்சலை மீது கோபம் இருந்தது.

அப்படி என்ன அலைச்சல் வேண்டியிருக்கிறது? மணியக்காரர் பையன் சபலக் கேஸாம். இவள் அழகாக இருப்பாளாம். அவன், இவளை விரட்டிக் கொண்டே இருந்தானாம். அவன் வலையில் விழுந்திருக்கிறாள். இத்தனைக்கும் அவன், இரண்டு வயது இளையவனாம். இவர்கள் பழக்கம் கொஞ்சம் எசகு பிசகாக இருக்கிறது என்று, ஒரு சிலர் கண்களில் பட்டபோதே அஞ்சலையின் கணவனிடம் சொல்லிக் கண்டிக்கச் செய்திருக்கிறார்கள். திடீரென்று ஒரு நாள் அவர்கள் இருவரையும் காணோம். ஓடிப் போய் விட்டார்கள்.

அன்றும் இதே மாதிரிதான் அரசமரத்தடியில் பஞ்சாயத்து கூடியது.

ஆளாளுக்கு குதித்தார்களாம். அஞ்சலையின் பெற்றோரைப் பிள்ளை வளர்க்கத் தெரியவில்லை என்று திட்டினார்களாம். மணியக்காரர் பையன் திரும்பி வந்தால் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று சத்தியம் வாங்கினார்களாம். ஊர் மானத்தையும் இரண்டு குழந்தைகளின் எதிர் காலத்தையும் பாழ்படுத்திய மகனைப் பெற்றதற்காக மணியக்காரர் பஞ்சாயத்துக்கு தண்டம் கட்டினாராம்.

இது நான்கு மாதங்களுக்கு முந்தைய கதை.

எனக்கு இதெல்லாம் மாதவன் சொல்லித் தெரியும்.

நான் இந்த சிறுவயல் கிராமத்தை அடுத்து இருக்கும் பொட்டைக் காட்டில் பிரமாண்டமாக எழுந்து கொண்டிருக்கும் சிமென்ட் ஃபாக்டரியின் கன்ஸ்ட்ரக்ஷன் இன்ஜினியர். எங்கள் நிறுவனம், இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்ஷன் தொழிலில் நம்பர் ஒன் கான்ட்ராக்ட் நிறுவனம்.

நல்ல சம்பளம், நிறைவான வசதிகள், திருப்தி தரும் வேலைச் சூழல் என்று எல்லா வகையிலும் சந்தோஷமாக இருப்பவன் நான். அப்பா அம்மாவுக்கு நான் இப்படி ஊர் ஊராக வேலை நிமித்தம் சுற்றுவதில் விருப்பம் கிடையாது. கல்யாணமானால் சென்னை ஆபீஸுக்கு மாறுதல் பெற்றுக் கொண்டு வந்து செட்டில் ஆகிவிட வேண்டும் என்பது எனக்கு அவர்கள் இட்டிருக்கும் அன்புக் கட்டளை. சென்னையின் ஜனநெருக்கம் கூடிப்போனது இப்படித்தான் என்று நினைக்கிறேன்.

பெருநகர சூழலிலேயே படிப்பு வளர்ச்சி என்று இருந்து விட்டதால் நகர்ப்புறம்... குறிப்பாக கிராமம் பற்றிய விஷயங்களில் எனக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. இந்த வேலைக்கு வரும் வரையில் கிராமம், நதி, வயல் வாய்க்கால் என்பதெல்லாம் எனக்கு புத்தகம் அல்லது சினிமா, சீரியல் சமாசாரங்கள். இன்னும் சொல்வதென்றால் வயலில் கிடந்தால் நெல்லுக்கும், புல்லுக்கும் வித்தியாசம் தெரியாத வன் நான்.

இந்த வேலை தந்த அனுபவங்கள் சுகமாய் இருந்தன. வெளிப்புறமான பகுதிகளில், குறிப்பாக தஞ்சை நாகை மாவட்டங்களில் சைட் விஷயமாகப் போகும் போதெல்லாம் வயல் வெளிகளின் ஊடே ஜீப் செல்லும் போது இதுவரை சுவாசித்திராத புதிய காற்றினை சுவாசிக்க வாய்ப்பு கிடைத்தது. முதன் முறையாக ஒரு கிராமத்தின் குளத்தில் பெண்கள் குளிப்பதையும், படித்துறையில் உடை மாற்ற சிரமப்படுவதையும், எதிர்ப்படித்துறையில் இருந்து ஆண்கள் கேலி செய்வதையும் பார்த்தபோது சிலிர்த்தது. குளித்த உடம்போடு குறுக்கே கட்டிய ஈர உடையோடு, குடத்தில் நீருடன் எதிரே வரும் பெண்களைக் காணும்போது, உடம்பில் கூச்சம் வந்து பார்வையைத் திருப்பிக் கொள்ள வைத்தது.

சில நேரங்களில் கட்டி உருண்டு சண்டைபோடும் ஆண்கள், குடித்த வெறியில் கதறக்கதற மனைவிகளை மிதிக்கும் கணவர்கள், மிகச் சிறிய வயதில் பீடி புகைக்கும் சிறுவர்கள். ஆண் பெண் பழக்கங்களில் விரசம் தவிர்த்த சில்மிஷங்கள் எல்லாம் புதுப்புது சந்தோஷம் தந்தன.

மருத்துவ வசதி, குடிநீர், வசதி, ரேஷன் கடை வசதி, பள்ளிக்கூட வசதி போன்ற அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் இருந்தும், அது பற்றி பிரக்ஞை கூட இல்லாமல் சந்தோஷமாக இருக்கும் இவர்களின் வாழ்க்கை முறை எனக்கு வியப்பை அளிக்கும்.

இப்போதிருக்கும் கன்ஸ்ட்ரக்ஷன் வேலைகள் முடியும் வரையில் நான் தங்கிக் கொள்ள, பக்கத்து பெரிய ஊரில் கெஸ்ட் அவுஸ், சைட்டுக்குப் போய் வர ஜீப் என்று கம்பெனி தந்துள்ளது. ஜீப் டிரைவர் மாதவன், சிறுவயல் கிராமத்துக்கு பக்கத்து கிராமத்துப் பையன், துடிப்பானவன். தினமும் காலையில் என்னை அழைக்க கெஸ்ட் அவுஸுக்கு வந்தால், சைட்டுக்குப் போவதோடு வேலை நிமித்தமான அலைச்சல் எவ்வளவு ஆனாலும் கூடவே இருந்து முகம் சுளிக்காமல் எல்லா உதவிகளும் செய்வான். பயண நேரங்களில் அலுப்பு தெரியாமல் கிராமத்துக் கதைகளை லொடலொடவென்று பேசியபடி வருவான்.

சில சமயங்களில், 'கிராமத்து ஜனங்களெல்லாம் பாவம். அவங்க உழைப்பை எல்லாம் பணக்காரங்க சுருட்டறாங்க. அது இதுங்கறதெல்லாம் சும்மா சார். இங்க எல்லோரும் அடிப்படைல சோம்பேறிங்க. இன்னிக்குத் தேதிக்கு, கஞ்சிக்கு வேண்டிய அளவு ஏதாவது கிடைச்சிடுச்சன்னா போதும்னு உட்கார்ந்து வெட்டிக் கதை பேச ஆரம்பிச்சிடு வாங்க. தனக்காக உழைக்காத இவங்களோட உடல் வலு வைப் பணக்காரங்க தங்களுக்கு உபயோகப்படுத்திக்க றாங்க. அதுல என்ன சார் தப்பு?' என்பது போன்ற

சிந்தனைக்குரிய எண்ணங்களையும் அவ்வப்போது வெளிப் படுத்துவான்.

இன்று... சைட்டில் அதிக நேரம் வேலை இல்லை. கோயம்புத்தூரில் இருந்து வரவேண்டிய சில முக்கிய சாமான்கள் வரவில்லை. நேற்றே வந்திருக்க வேண்டியவை அவை. விசாரிக்க டவுனுக்குப் போக வேண்டும். எலக் டிரிக்கல் கான்ட்ராக்டரும் அவருடைய நெருங்கிய உறவில் சாவு என்று வரவில்லை என்றார்கள்.

பகல் முழுவதும் வெறும் காகித வேலைகள்தான் பார்த்துக் கொண்டிருந்தேன். நடுவே ஒரு வேலையாக மாதவனை கெஸ்ட் அவுஸுக்குப் போய் வரச் செய்தேன். மாலை, கான்ட்ராக்டரை அழைத்து மறுநாள் காலைக்கான வேலைகளை விளக்கி விட்டுப் புறப்பட்டேன்.

வண்டி கிளம்பிய மறுநிமிடமே, "பஞ்சாயத்துல அஞ் சலைக்கு என்ன தீர்ப்பு சொல்லியிருப்பாங்கன்னு நினைக்கறீங்க சார்?" என்று கேட்டான் மாதவன்.

அவன், கெஸ்ட் அவுஸுக்கு மதியம் போய் வந்த போது தெரிந்து கொண்டிருக்கலாம்.

யோசித்துச் சொன்னேன் "ஊரை விட்டு ஒதுக்கி வச்சிருப்பாங்க, ஊர்ல யாரும் அவகூட தொடர்பே வைக்கக் கூடாது, நல்லது பொல்லாததில் சேர்த்துக்கக் கூடாது இந்த ரகத்தில்தானே?" என்றேன். எத்தனை தமிழ் சினிமா பார்த்திருக்கிறேன்.

"இல்லை" என்றான்.

"பிறகு?"

"அவள் புருஷன் கூடத்தான் சேர்ந்து பழையபடி வாழணும்; ஊர்ல யாரும் அவளிடம் பகைமை பாராட்டக் கூடாது. அவளும், நம்மில் ஒருத்தின்னு தீர்ப்பு சொல்லிட்டார் பஞ்சாயத்துத் தலைவர்"

ஆச்சர்யமாக இருந்தது. அமைதியாக இருந்தேன்.

"என்ன சார். நம்ப முடியலைல்ல?" என்றான் மாதவன்.

"பதில் சொல்லத் தெரியலை மாதவா" என்றேன்.

"காசு வாங்கியிருப்பாங்க சார். எல்லாம் கூட்டுக் களவாணிங்க நேத்து வந்தவள் நேரா அவங்க கால்ல போய் விழுந்திருப்பா. அவளைத் தள்ளி வைக்கணும்னாலும் மணியக்காரர் தண்டம் கட்ட வேண்டியிருக்கும். அவளுக் காக, வீடு வாசல் ஒதுக்கணும். எல்லாம் அவர் தலைலதான் விழும். அதனால பஞ்சாயத்து தலைவருக்குப் பணம் தந்து அட்ஜஸ்ட் பண்ணியிருப்பார். இன்னும்கூட ஏதாவது நடத்திருக்கலாம் சார். சொல்லக் கூசுது. அவள் அவ்வளவு நல்லா இருப்பா. கருமாந்திரம் சார். கிராமத்துப் பெரிசுகளைச் சும்மா நினைக்காதீங்க. பொல்லாத ஆளுங்க"

அவன் கோபத்தில் பொரிந்து தள்ளினான்.

பெண் ஒருத்தியின் நடத்தையில் பேச்சு வந்து விட்டால், எல்லா ஆண்களின் மனங்களிலும் வக்கிரம் பாய் விரிக்குமோ என்று பட்டது. அவளைப் பற்றிய பேச்சுகள் கண்டிப்பது மாதிரியான போர்வையில் தொடர்வதுகூட,

அந்த வக்கிரத்தைச் சொறிந்து விடுவது போலத்தானோ என்றும் தோன்றியது.

ஆழ்ந்து யோசித்தால் அந்தச் சொறியல் எனக்கும் உள்ளூர சுகமாக இருந்தது.

"அது சரி, அவளைத் திரும்பச் சேர்த்துக்கணும்னா, அவள் புருஷனும் அவன் வீட்டாரும் சம்மதிக்கணுமே."

"தீர்ப்பு சொன்னா கேட்டுத்தான் ஆகணும். மீறினா... ஊரை விட்டு குடும்பத்தோட வெளியேறணும். யாருக்கும் அந்தத் துணிச்சல் வர்றதில்லை" என்றவன் திடீரென்று வண்டியின் வேகத்தைக் குறைத்தான்.

"சார்! பஞ்சாயத்து தலைவர் கைகாட்டி... வண்டியை நிறுத்தச் சொல்றார்" என்றான் மெல்ல.

மண் சாலையில் சற்று தூரத்தில் அந்தப் பெரியவர் நின்றிருந்தார் கூடவே கொஞ்சம் ஆட்கள்.

"நிறுத்தி ஏத்திக்கோ" என்றேன்.

"இன்ஜினியர் சார்! நமஸ்காரம். கொஞ்சம்... டவுன் வரைக்கும் கொண்டு விட்டுட முடியுமா என்னை?"

"தாராளமா. ஏறிக்கோங்க சார்" என்றேன்.

ஜீப் கிளம்பி விரையத் தொடங்கியது.

"நம்ம மாட்டுக்கு உடம்பு சரியில்லை. வண்டி கட்ட முடியலை. மோட்டார் சைக்கிள் ரிப்பேர். நடந்து போயிடலாம்னு நினைச்சேன். பயலுகதான். உங்க ஜீப்பை

பார்த்திட்டு நிறுத்திட்டாங்க. ஒண்ணும் சிரமமில்லையே" என்றார்.

நல்ல பிசிறில்லாத கணீர்க் குரல்.

"சேச்சே" என்றேன்.

கொஞ்ச நேரம் அமைதி. வளைவு ஒன்றில், எதிரி லிருந்து அயர வைக்கும் அழகோடு ஒரு பெண், தண்ணீர் கொண்டு போனாள். என் கண்கள் விரிந்து சுருங்கின.

"இவள் யார் தெரியுமா சார்?" என்று கேட்டார் பஞ்சாயத்து தலைவர்.

"தெரியலை" என்றேன்.

"இவ பேர் அஞ்சலை. கொஞ்ச நாள் முன்னால, ஒரு பையனோட ஓடிப் போயிட்டா. இப்போ, அவன் கை விட்டுட்டான்னு வந்து நின்னு... கண் கலங்குறா. என்ன செய்யலாம்? நீங்களே சொல்லுங்க" என்றார் சிறிய புன்னகையுடன்.

"தெரியலை சார்" என்றேன்.

"இவ, ஏற்கெனவே கல்யாணம் ஆனவ. ரெண்டு புள்ளைங்களுக்கு அம்மா. இவளை ஒழிச்சுத் தலை முழுகிடலாம். என்னென்ன ஆகும் பாருங்க. இவ புருஷன் ஒரு விவரம் கெட்டவன். ரெண்டு புள்ளைங்களை வளர்க்க சிரமப்படுவான். இன்னொரு கல்யாணம் செய்து வைக்க ணும். வாற்வ... மூத்தகுடியா பிள்ளைகளை என்ன பாடு படுத்துவாள்ங்கறது ஒரு பக்கம் இருக்க, இவனையே

மதிப்பாளாங்கறது கேள்விக் குறியாச்சே. இவன் பிள்ளைங்க ரெண்டும்... அப்புறம் அநாதையா தெரு சுத்தும். ஒதுக்கி வச்ச பிறகு இவளும் வயித்துப் பாடுக்கு என்ன செய்வா? ஆளு எப்படி இருக்கா பார்த்தீங்கள்ல? இந்த அழகுக்குத் தான் மணியக்காரர் பையன் கொக்கி போட்டான். இவளுக்கு பாதுகாப்பு இல்லாம்ப் போயிடுமே. வேற ஊர்ல போய் இவளால் கௌரவமா பிழைப்பு நடத்த முடியுமா? சரி, தப்பு பண்ணிட்டா. அதுக்கு இவமட்டும்தான் காரணமா? புருஷன் சரியா இருந்தா ஏன் ஓடறா? மாமனார், மாமியார் நல்லா வச்சிருந்தாங்களா? இல்லையே மணியக்காரர் பையன் சபலம் காட்டினதாலதானே ஓடினா? அவனுக்கு என்ன தண்டனை? எல்லார் தப்புக்கும் சேர்த்து, ஒருத்திக்கு மட்டும் தண்டனை தர்றது சரியில்லைன்னு பட்டுது. இவளை, அவ புருஷன் கூடவே சேர்ந்து வாழணும்னு சொல்லியாச்சு" என்று நிறுத்தினார்.

நான் ஒன்றும் சொல்லவில்லை.

"அதுவே ஒரு தண்டனை மாதிரிதானே? ஆனா அதுல இவளுக்கு. இவ புருஷனுக்கு, இவபுள்ளைகளுக்கு எல்லோருக்குமே ஓர் எதிர்காலப் பாதுகாப்பு இருக்கு பாருங்க. என்ன நான் சொல்றது? நீங்க டவுன்காரப் புள்ளை... உங்களுக்கு இதெல்லாம் ஜீரணிக்கக் கஷ்டமாத்தான் இருக்கும்..." என்று சிரித்தார் அவர்.

கிராமத்துப் பெரிசுகள் எளிமையானவர்கள். ஆனால் வாழ்வியலின் அடிப்படை விஷயங்களில் தெளிவான சிந்தனைகளுக்குச் சொந்தக்காரர்கள் என்பது புரிந்தது.

21. கடைசி பஸ்

வீடு இருந்த இருப்பைப் பார்த்தால் இப்போதைக்கு சகஜநிலை திரும்பும் என்று தோன்றவில்லை. பாலாஜியின் அம்மா, சித்தி, அத்தை உள்பட சில பெண்கள் மத்தியில் என்னவள் உட்கார்ந்து ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்க, நான் என் கையைப் பிடித்தபடி அவ்வப்போது கேவிக் கொண்டும் மற்ற கணங்களில் வெறித்த பார்வையுடனும் இருந்த பாலாஜியின் அப்பாவிடமிருந்து விடுபடுவது எப்படி என்று யோசித்துக் கொண்டிருந்தேன். சுவர்க் கடிகாரத்தின் மீதிருந்த என் கவனம் வேணியை அழைத்து வரப் போவதற்கு இன்னும் பத்து நிமிடங்கள் உள்ளன என்று காட்டினாலும் இந்த இடத்தின் மூச்சுத் திணறலில் இருந்து விடுபட்டு நெஞ்சு நிறைய புது சுவாசக் காற்றை நிரப்பினால் தான் என்னால் மேற்கொண்டு செயல்பட முடியும் என்கிற அவஸ்தை காரணமாக அங்கிருந்து நகர யத்தனித்தேன்.

"வேணி வர்ற நேரமாச்சு, நான் போய்க் கூட்டிட்டு வந்திடறேன்" என்று மெல்லச் சொல்லிவிட்டு செருப்புகளை அணிந்து கொண்டு படியிறங்கும் போது கொஞ்சம் களைப்பாக உணர்ந்தேன். காலையில் இருந்து எவ்வளவு அலைச்சல்! டென்ஷன்!

பதினைந்து நிமிட நடையில் இருக்கிறது பேருந்து நிறுத்தம்.

இதோ இன்னும் மூன்றே வருடங்களில் பாருங்கள் இங்கே ஸ்டார் ஓட்டல் வரப்போகிறது. பஸ் ஸ்டாண்ட் வரப்

போகிறது, சென்ட்ரல் மார்க்கெட் வரப் போகிறது, ஏர் போர்ட் வரப் போகிறது என்பது போன்ற ரியல் எஸ்டேட் காரனின் வாய் ஜாலங்களில் மயங்கி பதினைந்து வருடங் களுக்கு முன் இடம் வாங்கி வீடு கட்டியானது. பகுதி இன்னும் டெவலப் ஆனபாடில்லை. இன்னும் சில வருடங்க ளிலாவது ஆகும் அறிகுறியும் இல்லை. என்னைப் போன்ற ஏமாந்த சோணகிரிகள் ஒன்று சேர்ந்து போராடி நடையாய் நடந்து மனுமேல் மனு கொடுத்து இப்போதுதான் இந்தப் பேருந்து நிறுத்தத்துக்கான வழித் தடத்துக்கே ஏற்பாடு ஆனது. மூன்று பேருந்துகள் மட்டும் தொட்டுச் செல்லும் நிறுத்தம் அது.

தெரு விளக்குகள் நம்பகமானவை அல்ல என்பதோடு பேருந்து ஏறி மணிக்கணக்காய் பிரயாணம் செய்து சொற்ப சம்பளத்துக்கு ஒரு டெம்பரரி வேலைக்குப் போய் வருகிற ஒரே மகள் வேணியை, நிறுத்தம் வரை நடந்து போய் அழைத்துவர இயலாத அளவு நான் எதையும் வெட்டி முறிப்பதில்லை என்பதால் இது தினசரி முன் இரவுக் கடமைபோல் ஒட்டிக் கொண்டு விட்டது.

நான் நிறுத்தத்தில் போய் நின்று அதிக பட்சமாக ஐந்து அல்லது பத்து நிமிடங்களில் முதல் பேருந்து வரும். அடுத்த பதினைந்து நிமிட இடைவெளிகளில் பாக்கி இரண்டு பேருந்துகளும் வந்துவிட்டுப் போய்விடும். அநேகமாக முதல் பேருந்திலேயே வந்து விடுவாள் வேணி.

களைப்புடன் இறங்கும் மகளைப் பார்க்க வயிற்றினுள் ஏனோ குறுகுறுக்கும். அதோடு அவள் வீசும் புன்னகை

என்மீதே சுய இரக்கத்தை வரவழைக்கும். சாரிப்பா லேட்டாயிடுச்சு என்றோ, தினசரி நீங்க அலையணுமாப்பா என்றோ, நான் என்ன குழந்தையா, வந்து விடமாட்டேனா என்றோ அவள் கூறுவது எனக்குச் சந்தோஷமாக இருக்கும்.

பேசியபடியே நடந்து வீடு வருவோம். அவள் முகம் அலம்பித் தெளிவாகி வந்த பிறகு இரவு உணவு என்பது தினசரி ரொட்டீன்.

இந்தக் காலத்தில் பிள்ளையின் நர்சரிப் படிப்புக்காக கட்டிய வீட்டைக்கூட விற்று விட்டோ, வாடகைக்கு விட்டு விட்டோ பள்ளிக்கு அருகில் குடிபோகிறார்கள் பெற் றோர்கள். அந்த வகையில் நான் நல்ல தகப்பன் தானா என்று கூட சில சமயம் தோன்றும்.

என்ன செய்வது? வேணி வேலை பார்க்கும் இடத்துக்கே வீட்டை மாற்றி விட்டுப் போகலாம்தான். ஆனால் வேலை நிரந்தரமில்லையே. கடந்த மூன்று வருடங்களில் மட்டும் நான்கு இடங்களுக்கு வேலை மாறிவிட்டாள். ஒவ்வோர் இடமும் வெவ்வேறு திசையில். ஓர் இடத்தில் வேலைக்கான கெடு முடிந்து போய் வாருங்கள் என்று சொல்லும் முன்னரே அடுத்த இடத்தில் எப்படியோ வேலை தேடிக் கொண்டு விடுகிறாள். எனக்கு மகளாய் இருந்தாலும் இந்த விஷயத்தில் சாமர்த்திய சாலிதான் வேணி.

வீட்டை விற்றுவிட்டு அங்கங்கே வாடகை வீடு களுக்குப் போவதிலும் சிக்கல் இருக்கிறது. இந்த எக்ஸ்டன் ஷன் ஏரியா வீட்டுக்கு நல்ல விலையும் வருவதில்லை.

வேணி வேலை பார்க்கும் இடத்தை ஒட்டியே இப்படங்களில் வாடகை அதிகம் என்பதைவிட அட்வான்ஸ் கொடுத்து மாளாது என்பதும் இந்த ஏழைக் கிழவனின் தற்போதைய நிலை. எல்லாவற்றையும் விட அவளுக்குக் கல்யாணம் என்கிற கட்டம் வரும்போது உதவ இந்த வீட்டைத்தான் மலைபோல் நம்பியிருக்கிறேன்.

தனியான நடையின்போது சிந்தனை தானே துணை. தொடர்ந்து எழுந்தன வேணியின் கல்யாணம் குறித்த எண்ணங்கள்.

அதற்கு நான் எந்த அளவு தயார் நிலையில் இருக்கிறேன் என்பது இன்றைய தேதிக்குக் கேள்விக்குறி தான். கட்டப்பட்டுள்ள வீட்டின்மேல் இன்னும் கடன் இருக்கிறது. அந்தக் கடன்களில் தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு வெளியூர்களுக்குப் போய்விட்ட இரண்டு மகன்களும் இன்லன்ட் லட்டர் உறவுக்காரர்களாகி விட்டார்கள். என் பென்ஷன் மற்றும் வேணியின் சம்பாத்யத்தில் வீட்டு நிர்வாகம் பிரச்சினையின்றிச் செல்கிறது. எப்போதாவது ஏற்படுகிற திடீர் மருத்துவச் செலவினங்களே விழி பிதுக்கி விடுகிற நிதர்சனத்தில் வேணியின் கல்யாணம் பற்றி எந்தப் பிடிமானத்தில் நான் சிந்திக்க இயலும்? எந்த நம்பிக்கையில் நாள் கடத்திக் கொண்டிருக்கிறேன் என்கிற நேர்க்கேள்விக்கு என்னிடம் பதில் இல்லை என்பதுதான் நிஜம்.

வேணி நல்லவள். குடும்ப நிலை தெரிந்தவள் பொறுப்பு உணர்ந்தவள். குடும்ப பொருளாதாரப் போர்க்

களத்தில் புறமுதுகு காட்டி ஓடிய அண்ணன்கள் குறித்து கவலைப்பட்டு மலைக்காமல் ஜான்ஸி ராணியாகப் போராட்டத்தில் குதித்தவள். இன்றளவும் எனக்கோ அவள் அம்மாவுக்கோ வாழ்க்கையில் விரக்தியற்ற பிடிப்பு கொஞ்ச மாவது இருக்கிறதென்றால் அது வேணி தந்ததுதான்.

ஆண்பிள்ளைகளே சரியில்லாத இந்த நாட்களில் வேணி எங்களுக்கு மகளாய் வாய்த்தது எந்த ஜன்மத்திலோ நாங்கள் செய்த புண்ணியத்தின் எச்சம் என்றுதான் சொல்ல வேண்டும்.

பாருங்களேன் பக்கத்து வீட்டு பாலாஜி ஏதோ ஒரு பெண்ணை இழுத்துக் கொண்டு ஓடி விட்டான்.

இன்று நாள் முழுதும் அதே களேபரம் தான்.

காலை பத்தரை மணி வாக்கில் ஒவென்று கதறிக் கொண்டு 'ஐயோ எங்க மகன் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டுட்டுப் போயிட்டானே' என்கிற அலறலோடு ஓடி வந்தாள் பாலாஜியின் அம்மா.

என்னவள் அவளைத் தாங்கிப் பிடித்து ஆறுதல் படுத்தி விஷயம் அறிந்து, நான் சட்டை மாட்டிக் கொண்டு போய் பப்ளிக் பூத்திலிருந்து பாலாஜியின் அப்பாவுக்கு விஷயம் தெரிவித்து, அவரை வரவழைத்து பக்கத்து உறவுக்காரர்களுக்குச் சொல்லிவிட்டு, அவர்கள் வந்து ஆளாளுக்கு அறிவுரைகள், கண்டனங்கள், இப்படிச் செய்து விட்டானே என்கிற ஆதங்கங்கள் என்று எங்கள் வீடு நிரம்பியிருக்கிறது.

'என்னைத் தேட வேண்டாம். எனக்குப் பிடித்த பெண்ணுடன் வாழ்க்கை அமைத்துக் கொள்ளக் கிளம்பு கிறேன். பெண் உங்களுக்கும் தெரிந்தவள்தான். ஆனால் நீங்கள் சம்மதிக்க முடியாதபடி ஜாதி வேறுபாடு உள்ளது. உங்கள் கோபம் தணிந்த பிறகு உங்கள் முன்பு வருகிறோம் ஆசீர்வாதம் வேண்டி...'

இந்த ரகத்தில் ஒரு கடிதம்.

ஆம்பளைப் பையன் ஓடிப் போவதற்கு இவ்வளவு அலட்டல்கள் அதிகமோ என்று கூடத் தோன்றும். பாலாஜி யின் வீடு எங்கள் வீட்டுக்குத் தலைகீழ். இரண்டு பெண்கள். ஒரு அக்கா, ஒரு தங்கை. பாலாஜிக்கு மூத்தவளின் கல்யாணத்தில் நொடித்துப் போயிருக்கும் குடும்பம். கிட்டத்தட்ட ரிடையர் ஆகப் போகும் அப்பா, கல்யாண வயசில் அடுத்த பெண். பாலாஜிதான் எல்லோருடைய ஒரே நம்பிக்கை நட்சத்திரம். படிப்பு ரொம்பவே சுமார்தான் என்றாலும் வாய் சாமர்த்தியம் உள்ளவன் பிழைத்துக் கொள்வான் என்று நம்பப்படுபவன். அப்படிப்பட்டவன் இப்படிப்பட்ட காரியம் செய்தால் யாரால் ஜீரணிக்க முடியும்? பொறுப்பற்ற ராஸ்கல். பெற்றோரைத் தவிக்கவிட்டு வாழ்ந்த வன் உண்டோ?

அந்தப் பெண் யாராக இருக்கும் என்று கலந்துரை யாடல்களில் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏதோ ஓர் உந்துதலில் பாலாஜியின் அப்பா, மாமா, நான் மூவரும் பக்கத்து போலீஸ் ஸ்டேஷன் வரை போய்விட்டு மூக் குடையாக் குறையாகத் திரும்பி வந்தோம்.

ஹூம் எங்கே போயிருக்கிறானோ? யார் வீட்டுப் பெண்ணோ இப்போது அவள் வீடு எந்த லட்சணத்தில் உள்ளதோ?

இவ்வளவு தூரம் சுற்று வட்டாரத்தில் எல்லோருடனும் நெருங்கிப் பழகி இருக்கிறான். எவருக்கும் ஒரு சிறு பிடி கூடக் கிடைக்காத அளவு ரகசியம் காத்திருக்கிறான் என்றால் எவ்வளவு கிரிமினல் தன்மான மூளை இருக்க வேண்டும். பொல்லாதவன்!

பேருந்து நிறுத்தத்தில் தனியே நின்றிருந்தேன்.

முதல் பேருந்து வந்து நின்றது.

இரண்டு பேர் இறங்க, அந்த இருவரில் வேணி இல்லை.

பளிச்சென்று மூளையில் ஓடியது அந்தச் சிந்தனை.

பாலாஜியுடன் போயிருப்பது ஏன் வேணியாக இருக்கக் கூடாது?

கால் விரல் நுனியில் தொடங்கி உச்சிவரை ஒரே நேரத்தில் ஓர் உணர்வு சில்லென்று பரவ, இலேசாக உடல் நடுங்கத் தொடங்கியது. நிற்க முடியாமல் அப்படியே அங்கிருந்த கான்கிரீட் பெஞ்சில் உட்கார்ந்தேன்.

இப்படியும் இருக்குமோ? காலையில் இருந்து எல்லோரும் இவ்வளவு தூரம் குழம்பியிருக்கிறோம் இவளைப் பற்றி மட்டும் எண்ணிப் பார்க்காமல்... ஏன்? எப்போதும் தானுண்டு தன் வேலையுண்டு என்று வேணி அமைதியாக வலம் வந்து கொண்டிருந்ததாலோ?

பாலாஜி அவளுடன் சிரித்தபடி பேசிய காட்சிகள் மனத்தில் வந்து போயின. அடிக்கடி அவளைப் பற்றிப் புகழ்ந்து சொல்லியிருக்கிறான். வேணியை மகளாய்ப் பெற நீங்க கொடுத்து வச்சிருக்கணும் மாமா!

மாமா!

அடடா! நமக்குத்தான் தோன்றாமல் போய்விட்டது.

அவனுடைய கடித வாசகங்கள் ஞாபகம் வந்தன. அச்சு அசலாக எல்லாம் பொருந்துகிறது. கடைசியில் வேணி தான் அந்தப் பொண்ணா?

வேணியையும் பாலாஜியையும் தம்பதிகளாக அரு கருகே நிறுத்தி வைத்துப் பார்த்தேன். பொருத்தமான ஜோடிதான்.

அதற்காக ஓடிப் போயிருக்க வேண்டுமா?

வேறு வழி? இருவரில் யார் இந்தப் பேச்சை எடுத்திருந் தாலும் இரண்டு வீடுகளிலும் அநாவசிய பூகம்பங்கள்தான் வெடித்திருக்கும். இயலாமையை மறைக்கத்தானே பலருக்கும் முரட்டுக் கவசங்கள்?

அடுத்த பேருந்து வந்துபோக அதிலும் வேணி வரவில்லை. என் முகத்தில் புன்னகை விரிய ஆரம்பித்தது.

என் சந்தேகத்தை நானே வீட்டில் போய்ச் சொல்லி விடவா? வேண்டாம். ஒவ்வொருவரின் ரியாக்ஷனும் எப்படி இருக்கும் என்று அனுமானிக்க முடியவில்லை. நான் ஆரம்பிக்கப் போக, குடும்பங்களின் ஒற்றுமை ஏன் குலைய வேண்டும்?

யார் கண்டது, இதே சந்தேகம் மற்றவர்களில் கூட எவருக்கேனும் ஏற்பட்டிருக்கலாம். எனக்கு இப்போது தோன்றுவது போலவே நாம் ஏன் ஆரம்பிக்க வேண்டும் என்று அவர்களும் அமைதி பூண்டிருக்கலாம். முதல் ஆள் பேசத் தொடங்கிய பிறகு வெடித்துச் சிதறலாம் என்று காத்திருக்கலாம்.

நானோ என்னவளோ இவ்விஷயத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

பாலாஜி நல்ல பையன்தான். சிரித்த முகம், எந்தப் பிரச்சினைக்கும் கலங்காத தைரியசாலி. நல்ல பர்ஸனாலிட்டி. எப்படியும் முன்னேற வேண்டும் என்கிற ஊக்க சிந்தை.

நானே முயன்றால்கூட எங்கள் ஜாதியில் பாலாஜி அளவுக்குப் பொருத்தமான ஒரு பையனை வேணிக்குத் தேடுவது சாத்தியமில்லை என்று சொல்லிக் கொண்டேன்

இன்றோ நாளையோ வேணி பாலாஜியுடன் ஜோடியாக வந்து நிற்கலாம். முதலில் என் வீட்டிற்கு வருவார்களா, பாலாஜி வீட்டிற்குப் போவார்களா? அவன் வீட்டில் கடும் எதிர்ப்பு இருக்கிற பட்சத்தில் நான் ஆசீர்வாதம் தருவதா அல்லது நானும் சேர்ந்து எதிர்ப்பு காட்டுவதா?

பல காதல் கல்யாண விஷயங்களில் யார் முதலில் வரவேற்பது என்கிற பயத் தயக்கமும், தான் எல்லோராலும் கவனிக்கப்படுகிறோம் என்கிற அதீத கற்பனை ஏற்படுத்து கிற பதற்றமும்தானே பிரிவுகளுக்கே காரணமாக அமைந்து விடுகிறது.

இங்கே தொடக்கம் எப்படி அமையப் போகிறதோ?

கடைசிப் பேருந்திலும் வேணி வரவில்லை என்று நான் போய் நின்றவுடனேயே பிரச்சினை புதிய பரிமாணத்தை எடுக்கத் தொடங்கி விடுமே. பிள்ளைகள் வந்து நிற்கும் முன், பெரியவர்களே தம்மளவில் பேசி சமாதானமாகிக் கொண்டால் எவ்வளவு நல்லது? கடவுளே, விஷயத்தை நீதான் நல்லபடியாக முடித்துத் தர வேண்டும்.

கடைசிப் பேருந்து வந்து நின்றது.


வழக்கமான களைப்புடன் இறங்கினாள் வேணி, எப்போதும்போல் புன்னகை செய்தாள் "சாரிப்பா லேட்டா யிடுச்சு" என்றாள் சாதாரணமாக.

என் முகம் என் பிரயத்தனம் மீறி செத்துப் போவது எனக்கே தெரிந்தது.

"ஏம்ப்பா ஒரு மாதிரி இருக்கீங்க?"

"அந்த பொறுக்கிப்பயல் பாலாஜி எவளோ ஒரு தறு தலையோட ஓடிப் போயிட்டாம்மா. உருப்படுவானா அவன்?" என்று வெடித்தேன்.

*



Printed By : **BALAJI OFFSET PRINTERS.**
Chennai - 106. Ph: 4759094, 4751794.